# மண்டியிட்டேன் மதனா..!



## 1

கல்யாண களை கட்ட ஆரம்பிக்கும் வீடு ஒரு அழகு என்றால் நல்லபடி ஒரு திருமணத்தை நடத்தி முடித்த சுபகளைப்பில் கலைந்து கிடக்கும் வீடும் ஒரு அழகுதான்!

அதுவும் அது பெரியவர்கள் பார்த்து, ஜோடி சேர்த்து, நடத்திய திருமணம் அல்ல. காதல் கல்யாணம். தம்பதிகளின் பெற்றோரும் உற்றாரும் வந்து கலந்து கொண்டு வாழ்த்தியதோடு சரி. ஆனால் கிளம்பும் போது ஆளுக் கொரு புதுப் பாத்திரம் நிரம்ப தேன்குழலும், லட்டும், அதிரசமுமாய் தரப்பட, வியந்து,

''அட பாரப்பா... சிறுசுங்க சேர்ந்து எப்படி சம்பிரமமாய் நடத்திட்டாங்கன்னு...'' பாராட்டினார்கள்.

'29 வயசுப் பையனும் 25 வயசுப் பெண்ணும் தாங்களே பார்த்து, பழகி பண்ணிக்கறது சரிதான் - பெத்தவங்க நாம பதறித் தேட, எத்தனையோ விஷயங்கள் இடிக்கும். ஒரு மாதிரியா சமாளிச்சு மணவறை வந்த பிறகும் சம்பந்தி சண்டை நாறும்..' என்று தங்களையே தேற்றிக் கொண் டார்கள்.

''அதிலும் நாங்கண்ட ஒரு சம்பந்தி சண்டை போல அல்பமானதை யாரும் அனுபவிச்சிருக்க முடியாது..''

''ரயிலுக்குக் கிளம்ப இன்னும் அரைமணி நேரமிருக்கு. சொல்லுங்க. இந்தக் கல்யாணத்துல விறுவிறுன்னு ஒரு சண்டைக் காட்சியுமில்லியே - கேட்டுட்டாவது போவோம்.''

பையனைப் பெற்றவர் கேட்க, சம்பவம் சொல்லப் பட்டது.

''நடந்து எட்டு, பத்து வருஷமிருக்கும். காலைல ஒன்பதுக்கு முகூர்த்தம். சம்பந்தியம்மா காபிய குடிச்சிட்டு, புதுப்புடவை அலங்கார சமாச்சாரங்களை எல்லாம் எடுத்து தயாரா மேசையில வச்சிட்டு குளிக்கப் போயிருக்காங்க.''

''ஆமாமா புது மருமகளுக்கு ஈடா நிக்க வேணாமா?''

''பின்னே? ஆனா குளிச்சு, பட்டுச் சேலையச் சுத்தினவங்களுக்கு நெஞ்சடைச்சுப் போச்சு.. முக்கியமான அலங்காரப் பொருளைக் காணலை. அதில்லாம நான் வெளியே தலை நீட்ட முடியாதுன்னு ரகளை பண்றாங்க மாமியாரம்மா..''

''அடடே..''

''அதுக்கு ஈடாய் வேறு வாங்கித் தரோம்னா கேட்ப தாயில்ல - அது எனக்குன்னே தயாரானது - வேறேதும் சரி வராது என்ற எகிறல்!''



''அதென்னப்பா... அப்படியாப்பட்ட அதிசய அலங்கார சமாச்சாரம்?''

''சவுரியாம்! கழிஞ்ச தம்முடியைக் கொண்டே கட்டின ஒட்டு முடி! அதை அசல் முடியோடு பிணைஞ்சு கொண்டை யிட்டா அசல் போலிருக்குமாம் - லேசாய் நரையோடிய நெளி கேசத்தோடு. கறுகறுன்னு, ஸில்க்காட்டம் தொங்கற சவுரி தனியே தெரிஞ்சிருமில்லியா?''

''சரி சவுரி காணாமப் போன மர்மம் என்னவாம்?''

''ஒரு வாலுப் பயல், அதை எடுத்துட்டு வெளியே போக, நாய் அதைக் கவ்விக் குதறிடுச்சு!''

நின்று கதை கேட்ட அனைவருக்கும் சிரிப்புதான்.

கல்யாண தம்பதிகளோடு மஹதியும் சிரித்தாள்.

இப்படி சின்ன விஷயங்களை ஊதிப் பெரிதாக்குவதால் தான் அவர்களைப் பெரியவர்கள் என்கிறோமோ என்ற நினைப்போடு முறுவலித்தாள்!

இளையவர்கள் சேர்ந்து நடத்திய இவ்வைபவத்தில் அல்ப அமளிதுமளியெல்லாம் இல்லை. வறட்டு கௌரவ மும் டாம்பீகமுமில்லை.

எல்லாம் இனிமையும் எளிமையுந்தான்.

ஊரையே கூட்டாத அளவான அழைப்புகள், வாரி இறைபடாத சுவையான உணவு, திருமண நாளைத் தவிர வேறு எப்போதும் கட்ட முடியாத உடை, நகைகளுப் கூடயில்லை - நீட்டி முழக்கிய வாழ்த்துரை கிடையாது.

''அடடே... பாத்திரத்தில் தம்பதி, பெயரோடு கல்யாண தேதியும் பொறிச்சிருக்கறது நல்ல யோசனை..''

''எல்லாம் மஹதிதாம்மா - சின்ன விஷயத்தையும் பாசிச்சு அதை அலட்டிக்காமல் செய்தவ - மொத்த டையில் வாங்கினதால் சகாய விலை.''

''வாழ்க்கையும் இப்படி சகாயமாய் அமைச்சுக்கோங்க.. மா மஹதி உன் வீட்டுக்காரர்.''

''என்ன நீங்க - பார்த்தாலே தெரியலை - சின்னவதான் - ப சித்ராவோட படிச்சவளாம்.''

''உனக்கும் சீக்கிரமே இப்படி வாழ்வு அமையணும்மா.''

''மூணு மாசமேனும் அவகாசம் கொடுங்க மஹதி - துக்குள்ளே எங்க தேனிலவை முடிச்சுக்கறோம்... பிறகு க கல்யாண வேலையைப் பார்க்க வசதி...'' - ப்பிள்ளை வழிய மற்றவர்கள் கூச்சத்துடன் சிரித்தனர்.

'வேலை பார்க்கறாளாம் - அதான் இப்படி கச்சிதமாய் ப்யத் தெரியுது..''

'எங்கேம்மா மஹதி?''

'மதன் ஷர்ட்ஸ் கேள்விப்பட்டிருக்கீங்களா..''

'விளம்பரம் பேப்பர், டி.வி.யில வருதே.''

'ஆமா.. அதன் விளம்பர விற்பனைப் பிரிவில் வியாளராய் இருக்கேன்.''

'பின்னே - செய்நேர்த்திக்கு கேட்கணுமா?''

நிறைவுடன் அனைவரும் புறப்பட மஹதியும் கிளம்பி ர் - பின்னே இனியும் தாமதித்தால் பூஜையறை கரடியாகி வாளே -

சரி சித்ரா, வாழ்த்துகள் - நாளை பார்க்கலாம்.''

என்னடி அவசரம்?''



''அவசரம் எனக்கில்லை...''

''இவரைச் சொல்றியா? பொறுக்கட்டும். முதல்ல உனக்கு மனசார நன்றி சொல்லணும் - பிறகு இந்த அலங்கோலத்தை எல்லாம் நேராக்கிட்டு...''

விரலால் கலைந்திருந்த வீட்டைக் காட்டினாள்.

மாப்பிள்ளை பதறினார் -

''இதுக்கென்ன அவசரம் சித்து? ஒதுங்க வச்சு நீ ஓய்ஞ்சிடாதே..'' மஹதி முறுவலித்தாள் -

அந்த பதட்டம் வேடிக்கையாயிருந்தாலும் மனதுக்கு இதமாயுமிருந்தது.

எத்தனை நேசமிருந்தால் மனுஷர் இப்படி தவிப்பார் என்ற இதம்! ''தோ பார் சித்ரா - இதுக்குத்தான் பெரியவங்க இருக்கணுங்கறது'' என்றபடி தோழியை சற்று ஒதுக்கி கூட்டிப் போனவள் ''ரொம்ப அலட்டிக்காதே... நாளைக்கு நானும் வந்து சுத்தம் செய்ய உதவறேன். வீடு இப்படி தாம்பாளமும், பூக்குவியலும் பட்டுமாய் கிடக்கறது கூட அம்சமாத்தானே இருக்குது. முதல்ல நீ குளி...''

''ம்ம்... உன் உதவிகளுக்கு எல்லாம்...''

இப்போது மாப்பிள்ளையும் சேர்ந்து கொண்டார் -

''ஆமாமா எங்க வீட்டுப் பெரியவங்க முதலில் சேதியைக் கேட்டு முதல்ல திகைச்சு... பிறகு முறுக்கியபடி யோசித்த சமயமே நீங்க கல்யாண காரியங்களை ஆரம்பிச்சுட்டீங்க. அவங்க இளகி வந்த சமயம் கல்யாணத்தை நடத்தி, அவங்க வாயால் பாராட்டும் வாங்கியாச்சே...''



''எல்லாம் கடவுளின் கிருபை.. நாளை பார்ப்போம்.''

வாசல்வரை வந்த மணப்பெண்ணிடம் கிசுகிசுத்தாள்.

''கடைசியாய் நாம வாங்கின பிங்க் ஷிபானைக் ட்டிக்கோ.. அப்படியே பொத்துனு போய் படுக்காதே.''

''சரி அக்கா.''

''ராத்திரி பாலும் பழமும் வைக்க சொல்லியிருக்கேன் க்கத்து விட்டு சரோம்மாகிட்ட. ஒரு ஜெபம் பண்ணிட்டு... றகு.''

''சரிங்க பாட்டி..''

கேலியோடு முகம் சிவந்தாள் சித்ரா.

''வரேன் - கல்யாண வீட்டு வத்தல் குழம்பு, அவியல் டுத்துகிட்டேன். சாதம் வடிச்சுட்டா மித்ரன் வந்ததும் ப்பிட்டுடலாம்.''

''அவருக்கும் என் நன்றியை தெரிவி, மஹதி... அழைப் தழ் அனுப்பி உதவிய உன் அண்ணாதான் இப்ப ல்லாரையும் வழியனுப்பவும் போயிருக்கார்... பெரிய தவி.''

''இதெல்லாம் பழகட்டும்.. இல்லைன்னா மூத்தவனான த்ரனை எல்லாரும் எனக்குத் தம்பின்னே நினைச்சுடு ங்க.. நான் நேரத்துக்கு வீடு திரும்பலைன்னா அழற ட்டித் தம்பின்னு..''

''ரொம்ப அலட்டிக்காமல்... கிளம்பு..'' சிநேகிதியின் நற்றியில் முத்தமிட்டு விடை தந்தாள் மணப்பெண்.





## 2

''மதியம் கல்யாண பந்தியில் சாப்பிட்டதை விட குழம்பு இப்ப கூடுதலாய் ருசிக்குது.''

மூக்குக் கண்ணாடியை கழட்டி வைத்துவிட்டு மும்முரமாய் சாப்பிட்டுக் கொண்டிருந்த மித்ரன் சொல்ல,

''சுட வைக்கும்போது நெய் சேர்த்தேன்'' விளக்கினாள் தங்கை.

''தண்ணீர் பாட்டில், மலை வாழைப்பழம் எல்லாம் நீ சொன்னபடி வாங்கித் தந்துதான் அந்த கும்பலை ரெயி லேத்தினேன்.''

ஒரு தாயின் பெருமிதத்தோடு தன் தமையனைப் பார்த்திருந்தாள் மஹதி.

''கல்யாணம்னால் நிறைய வேலை, எக்கச்சக்க செல வில்லையா?''

''ம்ம்..''

கைகழுவினவன் முகத்தில் கவலையான யோசனை.

''இனி கொஞ்சம் கவனமாய் நாமும் காசைச் சேர்க்கணும் மஹதி.''

''சரி - பெரிய மனுஷரே.''

அண்ணன் தங்கைக்கு இடையே 15 மாத இடைவெளி தான்.

''மித்ரனின் முதல் பிறந்த நாளின்போது நீ என் வயிற்றுல''
ன்று அம்மா சொல்லியதுண்டு.

பெண்ணான இவள் பீர்க்கை போல வளர்ந்துவிட மித்ரன்
வளுக்குத் தம்பி போல தெரிந்தான். மனமுதிர்வும் ஆணுக்கு
மதுவாகவே வாய்க்கிறது. ஆக இவளே மூத்தவள் என
ருதும்படி இருக்கும் அண்ணனின் மீது மஹதியின் கறாரும்
ண்டிப்பும்!

''நீ ரெண்டு நாளாய் வீட்டுப் பாடம் எழுதலியாமே
த்ரா?''

''யாரு சோமுவோட தங்கை வத்தி வச்சாளா?''

''உள்ளதைச் சொன்னா - இனி அவன் எழுதினதை
ல்லாம் சரி பார்த்து அனுப்புங்கம்மா,'' என்று சட்டம் போடு
ாள்.

''அதென்ன, சதா உனக்கும் அருணுக்கும் சண்டை
ருதாம்? அவன் பெரிய இடத்துப் பிள்ளை - பகை
துக்கு? ஒதுங்கிடு'' என்று அறிவுறுத்துவாள் -

''அம்மா ப்ரோட்டினிக்ஸ் பிஸ்கட் வாங்கி மித்ரனுக்கு
காடு - வளர்ற வயசுல போதிய புரதம் சேரணும். எப்பவும்
ந்தம்பி போலவே தோணக் கூடாதில்லை?'' - கரிசனை
ாட்டுவாள்.

ஆனால் 18 வயது வரை,

'போடீ நீயும் உன் பிரசங்கமும்' என்று அலட்சியப்
டுத்தியவன் பிறகு சுருண்டு இவளது அன்புக்குள் அடைக்
லமானான்.

ஒரு விபத்தில் பெற்றோர்களை ஒருசேர இவர்கள்
இழந்ததுதான் காரணம்.



அந்த இழப்பின் அதிர்ச்சியை அவனால் தாள முடிய
வில்லை. வந்தவர்கள் எல்லாரும் 'மூத்தவன் நீ - இனி
பொறுப்பாய் இருக்கணும்ப்பா' என்று அறிவுறுத்த கலவர
மானான்.

பொறுப்புகளை சுமக்கத் தயாராகாத மனசு.

தங்கையை விட உயர்ந்து, வாட்ட சாட்டமாக இருந்
தாலும் மனதளவில் கோழைப் பிள்ளைதான்.

ஆக மஹதி பொறுப்பேற்றுக் கொண்டாள்.

அவர்கள் இருவருமாய் தனித்திருக்க வேண்டுமென்று
முடிவெடுத்ததும் அவள்தான் -

''ஐயோ... ஊரில் ஒத்துக்க மாட்டாங்க - கண்டபடி பேசு
வாங்களே?''

''நாம கவனமாய் நடந்துக்குவோம் மித்ரன் - பிரபாகர்
மாமா வீட்டு பக்கத்துல தோதாய் ஒரு ஃபிளாட் இருக்கு -
முதல் மாடியில நல்ல போர்ஷன் வாடகைக்கு கிடைக்குமாம்.
எதிர்ப் பகுதியில் ஒரு வயசான தம்பதிகள் - பிரச்சனை
யில்லை... தவிர பாதுகாப்பு - ஆடிட்டர் சாரிட்டேயும்
பேசினோமே.. ஊரை விட்டு ஒதுங்கினாப்பல இருக்க நம்ப
வீடு நல்ல விலைக்குப் போகும் என்கிறார் - இன்ஷுரன்ஸ்
கிராஷுவிட்டு எல்லாங் கொண்டு சமாளிச்சுடலாம்.''

வாய் திறந்து கேட்டிருந்தான்.

இளையவர்கள் தனித்திருந்தது பற்றி முதலில் வாயை
மென்ற ஊர், பின் புருவம் உயர்த்தி சிலாகித்தது!

''பரவால்லியே - துணிச்சலா நின்னுடுச்சுங்க. உறவுக்
காரங்களோட தங்குனா முதல்ல ஆதரவும் அனுதாபமும்
கிடைக்கும்... ஆனா பின்ன பின்னே பேச்சு, பிரச்சனைன்னு

ந்தானே...? முக்கியமா பண விஷயத்துல? காசு இருந் லும் தொல்லை அது இல்லைன்னாலும் சிரமந்தானே? தத்துவம் பேசி அடங்கியது.

மித்ரனுக்கு படிப்பு ஏறவில்லை -

மின் சாதனங்களை அவன் பிரித்துப் போட்டுக் குடைந்த ன அது சம்பந்தமாகவே படிக்கச் செய்து, பிரபாகர் மாமா ம் ஒரு வேலையில் சேர்க்கவும் வைத்தாள். ஆனால் ஒரே ஷத்தில் அங்கிருந்து கழண்டு கொண்டவன் 'மதன்' வனத்தில் வேலைக்கு சேர்ந்து கை நிரம்ப சம்பாதித்ததில் ளுக்கு மன நிறைவுதான். ஒரேயடியாக அண்ணன் தன் லில் அண்டாமல் சுயமாய் முடிவெடுத்ததில் திருப்தி.

ங்கை மஹதவள, மனவியலில் உயர் படிப்பை முடித் மே வேலைக்கான உத்தரவுடன் வந்து விட்டான் ணன்காரன்!

'எங்க நிறுவனத்திலேயே உனக்கும் வேலை தயார் தி.. நீ எப்போ படிச்சு முடிப்பேன்னே இந்த வேலை திருந்ததுன்னு வையேன்.''

ண்ட வெள்ளை காகித உறையை சவடாலாய் டினான். மஹதிக்கு நம்ப முடியவில்லை.

என்னை நேரே பார்க்காமலேயேவா?''

'ஐயா வேலையைப் பார்த்தாச்சுல்ல? முதலாளியே யெழுத்திட்ட உத்தரவு இது.''

அவருக்கு வயசு போதான்னு தெரியும்...''

இவள் முடிப்பதற்குள் அவன் குறுக்கிட்டான்.



''அதனாலதான் எங்களுக்குள்ளே ஒத்துப் போகுது - காலை பத்துக்கு சரியாய் பதிவேட்டில் கையெழுத்தைப் போடு - மாலை ஐந்து மணி வரை நாற்காலியைத் தேய் -ஒரு காபி குடிக்க இருபது நிமிஷமா என்ற அதட்டலெல்லாம் அவரிடம் கிடையாது. இன்னைக்கான வேலையை முடிச் சியா - அடுத்த வாரம், மாசத்துக்கான திட்டம் என்ன - அவ்வளவு தான். தவிர...''

''தங்கைகளுக்கும் வேலை தர்றார்.''

''பை நிறைய சம்பளம் தருகிறாரும்மா - உனக்கு எவ்வள வுங்கறே? அஞ்சு இலக்கத்துல சம்பளம் - இந்த கௌரவத் தோடு தேவையான சுதந்திரமும்...''

''போதும்ண்ணா - நான் வேலையை ஏத்துக்கறேன்.'' என் றவள் வேலையில் சேர்ந்து ஏழு மாதங்களாகிப் போயின.

ஆண்களுக்கான நவீன ஆயத்த சட்டைகளை வித விதமாய் உற்பத்தி செய்த 'மதன் ஷர்ட்ஸ்' அதை வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ததால் கணிசமான லாபம். விற்பனை, விளம்பரத் துறையின் தலைமைப் பொறுப்பி லிருந்த ஜெகனின் கீழே சேர்ந்தாள் மஹதி.

கலகலவென்று பழகியவன், வேலையையும் எளிதாய் புதியவளுக்குப் புரிய வைத்தான். புரிந்து பணி புரிந்த வளைப் பாராட்டித் தள்ளினான். ஆனாலும் மஹதி அவனை எட்டவே நிறுத்தியிருந்தாள் - நெற்றியில் ஒரு சுருக்கமும், தோள்களில் இறுக்கமும் சதா வைத்துக் கொண்டதின் காரணம் அவனது பட்டப் பெயர்தான்.

''நூத்துக் கணக்கில் பேருங்க இருக்குப்பா - ஆனாலும் பிள்ளைக்கு எவ்வளவு கச்சிதமாய் பெயரிட்டிருக்காங்க பார் அவங்கம்மா...''

மதிய உணவிற்கான நேரத்தில் உடன் பணிபுரியும் ராதா வியக்க, இவளும் ஆவலாகவே கேட்டாள்.

''அப்படியென்ன பொருத்தம்?''

''நாம பட்டப் பெயராய் இதுதான் வைப்போம்னு முன்னமே புரிஞ்சு அதற்கு தோதாய் வச்சிட்டாங்கல்ல?''

''பளிச்சுனு உடுத்தி கலகலப்பாய் பேசிப் பழகறார் - ஆக ஜெகன்மோகனன்'னு பட்டப்பேர் வச்சிட்டீங்களா?''

''ஆசாமி இன்னும் தன் கைவரிசையை உன்னிடம் காட்டலை போல?''

கண் சிமிட்டினாள் ராதா.

''வேலை சுலபம்தான். அதை.''

''ஆளு எப்படிங்கறேன்.''

''தெரியலை - வேலைக்கு சேர்ந்து ஒரு வாரந்தானே ஆச்சு.''

''அதிலும் நீ ரொம்ப அழகு...''

''நன்றி... ஆனா இதுக்கும் வேலைக்கும்..''

அதற்குள் ஒய்வறையில் நுழைந்த மற்றொருத்தி விஷயத்தைப் போட்டு உடைத்தாள் -

''என்ன ஜொள்ளு ஜெகனைப் பற்றிப் புகாரா? பாவம்.. இவ்வளவு அழகான பெண்ணை அவன் பிரிவுல விட்டதுமே நினைச்சோம். ஐயா ஜொள்ளு விட்டே இவளைக் கரைச்சிடுவான்னு..''

''அப்படித் தெரியலியே... அப்படீன்னா ஐயா பெரிய திட்டம் போட்டிருக்கார் போல... மஹதியை மனைவியாக்கலாம்னு வாலை சுருட்டி மறைச்சு வச்சிட்டார் போல..''



பெண்கள் சிரிக்க, மஹதி ஒரு பெருமூச்சுடன் அவர்களைப் பார்த்திருந்தாள்.



## 3

''**யா**ரைப் பற்றி கேட்கறே? மிஸ்டர் மோகனையா?''

ஆவி பறந்த காபியைப் பருகியபடி வினவினாள் ராதா. காபியின் சூட்டில் மூக்கு வியர்த்திருந்தது.

''ம்ம்.. அவர்தானே நம்ப முதலாளி.''

''முப்பதுக்குள்ளே முதலாளி ஆயாச்சு... அதுவும் தாத்தா, அப்பா உருவாக்கித் தந்த வியாபாரமில்லை - உழைச்சு, சிந்திச்சு முன்னேறினவர் - ஆக ஆள் எப்படின்னு யூகம் பண்ணினேன்.''

மஹதியின் கேள்விகள் யோசனையில் மிதந்தன -

''கடின உழைப்பாளியாய் இருக்கணும் - ஆனா பார்க்க அப்படித் தெரியலை.''

''எப்படித் தெரியறார்?''

''ஓரிரு முறைதான் பார்த்தேன் - நாசுக்கான பேச்சு, நாகரீகமான உடை.. இது ரொம்ப சுலபமான வேலைங்கறது போல இயல்பாய் தெரிந்தார்.''

''ஆங்... அதுதான் அவரது வெற்றியின் ரகசியம்.. பேயாய் உழைச்சாலும் மோகனமாய் தெரிவார். அவருக்குப் பொருத்தமான பெயர்தான் - மதனமோகன்.''

''அவர் குடும்பம்?''

''அப்பாவை இளம் வயசில் இழந்ததால்தான் இவர் சீக்கிரமே உழைக்க ஆரம்பிச்சது. ரெண்டு அக்காமார் - கல்யாணமாயாச்சு.. அம்மா வீட்டுக் காரியங்களை, அக்காமார் பிரசவங்களை, பேரப்பிள்ளைகளைச் சீராட்டறதில் பிஸி. ஆக ஸார் தனிக்காட்டு ராஜா.''

ராதா கண் சிமிட்டினாள் -

அதற்கென்ன அர்த்தம் என்று யோசித்திருந்தாள் மஹதி.

முப்பது வயது வரை பிரம்மசாரிகளாய் இருக்க நேர்வது இன்றைய இளைஞர்களுக்கான அநியாயந்தான்! ஒரு பெண்ணின் துணையுடன் இனிப்பாய் முன்னேற வேண்டிய அவர்களது இளமை, இயந்திரமான வேலை, வசதிகளைச் சேர்ப்பதில் பிழிபட்டு போகிறது - பின் அவசரமாய் ஒரு பெண்ணைத் தேடி, திருமணம், பின் பிள்ளைகள் தொடர, வாழ்வு வேறு வித இயந்திர சுழற்சியில்...

அதுவரையில் ஆளுமையும், வெற்றியின் கம்பீரமும், பணத்தின் கவர்ச்சியும் சேர்ந்த மதன் சும்மா இருப்பானா? தனிக்காட்டு ராஜாவாய் சுற்றுகிறார் போலும்.. இங்குள்ள பெண்களைக் கைவைக்கா விட்டால் சரி!

''என்ன யோசனை?''

''நீ எச்சரித்ததால் ஜெகனிடம் கவனமாய் இருந்துக்கறேன் பிரச்சினையில்லை - மற்றபடி இங்கே வேலை கிடைத்தது அதிர்ஷ்டம்தான்.. முதலாளி எப்படியிருந்தால் நமக்கு என்ன?''

வேலையில் மஹதி காட்டிய ஈடுபாடும், புத்திசாலித்தனமும் ஜெகனை மலைக்கச் செய்தன. மரியாதையாகவே பழகினான் -



''கல்யாண திட்டத்தில் இருக்கிறான் போலும்'' என்ற ராதாவின் கேலி அவ்வப்போது ஞாபகத்தில் எழும்பும்.

இவளுக்கு 22 வயது - பெற்றோர் இருந்திருந்தால் வரன் தேடல் ஆரம்பித்திருக்கலாம் - சிலர் விரும்பி வந்திருக்கவும் கூடும்.

நடுத்தர உயரமும் கொடியுடலுமாய் இருக்கும் மஹதி பார்வைக்கு குளிர்ச்சியானவள்தான் - அதிலும் செதுக்கினது போல அவளது முகமும் பேசும் பாங்கும் தனிக் கவர்ச்சியுடையவை. பெற்றோரின் பாதுகாவல் இல்லாததால் வெகு கவனத்துடன் இருக்கும் இவளது அலங்காரம் -

சற்றும் பகட்டில்லாத எளிமையுடன்..

புருவங்களும் கண் இமைகள் அடர்த்தியானவை என்பதால் மை எழுதும் தேவையில்லை. பட்டு சருமத்தை உயர்ரக க்ரீம் பூசி பராமரித்துக் கொண்டாள் - சதைப் பற்றான உதடுகள் இளம் ரோஜா நிறத்தில் வேறு இருந்ததால் அவற்றுக்கான பூச்சிற்காய் அவள் கடைகளில் அலைந்ததில்லை. இதமான நிறங்களையே உடுத்தினாள் - அதிலும் ஜரிகைப் புடவை அவளது அலமாரியில் ஒன்று கூட இல்லை.

சமீபத்தில் சித்ராவின் கல்யாணத்தின் போதுதான் பட்டு கட்டினாள் -

அதிலும் அது பரிசாய் வந்தது.

அட்டைப் பெட்டியைத் திறந்த சித்ரா கேட்டாள் -

''சேலை எப்படி?''

''அசத்தல் - பொன்வண்டு நிறப் பட்டில் நளினமான ஜரிகை வேலை - அடடே... முந்தானை முழுக்க வைரம்

போல க்ரிஸ்டல்! இதில் நீ மின்னல் கொடி போலிருப்பே சித்ரா...''

''சேலை உனக்குத்தான் - என் கல்யாணப் பரிசு..''

''நான் இப்படியெல்லாம் கட்டறதில்லையே...''

''பரிசுகளைக் குறை சொல்வது அநாகரீகம் மஹதி...'' செல்லமாய் மிரட்டினாள்.

''உனக்குப் பணத் தேவையான சமயமிது... நிறைய செலவு...''

''அதுக்காக கடன்காரியாய் கல்யாணம் பண்ணிக்கலாமா? அதான் ஒன்றரை வருஷம் முன்னே நான் உன்னிடம் வாங்கிய இருபதாயிரத்தை இப்ப திருப்பித் தரேன்.''

இவள் கையில் கவர் தரப்பட்டது.

''என்ன அவசரம் சித்ரா... வீட்டுக்கு முன்பணம் கொடுத் திருக்கே.''

''அதற்கு அப்பா காசு தந்தார்... முதல்ல வேற்று ஜாதியா ஹா ஹுன்னவர், இப்போ பையன் நல்லவராய் தெரியறார் - உன்னை விட இரட்டிப்பு சம்பளம் - உனக்கு ஈடும் ஜோடுமான அழகுன்னு வழிக்கு வந்தாச்சே?''

''சந்தோஷம் சித்ரா... கல்யாண வேலையும் அவங்க செய்யணும்னு விரும்புவாங்களோ?''

''அந்தக் காலத்துல விவரமறியாத வயசுல தம்பதியாயிடு வாங்க - ஆக பொறுப்பு அத்தனையும் பெரியவங்களைச் சேர்ந்தது - நாமிருக்கறது சூட்டிகையான பருவம்... அதுக் கான ஆட்களும் இருக்கறதால் நாமே செய்றதுதான் நல்லது.''

''ம்ம்... நன்றி சித்ரா... ஆனா இதற்கான பணத்தை நீ கழிச்சிடு.''



''நீ இதற்கும் மேலே பெறுவாய் மஹதி... என் நட்பைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் கொடேன்... தவிர கடனை வட்டி யோட திருப்பறதுதான் முறை.''

''எனக்கிப்போ உடனடி தேவை ஏதுமில்லை... பேங்கில் நிறைய பணமிருக்குன்னு இல்லை... எல்லாந்தான் இந்த ஃப்ளாட் வாங்கவும், அதற்கான வசதிகளை செய்யவும் சரியாயிடுச்சே. ஆனாலும் இப்ப ரெண்டு பேரும் - நானும் அண்ணாவும் சம்பாதிக்கறோம்... ஆக செலவில்லை.''

''ஒரு பொண்ணு பேசற பேச்சா இது? பள்ளியில் படிக்கறப்போ உங்காதுல இதே வளையந்தான் - அதே செயின், வளையல் - முதல்ல மாற்று..''

''உங்கல்யாணத்தப்ப அம்மாவோட அட்டியலைட் போட்டுக்கிறேன்.''

''இப்ப போட்டிருக்கறதையும் மாத்துப்பா - இதையெல் லாம் விற்று, இந்தப் பணத்தையும் போட்டு, பளிச்சுன்னு புதுசா வாங்கு.''

''அப்படி நான் யோசிச்சதேயில்லை...''

''வேணாம் - செய்வோம் வா.'' பரிச்சயமான நகை கடைக்கு சித்ரா தோழியை இழுத்துப் போனாள்.

வைரமும், மரகதமும், முத்துமாய் ரகரகமாய் கண்ணா அலமாரிகளில் மின்னியதை மஹதி பிரமித்துப் பார்த்தாள்

இரண்டு மணி நேரங் கழித்து அவர்கள் அக்கடையை விட்டபோது மஹதியின் காதில் நட்சத்திர வடிவ வைரங்க ஜொலித்தன. உள்ளங்கழுத்தில் நுண்ணிய வேலைப்பாடுள் சன்ன சங்கிலி - வலது கையில் கங்கண மாடல் வளையல் இடது விரலில் மறுபடி வைர மினுங்கல்.

''இப்ப ஆள் மேலும் அந்தஸ்தாய் தெரியுறே.''

''எனக்கே அப்படித்தான் தோணுது - வா ஒரு பந்தா உணவகத்திற்கு போய் சாப்பிடலாம்.''

தோழியின் திருமணம் மஹதிக்கு ஒரு சிறந்த மாற்றமாய் அமைந்தது. வேலையில் சேர்ந்த ஏழு மாதங்களில் விடுமுறையே எடுக்காதவள் என்பதால் அவள் கேட்ட ஒரு வார விடுப்பு உடனே கிடைத்தது. மணப்பெண்ணிற்குத் துணையாய் அழகு நிலையம் போனதால் அந்த ஒரு வாரத்தில் இவளுக்கும் மெருகேறியது...

அத்தனையையும் ஆழ்ந்து அனுபவித்தாள்...

அந்தக் குதூகலக் குமிழ் மறுவாரம் உடைந்து போகப் போவது தெரியாமல்...



## 4

**"ஏ**ன் மஹதி... கல்யாணத்திற்கு போய் வர்றவங்களுக்குக் கூட கல்யாண களை ஒட்டிக்குமோ?''

மித்ரன் கேட்க பூரிப்பாய் சிரித்தாள் தங்கை.

''நல்ல மாற்றம்னு நினைக்கறேன் - தவிர வைரமெல்லாம் போட்டிருக்கேன் - அதன் மினுமினுப்பு வேறு...'' என்றவள் புது நகைகளை வாங்கினது பற்றிய விவரங்களைச் சகோதரனிடத்தில் சொன்னாள்.



''முதலில் யோசிச்சேன் மித்ரா... நம்ப வங்கிக் கணக்கில் இப்போ அதிகப் பணமில்லை... படிப்பு, வீடு வாங்கினதுன்னு எல்லாம் அவசியமான செலவுன்னாலும் கூட... இப்போ நாம ரெண்டு பேருமே சம்பாதிக்கறோம்... வாடகைச் செல வில்லை... தவிர இதுவும் ஒரு வகை சேமிப்புதானே... அதான்.''

''ம்ம்...''

''வாங்கியிருக்கக் கூடாதோ? யோசிக்கறியே?''

''இல்ல... இது வேற விஷயம்.''

''சொல்லு.'' - வரவேற்பறையை துடைத்து அழகு படுத்திக் கொண்டிருந்தவள் வேலையைத் தொடர்ந்தபடி கேட்டாள். தோழியின் திருமண விஷயமாய் கடந்த மாதம் முழுக்க அலைந்ததில் வீடு சற்று கலைந்திருந்தது - வீடு பளிச்சென இருந்ததால் தான் உழைத்து வீடு திரும்பு பவர்களுக்கு புத்துணர்வு மீளும் என்று நினைப்பவள் அவள்.

''கொஞ்சம் ஆபீஸ் வரை போய் வர்றியா மஹதி?''

''ம்ம்... என்ன - எப்போ?''

''இப்பதான்.''

அவனை விநோதமாய் பார்த்தபடி தெளிவாய் சொன்னாள் -

''இன்னைக்கு சனிக்கிழமை - அதுவும் இருட்டப் போற நேரம் - நம்ப ஆபீஸ் மூடியிருக்கும்ப்பா.''

''வாச் மேன் இருப்பான் - அவன்கிட்ட ஆபீஸ் சாவி இருக்கும்.'' துடைக்கக் கையிலிருந்த துண்டுடன் நாற்காலி யில் அமர்ந்து எதிரே இருந்தவனை ஊன்றிப் பார்த்தாள்.

அவன் தன் முகக் களையை கவனித்தது போல தான் அண்ணன் முகத்தின் களைப்பை ஏன் கவனிக்கவில்லை?



முகம் மிக வாடியிருந்தது -

தங்கைக்குள் குற்ற உணர்வு குத்தியது -

''சரி... போய்?''

''அக்கௌண்ட்ஸ் பகுதிக்குப் போ - இந்த வருஷ கணக்கு வழக்கெல்லாம் கம்ப்யூட்டரில் இருக்கும் - எம்.எஸ். II என்ற பெயரிலிருக்கும் ஃபிளாப்பி எனக்குத் தேவைப்படுது.''

இவளது நெற்றி சுருங்கியது.

''என்ன மித்ரா... யாருமில்லாத நேரமாய் அங்கே போய் குடையறது... சரியில்லையே... அப்படி என்ன அவசரம்... தவிர நான் அங்கே எப்படிப் போக... அதாவது அந்த அறையுள் எப்படி நுழைய?''

''அதன் சாவியை நடேசன் ஸார் உன்னிடம் தந்ததை மறந்துட்டியா?''

அவன் குரல் வறட்சியாய் நினைவூட்டியது.

''அ... ஆமாம்...''

சித்ராவின் கல்யாணத்திற்காய் ஒரு வார விடுப்பை வேண் டியவள், போகும் முன் அலுவலக வேலைகளை இழுத்து போட்டு முடித்துக் கொண்டிருந்த அவசரத்தில் கணக்கு வழக்குப் பிரிவின் நடேசன் இவளிடம் அந்த சாவியைத் தந்தது மறந்துதான் போயிருந்தது.

''என்னிடம் ஏன் ஸார் இதைத் தர்றீங்க'' எனக் கேட்கவும் செய்தாள் -

''தவிர நான் ஒரு வாரம் லீவ்.''

''தெரியும்மா... ஒன்றுக்கு ரெண்டு பேராய் நீயும் மித்ரனும் இருக்கிறதால் எப்போதும் வாங்கிக்கலாம்னுதான் உன்னிடம் தந்து வைக்கிறேன்.''



அப்பதிலில் சமாதானமாகி அதை வாங்கிப் பையு போட்டவள் மறந்தே போயிருந்தாள் - தன் கைப்பையை திறந்து உட்புறத்தில் மறைத்து வைத்திருந்த சாவின எடுத்தாள் -

''ச்சே இதை வீட்டில் பத்திரமாய் வைக்காமல்... கல்யா சந்தடியில் காணாமல் போயிருந்தால்...? ரொம்பக் கவ குறைவாய் இருந்திருக்கேன்.''

''ம்ம்... போய் எடுத்திட்டு வர்றியா?''

''இப்ப அதுக்கென்ன உடனடி தேவை மித்ரா?''

''அது இருந்தால் இந்த சனி, ஞாயிறு ஒரு முக்கியமா வேலையை முடிக்கலாம்.''

''உன்னது மின் சாதனங்கள் சம்பந்தப்பட்டதாச்சே?''

''அதற்கான பொருட்களை ரெண்டு, மூணு இட களிலிருந்து வாங்கணும்.. எங்கே விலை சகாயம்னு தெரி சால் திங்கட்கிழமையே வாங்கிடலாம்... வேலை நிற்காம தொடரும்.''

''எனக்குப் பழக்கமில்லாத வேலை... இடம்..'' இவ தயங்க அவன் மேலும் விவரமாய் விளக்கினான்.

''அப்போ நீயே போயேன்'' என்று அவள் நுனி நாக்குவ சொல்லவந்து நின்றது. ஆனால் அவனது சோர்ந்த முகத்தை பார்த்தவள் அடக்கியபடி முகம் கழுவப் போனாள் -

ஆனாலும் தலையைச் சீவும் போது உள்ளே நெருடிய

மித்ரனின் முகம் சரியில்லை... அவன் செய்ய வேண்டு வேலையும் முறையற்றதுதானோ?

கடந்த சில மாதங்களாய் மிக சுவாரஸ்யமாய் வேல யில் மூழ்கியிருந்த இவள் - இதுவரை ஏட்டில் பார்த்த சுவ காயை சுவைக்கக் கிடைத்த அனுபவத்தை மிக ரசித்தாள்

முதல் இரு மாதங்களிலேயே வேலை அவளுக்கு வசப்பட்டு விட்டது. பிறர் எச்சரித்த அளவிற்கு ஜெகன் இவளைத் தொல்லைப் பண்ணாததும் நிஜம்.

கல்லூரி நாட்களில் பேராசிரியை சொன்ன கதை ஒன்று மஹதிக்கு மறக்கவேயில்லை.

'நம் மனதில் இரண்டு ஓநாய்கள் இருக்கின்றன' - என்ற குரு சிஷ்யனுக்கு மேலும் விளக்கினாராம் -

''ஒரு ஓநாய் நல்லது - அன்பு, இரக்கம் பொறுமையோடு அமைதியானது. மற்றொன்று மோசமான ஓநாய், - அதற்கு தெரிந்ததெல்லாம் பொறாமை, கோபம், வன்மம், பெருமை தான்.''

சீடன் சுவாரஸ்யமானான் -

''இரண்டிற்கும் ஒத்துப் போகாதே குருஜி?''

''சதா மோதல்தான்.''

''எது ஜெயிக்கும்?''

''எந்த ஓநாயிற்கு நீ சிறு வயதிலிருந்து உணவு தந்து வளர்த்து விடுகிறாயோ அதுவே பலசாலியாகி மற்றதை ஜெயிக்கும். நீ வளர்ப்பதில்தான் இருக்கிறது'' என்றார்.

தன் மனம் மட்டுமல்ல, பிறர் நம்மை அணுகுவதும் நம் நடத்தையின்படிதான் என்று நம்புபவள் மஹதி.

இவள் அவசியத்திற்கு மட்டுமே பேசி தன் வேலையைச் சிறப்பாய் செய்ய ஜெகன் மனமாரப் பாராட்டினான் -

'பிரமாதம் மஹதி - முதலிடத்தில் இருக்கும் சிட்டியின் ஜவுளிக் கடையிலிருந்து 500 சட்டைகள் தேவையென ஆர்டர் வந்திருக்குது. 'நானே போய் பேசறேன்'னு நீ



கிளம்பினப்போ அது வீண் வேலைன்னு நினைச்சேன் - இனி உள்ளூர் விற்பனையும் கூடும்...''

''என்னதான் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்றோம் னாலும், நம்மூரில் நம் சரக்கு விலை போனாதானே பெருமை, பெயர் எல்லாம்... அதான் ஒரு முயற்சி.''

''அப்புறம் பழைய ஸ்டாக் சட்டைகளை நாமே ஒரு விற்பனை நடத்தி - 20 - 40% தள்ளுபடியில் விற்றுடலாம்னு யோசனை...''

''சின்ன கடைகளுக்கு அதே தள்ளுபடியில் தரலாம். அவங்களே விற்றுக் கொள்வாங்க... ஒரு பெரிய ஹாலை வாடகைக்கு எடுக்கறதும், விற்க ஆட்களைத் தேடறதும் நமக்கு மிச்சம்...''

''பேஷ்... விசாரியேன்.''

இப்படி நிறுவனத்தைப் பற்றியே யோசித்தவளுக்கு வீட்டிலிருந்த கவனம் கலைந்து போனதோ? தவிர சம்பாதிக்கும் தமையனை இனியென்ன கண்காணிப்பதும், தட்டிக் கேட்பதும் என்ற நிம்மதியும் ஒரு காரணம். அலுவலகப் பணிகளை முடித்து வருபவளை வீட்டு வேலைகள், 'என்னைப் பார்' என்று இழுத்துப் பிழிந்தெடுத்து விடுகின்றன.

மித்ரன் வழக்கத்தைவிட அமைதியாய் சோர்வாய் தெரிந்தானே... கடந்த சில நாட்களாய்... வாரங்களாய்...?

என்ன பிரச்சனை..?

ஆக மறுபேச்சின்றி அலுவலகத்தை அடைந்தவளுக்கு ஆச்சரியம்தான். அலுவலக வாசல் திறந்தே இருந்தது - காவலரும் கேள்வியே கேட்கவில்லை. மாடியிலிருந்த




அக்கௌண்ட்ஸ் பிரிவை அடைந்தவள் - சற்று திகைத்து தான் போனாள்.

கையில் தயாராய் எடுத்து வைத்திருந்த சாவிக்கு வேலையில்லை -

கதவு திறந்திருந்தது - வாசலில் நின்று பார்த்தவள் பணிவாய் மாலை வணக்கத்தைத் தெரிவித்தாள்.

ஆனால் பதிலுக்கு அங்கு அமர்ந்திருந்தவன் சொன்னதில் அதிர்ந்து நின்றாள் -

''கோணலான கணக்கை எப்படி நேராக்கலாம்னு பார்க்க வந்தியா மஹதி?''



## 5

அம்மா சொன்னது உண்மைதானோ?

''ரொம்ப சிரிக்கக் கூடாதடி... அதிக ஆனந்தத்தைத் துன்பம் தொடரும் என்பதை நினைப்பிலே வை - சந்தோஷத்துல குதிச்சா அடுத்து அழுகைக்கும் தயாராயிருக்கணும்'' என்பார்கள் -

இன்பம் துன்பத்தை சமமாய் பாவிப்பதற்காய் தாய் தந்த அறிவுரை அது.

அதை சற்று அசட்டுத்தனமான ஆலோசனை என்றே நினைத்திருந்தாள் - பல காலம் கழித்து, தோழியின்



கல்யாணத்தின் போது ஒரு வாரம் சிரிப்பும் களிப்புமாய் ஒ
வாரம் இனித்ததுதான். அழகு நிலையத்தில் சிங்காரம்
புதுப்பட்டு, நகைகள், கல்யாண கோலாகலம், விருந்த
பலரின் பாராட்டு என்று மகிழ்வில் நனைந்திருந்தவ
இவனது வார்த்தைகள் மிக சுட்டன.

''ஸார்?''

''மித்ரன் உன் சொந்த அண்ணன் இல்லையா?''

''ஆமா ஸார்.''

''ஆக அண்ணனைக் காப்பாற்ற துணிஞ்சுட்டே...''

''என்ன... எதிலிருந்து?''

''போலீஸில் சிக்கி, ஜெயிலில் களி தின்னுவதிலிருந்து...

இதுவரை சொற்பமாய் சந்தித்திருந்த முதலாளி - நா
ரீகமாய் பேசிய திரு. மதனமோகன் ஏனிப்படி சீறுகிறார்
அவளுக்குப் புரியவில்லை.

சகோதரனின் சோர்வை இன்று புதிதாய் உணர்ந்தவ
போல, முதலாளியின் கடுமையையும் முதன் முதலா
அனுபவித்தாள்.

''உங்க மாமா நல்ல அபிப்ராயம் சொன்னதால்தா
உங்களை வேலையில் சேர்த்தேன் - ஆக இந்த புரட்
திருட்டு - உனக்கு முதல் முறைன்னு நினைக்கறேன்.''

''மன்னிக்கணும் ஸார்... எனக்கு ஏதும் புரியலை.''

''எனக்கு ஒரே பார்வையில் புரியுதே மஹதி - காதி
வைரத்தோடு - கழுத்து கையில் புது நகைங்க... ம
மோதிரம் கூட வைரந்தான் - கல்யாணம் நிச்சயமா
அடையாளமா, இல்ல ச்சும்மாதானா? காசு இருக்கு, இதையு
வாங்கிப் போடு என்ற கணக்கு - ம்ம்?''

இவளது கால்கள் குழைந்தன -

இதென்ன கெட்ட கனவா?

ஏனிந்த அறையில் நிற்கிறாள் - முறுவலுடன் பரிவாய் பேசிய முதலாளி ஏனிப்படி கேவலமாய் சாடுகிறார்? இவருக்கு தன் நகைகள் புதிது என்று எப்படித் தெரியும்?

''உடைகளும் கூட வாங்கினியா? இல்லைன்னா கையாடிய ரெண்டு லட்சத்தை எப்படி செலவழிக்கிறது... ம்ம்?''

பேனாவை விரல்களால் சுழற்றியபடி மெள்ள எழுந்தான். கோர்த்த விரல்களைப் பிரித்தவள், தன்னையே கிள்ள நினைத்தாள் - கனவென்றால் வலிக்காதாமே... ஆனால் விரல்கள் மரத்திருந்தன.

''எ... எனக்கு எதுவும் புரியலை... கொஞ்சம் விளக்கினால்.''

''நிச்சயமாய்.. உற்பத்தி செய்யும் நம் இயந்திரங்கள் சமீபமாய் அடிக்கடி பழுதாகி விடுகின்றன... உபரி பாகங் களை ஒன்றுக்கு இரண்டாய் வாங்கி வைத்திருப்பதாய் சொன்னாலும் அவற்றுக்கான ரசீது கண்ணில் காட்டப் படவில்லை. ஆக கணக்கர் நடேசன் அவற்றை சரி பார்க்க வந்தால் மித்ரன் காணாமல் போய் விடுகிறான்.''

கடும் அதிர்வில், விபத்தில் மூளை சற்று ஸ்தம்பித்துப் போகுமாம். தனக்கு கிடைத்த சேதியை ஜீரணிக்க முடியாத மூளையோடு நின்றவளுக்கு எதுவும் தெளிவாயில்லை...

தன் அண்ணனையே குற்றப் படுத்துகிறார்?

அதுவும் பணம் கையாடினதாய்?

''முதலில் உனக்கதில் சம்பந்தம் இருக்குமென நான் நினைக்கலை மஹதி.''

தன் பெயரை இத்தனைக் கச்சிதமாய் உச்சரிப்பவர்கள் சொற்பம் - புத்தி தடுமாறி வேறெங்கோ அலைந்தது -



''ஆனா நீயும் தலைமறைவானாய்... இதுவரை விடுப்பே எடுக்காதவளை ஒரு வாரம் காணலை.''

''நான் முறையாய் லீவ் கேட்டு... எழுதித் தந்துதான்...''

''தலைமறைவானியா?'' எத்தனை இடக்கான கேள்வி இகழ்ச்சியான சிரிப்பு...

இவளது அதிர்ச்சி மெல்ல மங்கி, அவமானமும் அத விளிம்பில் ஆத்திரமும் கனல் விட்டு சிவந்தன.

''இப்ப இருட்டின பிறகு இப்படி அக்கௌண்ட்ஸ் அறை குள் நுழைவதற்கும் முறையாய் அனுமதி கேட்டாச்சா யாரிடம்?''

அவன் கேள்விக்கு பதில் தேடவும் முடியவில்லை.

''வந்து... மித்ரன் ஞாயிறன்று வீட்டிலேயே செலவுகளை ஒப்பிட்டு பார்த்து...''

''அவனுக்கு இந்த பிரிவில் என்ன வேலை?''

''பொருட்கள் எங்கே மலிவாய் கிடைக்குதோ அங்கே வாங்கப் போவதாய்...?''

''ஓஹோ? விளக்கமெல்லாம் கச்சிதமாய் தர்றே மஹதி சரி எவ்வளவு மிச்சமிருக்குது?''

ஏன் இன்று அவன் பேசுவது எதுவுமே தனக்கு புரியவில்லை?

தவிப்புடன் பார்த்தாள் -

''எது?''

''பணம் - எங்கிட்டேருந்து அடிச்சதில் ஊதினது போக எவ்வளவு மிச்சம்னு கேட்கறேன்.''

''நீங்க தப்பாய் புரிஞ்சிருக்கீங்க.''



''ஆக நீ ஏதும் அறியாத அப்பாவி தங்கை? அண்ணனின் தில்லு முல்லில் உனக்கு பங்கேயில்லை - அப்படித்தானே?''

ஏகத்தாளமாய் கேட்டான்.

''ஸார் - உங்களை ஏமாற்றும் எண்ணங்கூட எனக்கில்லை.. இந்த வேலை எங்களுக்குப் பிடிச்சிருக்குது - ரெண்டு பேருக்குமாய் சேர்ந்து இருபத்தி ஐயாயிரம் சம்பளம் வருது. சொந்த வீடு - ஆக வாடகை என்ற பெரிய செலவும் கூட இல்லை - ஆக எதுக்கு உங்க பணம்... மித்ரன் அப்படிப் பட்டவனில்லை..''

அவனது உள்ளங்கை இவள் முன் நீண்டது.

மறுபடி குழம்பிப் பார்த்திருந்தாள் -

'என்ன கேட்கிறான்?'

தனது புது நகைகளையா...? அல்லது கைகுலுக்கி மன்னிப்பு கோரப் போகிறானா?

''இந்த அறையின் சாவியைத் தா...'' - விளக்கினான்.

அவசரமாய் அதை அவனது உள்ளங்கையில் வைத்தாள் - தன் விரல்களின் நடுக்கத்தைப் பார்த்தாள் - உடம்பு உதறுவது புரிந்தது.

துர்கனவு காணும்போதே வியர்த்து விடும்... இதுவோ நிஜத்தில் நிகழும் பயங்கரம்... உடம்பு பதறாதா?''

''உடனே குற்றத்தை ஒத்துக்குவேன்னு நினைச்சேன் - ஆனா 'நான் அப்பாவி'ங்கறே - சரி இப்ப மித்ரன் எங்கே?''

''வீ... வீட்டில.''

''அங்கே போகலாம்.''

கால்களை அசைப்பது சிரமமாய் இருந்தாலும் இயந் திரமாய் அவனைப் பின் தொடர்ந்தாள். அறையை அவள்



தந்த சாவியால் பூட்டியவன் சாவியைத் தன் பான்ட் பாக் கெட்டில் வைத்து, அதை 'பத்திரமாய் இரு' என்பது போல தட்டித் தந்தான்.

விடுவிடு என்று நடந்தவனை தடுமாற்றத்துடன் தொடர்ந் தாள். பேசியபோது அவனது விழிகள் தன்னைத் துளைத் தெடுத்தனவே...

தீக்கங்கு போல பொசுக்கித் தகித்ததே...

அப்படி சுட்டுத் துளைத்துமா தான் சொல்வது உண்மை தான் என்பது அவனுக்கு இன்னும் புரியவில்லை?



6

''உங்களுக்கு என் பணம் தேவையில்லைங்கறது போல சொன்னே... ம்ம்?''

காரைச் செலுத்தியபடி மதன் கேட்க அவள் இன்னும் பிரமை விலகாமல் உட்கார்ந்திருந்தாள் -

இந்த அதிர்ச்சி லேசில் விலகாது - வாழ்வு முழுமைக்கும் மறக்காது..

மனிதன் நிலவில் காலடி வைத்து 35 ஆண்டுகள் ஆன பின்பும் அந்தத் தடம் இன்னும் அழியவில்லை... நிலவில் காற்றே இல்லாததால் மண் மூடி தடம் மறையவில்லை...

மதனின் கனல் பார்வையும், வார்த்தைகளும் இவள் உள்ளே பதிந்து போயின - இனி எத்தனை நிகழ்வு வந்தாலும் இது மங்காது போல...

''இந்தக் காரின் விலை என்ன தெரியுமா?''

மஹதியால் தலையை அசைக்க மட்டுமே முடிந்தது.

''15 லட்சம். என் வியாபாரம் கோடிகளில் - ஆக ரெண்டே லட்சம் எடுத்துகிட்டா என்னன்னு நினைச்சிட்டீங்க... மதன் மடையனால் கண்டு பிடிக்க முடியாது என்ற நிச்சயம்... ம்ம்?''

''இல்ல... நான் எந்தத் தப்பும் பண்ணலை.''

''உனக்குத் தூக்கத்தில் நடக்கற வியாதி உண்டா.''

''எ... என்ன?''

''பிறகெப்படி இந்நேரம் தனியே, அதுவும் சாவியோடு கம்ப்யூட்டர் அறைக்கு வந்தே?''

கேலி குத்தியது.

''அதான் சொன்னேனே ஸார்.''

''ம்ம்... எங்கே விலை சகாயம்னு பார்த்து அங்கே பொருட்களை வாங்கன்னு பொய் சொன்னே -

''முதுகிற்குப் பின்னே ஒரே ஒரு காரியம் செய்ய வேணும்; அது முதுகைத் தட்டிக் கொடுப்பதாய் இருக்கட்டும்'னு வாங்க. நீங்க என் முதுகில் குத்தினதும் அல்லாமல், சும்மா தடவினோம்னு கதையும் திரிக்கிறீங்க..''

பிறகு வீடு வரும் வரை மஹதி வாய் திறக்கவில்லை.

நவீன வெள்ளி நிறக் காரிலிருந்து. அதுவும் ஒரு இளைஞனின் அருகிலிருந்து தான் இறங்குவதை அக்கம் பக்கத்தார் பார்ப்பார்களே என்ற பதட்டம் - படியேறும் போதோ, இதயத் துடிப்பின் வேகம் அதிகரித்தது -

கேட் திறந்த ஒலி கேட்டு எதிர் போர்ஷன் பாட்டி இன்று புன்னகையுடன் எட்டிப் பார்க்காதது நிம்மதியாய் போனது.



எந்த விசாரிப்பிற்கும் பதில் சொல்ல முடியாத நிலைமை - வீட்டின் அழைப்பு மணியை அழுத்தி விட்டுக் காத்திருக் கையில், மறுபடி கால்கள் தொய்ந்தன - கதவு திறந்ததும் நேரே தன் கட்டிலில் போய் இழுத்து மூடியபடி படுத்து விடலாமா என்ற சோர்வு -

ஆனால் இதை நின்று சமாளிக்க வேணும்.

திறந்த கதவின் பின்னே சட்டையை மாட்டியபடி மித்ரன் -

சட்டை பித்தான்களைப் போட முடியாதபடி நடுங்கிய விரல்கள்...

வெளுத்து அதிர்ந்த முகம்..

''வாங்க ஸார்'' என்று முதலாளியை ஆச்சரிய ஆனந்தத் துடன் வரவேற்க வேண்டியவன், நனைந்த பூனை போல வெடவெடத்ததைக் கண்டதுமே இவளுக்குப் புரிந்து போனது -

ஆக, தன் உடன்பிறந்தவன் திருடன்தான் - ஏமாற்றுக் காரன்தான்...

கள்வனின் தங்கை என்றழைப்பார்களோ தன்னை இனி?

''முதலில் உன் தங்கைக்குக் குடிக்க தண்ணீர் கொடு'' உத்தரவின்படி செய்துவிட்டு மித்ரன் பேசாமல் நின்றான்... எப்பேர்பட்ட பேச்சும் தெரிவிக்க முடியாத அர்த்தங்களை எல்லாம் அந்த மௌனம் பேசியது. தாழ்ந்த தலையும், தளர்ந்த தோள்களும் குற்றப்படுத்தும் முன்பே அதை ஏற்றுக் கொண்டிருந்தன!

தண்ணீரைப் பருகி அமர்ந்தவளுக்கு அடுத்த அரை மணி நேரம் நடந்தது ஒரு கடுங்கனவாய் இருந்தது.

கிள்ளியபோது வலித்தாலும் நம்பத்தான் முடியவில்லை.

தன் எதிரே இருந்த இரண்டு ஆண்களையும் அந்நேரம் கடுமையாய் இப்படி வெறுக்காள் -



இப்படி ஒரு இழிசெயல் செய்த தன் அண்ணனை - அதற்கு தன்னையும் சேர்த்துக் குதறிக் கொண்டிருந்த அரக்கத் தனமான முதலாளியை...

மதனை குற்றம் சொல்ல முடியாது.

தன் கைப்பொருள் களவாடப்பட்ட ஆத்திரம் -

அது யாருக்கும் இயல்பானதுதான் - ரெண்டு லட்சம் என்பது சாமான்ய தொகை அல்ல. ஆனால் தன்னையும் சேர்த்து ஏன் இடித்துப் பிழிய வேண்டும் என்பதுதான் புரியாத மர்மம்!

குடும்பத்தில் இருப்பது இரண்டே பேர் - ஆக இருவரும் கூட்டுக் கள்ளர்கள்தான் என்ற தீர்மானம் போலும்.

போகட்டும்... அண்ணனின் கயமை இவளை மிக நோகடித்தது.

அவன் சற்று அசமந்தம்தான் - வருந்தி வேலை பார்ப் பவனுமில்லை - ஆனால் திருட்டு போக... சூதாட்டமும் உண்டாமே...?

ஆண்களின் அரை மணி நேரப் பேச்சில் அவள் புரிந்து கொண்டது அதுவும்தான்.

''எங்களுக்கு உன் காசு எதற்கு?'' என்றிவள் கேட்க அண்ணனோ -

''எனக்கு சூதாட தேவைப்பட்டது'' என்று ஒத்துக் கொள்ள குன்றினாள். எங்கிருந்து பழகினான் - எப்போது? யாரிட மிருந்து? - மனம் உளைந்தது. ஆனால் நல்லதும் பொல் லாததும் உலகம் முழுவதும்தான் இறைந்து கிடக்கின்றன... ஒநாய் கதைதான். எதைத் தேர்ந்தெடுத்து ஆவலாய் பழகுகிறோமோ அப்படித்தானே மாறிப் போவோம்?



ஆக பிறரைப் பழி கூற முடியாது.

சென்னையில் காஸினோ போன்ற சூதாட்ட கிளப்கள் இருப்பதே இவளுக்குத் தெரியாது. அது சரி - நகைக் கடைக்குள் இவள் நுழைந்ததே சமீபமாய்தானே? அப்படியிருக்க கேளிக்கை உலகம் பற்றித் தெரியாததில் என்ன ஆச்சரியம்?

''கிரெடிட் கார்ட் வச்சு ஆடினேன் ஸார். பீரும் சீட்டு ஆட் டமுமாய் இருந்த என்னைப் பெரிய இடத்துப் பையன்னு சில பெண்கள் நினைச்சு என்னைத் தூண்டி விட, கரை மீறிட்டேன்.''

ஆளும் அப்படி வளப்பமாய்தானே தெரிகிறான் - கசப்பாய் நினைத்து கொண்டாள் - அம்மா தனக்குத் தந்த 'ப்ரோடினிக்ஸ்' பிஸ்கட்டுகளையும் அவனுக்கேத் தந்தது ஞாபகம் வர, கண்கள் கரித்தன.. ஆனால் அழ அவள் தயாராயில்லை.

கெஞ்சலும் குழறலுமாய் மித்ரன் இப்புதியவன் முன்ப மண்டியிட்டிருப்பது போதாதா?

தானுமா அழுது கரைய வேணும்?

பார்வை தாழ்ந்திருந்தாலும் அவளது உடம்பு குறுச வில்லை... மதனின் பார்வை அவ்வப்போது தன்னைத் தொட்டு ஆராய்ந்து விலகுவதை உணர முடிந்தது.

ஆனால் தரையிலேயே தன் பார்வையைக் குத்தி வைத்தாள்.

''அதிலும் ஒரு பெண் என்னிடம் ரொம்பப் பிரியமாய் பழ கினாள்... எங்கூடவே இருந்து அவள் உற்சாகப்படுத்த, நான் கண்மண் தெரியாம 'ரூலட்' என்கிற அதிர்ஷ்ட சக்கரத்தை

சுழற்றினேன்... அப்பப்ப, காசைத் தந்த அந்த இயந்திரம் அடிக்கடி எங்காசை பிடுங்கிடுச்சு.''

''இல்லை மித்ரன் - அது என் காசு... தவிர நீதான் அதைத் தேடிப் போய் கொட்டினே...'' திருத்தினான் மதன்.

''ஆமா ஸார்... மஹதியும் சம்பாதிச்சதால் அவ செலவுக்கு என்னிடம் பணம் கேட்கலை... ஆனா என் சம்பளம் அந்தப் பகட்டான கிளப்பிற்குப் போதலை...''

''அதான் லட்சக் கணக்கில் சுரண்டிட்டே... ம்ம்?''

''மன்னிச்சிருங்க ஸார்.. ஒரே 'லாட்'டில் ஜெயிச்சு அத்தனையையும் அதாவது உங்க காசைத் திருப்பிடணுங் கற எண்ணந்தான்...''

''ஆனா அந்த உயர்ந்த எண்ணத்திற்கு அதிர்ஷ்டம் துணை நிற்கலை -

பாவம் - ம்ப்ச்.. இப்போதும் உன்னை அதிர்ஷ்டம் கை விட்டிருச்சு மித்ரன் - போலீஸில் புகார் கொடுக்கப் போறேன்.''

''ஐயோ... தயவு செய்து ஸார்...'' மித்ரன் அப்படி மற்றவனின் காலில் விழுவான் என்றிவள் எதிர்பார்க்க வில்லை!

ஸீ-ஸா விளையாடும் குழந்தைகளில் ஒன்று எம்பி அழுத்த. மறுமுனை படீரென உயருமே அதே போல 'விலுக்'கென எழுந்தாள் மஹதி.

''அந்த காசை.. அதாவது உங்க ரெண்டு லட்சத்தை நாங்க திருப்பித் தந்துட்டால் அதற்கு அவசியம் இராதில்லையா மிஸ்டர் - மதன மோகன்?'' கேட்டாள் வெகு கறாராய்...!





## 7

இவளது கறாரான கேள்விக்கு பதில் மிக இனிமை யாகவே வந்தது.

இடுங்கிய கண்களால் இவளை மேலும் கீழுமாய் அளந்த பின் -

''எப்படி? அந்த சில வைரங்களை விற்றா? அது கால் பங்கு பணத்தை வேணுமானால் தரலாம் - ஆனால் எனக்கு வேண்டியது பணமில்லை... அதாவது பணம் மட்டு மில்லை...'' என்றவனின் பார்வையில் விதிர்த்தாள் -

''அப்படீன்னா?''

''பாடம்! நம்ப முதலாளிட்ட விளையாட கூடாதுப்பா - அவரை ஏமாற்ற முயன்றால் தண்டனை கடுமையா யிருக்கும் என்ற பாடம்! உங்களுக்கு மட்டுமல்ல, நம் அலுவலகத்தில் அனைவருக்கும்...'' - பொறுமையாய் விளக்கினான் -

''ஜனநாயகம் நல்லது - ஆனா இந்த அமைப்பில் குற்றங்களுக்கு உடனே தண்டனை கிடைக்காது. பள்ளிப் பருவத்திலிருக்கும் சின்னப் பெண்ணை நாசம் பண்ணின நாற்பது வயசுக்காரனுக்கு என்ன தண்டனை தரலாம்னு ஆற அமர யோசிப்பாங்க...''



மதன் சொன்னதில் இவளுக்கு உடன்பாடு என்றாலும் பேச்சு எந்தத் திசையில் நகருகிறது என்று கணிக்க முடியாமல் நின்றாள். பேச்சைத் தொடர்ந்தான் -

''மன்னராட்சியில், ஏன் ஜமீன் காலத்தில் கூட தண்டனை உடனுக்குடன் தரப்பட்டது. அப்போதுள்ள உச்சபட்ச தண்டனை என்னன்னு தெரியுமா?''

மதனின் முகத்தை ஏறிட்டவளுக்குள் பயம் கூடியது. கடும் உழைப்பில் வாழ்வில் உயர்ந்தவன் லேசான ஆளாய் இருக்க முடியாது என்பதைச் சொன்னது அவனது விழிக் கூர்மை... அதிலிருந்த ஒரு குரூர ஒளி...!

''முதுகுத் தோலை உறித்தெடுப்பது! ஊர் சந்தியில் குற்றவாளியை நிற்க வைத்து அவன் முதுகில் கல் உப்பை அரைத்துத் தடவி விட்டு. அதற்கு மேலே புதுசாய் உரிச்ச ஆட்டுத் தோலை போர்த்திக் கட்டி, குனிந்த அவன் முதுகின் மேல் ஒரு பெரிய கல்லையும் தூக்கி வச்சிடுவாங்க. சூரிய அஸ்தமனம் வரை அப்படி குனிந்தே நிற்க வைக்கப்படு வான் குற்றவாளி. பிறகு கல்லைத் தள்ளி விட்டு ஆட்டுத் தோலை எடுத்தால் அது அவன் முதுகுத் தோலையும் சேர்த்துப் பிய்த்தெடுத்துட்டு வரும்...''

சொன்ன விஷயத்திலும், விதத்திலும் மஹதியின் மயிர் கால்கள் புடைத்தன.

மித்ரனின் கண்களில் மேலும் கண்ணீர்!

''அத்தனைக் குரூரன் ஏன் - உறிச்ச தோலை வச்சு என்ன பண்றது? அடுத்தவன் தவறிழைக்க அஞ்சணும் - அவ்வளவு தான் விஷயம். இன்று என்னால் செய்ய முடிஞ்சது உன்னை லாக் - அப்பில் தள்றதுதான் மித்ரன் - நீங்க வக்கீல் மூலம் வாதாடலாம் - இந்த வீட்டை அடமானம் வைத்து பணத்தைத் திருப்பலாம் - ஆனால் போன நல்ல பெயர்...?''



போலி அனுதாபத்துடன் உயர்ந்தன அவனது தோள்கள்

'''அண்ணனும் தங்கையும் எப்பவும் சுய கௌரவத்துடன் அம்சமாய் வாழுதுங்க' என்று பேசினவங்க இனி எப்படி யெல்லாம் தூற்றுவாங்க என்பதை உங்கக் கற்பனைக்கே விட்டுடறேன்.. அதிலும் மஹதிக்கு கல்யாண வயச வந்தாச்சு - இதோ புது நகைங்கெல்லாம் போட்டுக் கல்யாண களையோடு இருக்கா...''

ஏளனமாய் பேசும் அவனது குரல் வளையைப் பிடித்த நெரிக்க வேண்டுமென்ற ஆவேசம் இவளுக்குள்...

ஆனால் கையறுந்த நிலை என்பது இதுதானே?

எளிய தமிழில் சொன்னால் கையாலாகாத்தனம்.

இவள் இறுகிய சிலையாய் நிற்க மித்ரன் அழுகையில் கரைந்து கொண்டிருந்தான் -

'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்' என்பது குறள் சொல்லும் கருத்து. அதை ஆறுதலுக்கேனும் சொல்லிக் கொள்ள முடியாது - ஏனெனில் இது ஏழையின் ஆற்றாமை அல்ல - கோழையின் கண்ணீர்!

அகப்பட்ட திருடனின் வருத்தம்.

நிமிர்ந்து தெளிவாய் பேசினாள் -

''தண்டனையை ஏற்றுக்கறோம்... ஆனால் போலீஸில் புகார் தர வேண்டாம்.''

''ஓ? கல்யாணமாகாது என்கிற பயமா மஹதி?''

பற்களை அழுந்தக் கடித்தாள் - அவை பொடியாகாமல் தப்பியது ஆச்சரியந்தான்.

''அப்படியே வைக்கலாம் ஸார்... நான் சம்பளமில்லாமல் தொடர்ந்து வேலை செய்றேன் - மித்ரன் பாடம் படிச்

சுட்டான்னு நினைக்கறேன்.. ஆக இனி கவனமாய்... அதான் நேர்மை தவறமாட்டான்.."

ஆமோதிப்பது போல மித்ரன் - "ஆமா ஸார்... இவ்வளவிற்கு போகும்னு நான் நினைக்கலை... விளையாட்டாய் ஆரம்பித்தது."

"விளையாட்டுக்காக விஷம் குடிச்சாலும் மரணம்தான். உன் தடுமாற்றத்தை உடனே கவனித்து என் கவனத்திற்குக் கொண்டு வந்தாங்க. விரைவிலேயே நீ எங்கே எப்படி சறுக்கினே என்ற விவரங்களும் வந்திடுச்சு... நீ குறிப்பிட்ட பெண்ணின் பெயர் உட்பட."

அது வரை வெளிறியிருந்த மித்ரனின் முகம் சிவந்தது -

"அதான் ஒரு சாவியை மஹதியிடம் தந்தது. தற்சமயம் உன் கையில் காசில்லை... தவிர கணக்கர் உன்னைக் குடைய ஆரம்பிச்சுட்டார் - சூதாடவும் முடியாது - ஆக மஹதியிடமிருந்த சாவியை எடுத்து கணக்கிலுள்ள குளறுபடிகளை எப்படியும் சரி செய்ய அதாவது மறைக்க முயலுவேன்னு தெரியும்."

"மஹதிக்கு இதில் பங்கேயில்லை ஸார்."

"முதலில் அப்படித்தான் நினைச்சேன். ஆனா அவளே துணிஞ்சு ஆபீஸின் கணக்குகளைத் திருட வந்ததும் தெரிஞ்சது. அவளும் இதில் கூட்டுன்னு.."

"ஐயோ... இல்லியே... எந்தப்பை ஒத்துகிட்டவன் இதில் ஏன் பொய் சொல்லணும்?"

இதைப் போன்ற நாடகங்களை நான் எத்தனையோ பார்த்தாச்சு என்ற தோரணையில் நின்றான் மதன் -

அந்த முகத்தில் துளி இளக்கமில்லை - இரக்கமில்லை.



இந்நிலையில் அவற்றை எதிர்பார்ப்பதும் தவறுதா
வியாபாரத்தில் விழும் சில ஓட்டைகளை அடைக்கா
விட்டால், சிறிதுதானே, போகட்டுமென தாட்சண்
காட்டுவது அறிவீனம்தான்.

"அடுத்து நாங்க என்ன செய்யணும் - சொல்லுங்க."

செய்யக் கூடாததை செய்த உனக்கு இத்தனை மிடுக்க
என்பதாய் உயர்ந்தன மதனின் பார்வை.

"யோசிக்கணும் - தண்டனையைப் பற்றி யோசி
எனக்கும் அவகாசம் வேணும். இல்லையா? திங்கட்கிழ
யன்று என்னை அலுவலகத்திலே வந்துப் பாருங்க.
என்றபடி எழுந்தான் -

ஆக இப்போதிருந்தே தண்டனை ஆரம்பித்து விட்ட

வரும் இரண்டு இரவுகளும், என்ன தண்டனை கிடைக்
அதில் தாங்கள் எப்படியெல்லாம் சிரமப்பட நேரும் எ
கற்பனையிலேயே இருவரையும் கருக விட்டிருக்கிறான்

சந்தோஷமாய் பறந்த இரு பட்டாம் பூச்சிகளின் மே
கனத்த ஈரக் கம்பளியைப் போர்த்தினது போலானது..

இருவரும் மௌனத்தில் தத்தளித்தார்கள் -

ஒருவரை மற்றவர் பார்ப்பதையும் தவிர்த்தார்கள் -

இப்படியானதே என்று மருகினார்கள் -

இனி குடும்பத்திற்குத் தீராத அவமானமும் பழி
தானே என்று அஞ்சினார்கள்...

விடியப் போகும் திங்கட்கிழமை காலையை நினை
நடுங்கினார்கள்...

காலம் சற்று பின்னோக்கி நகர்ந்து விடக்கூடாதா எ
கூட அசட்டுத் தனமாய் ஏங்கினாள் மஹதி...





8

ஆனால் காலம் நதியைப் போன்றது.. உற்பத்தியான இடத்திற்கு அது திரும்பவே திரும்பாது என்பதுதானே நிஜம்..?

திங்கட்கிழமை வழக்கம் போல விடிந்தது.

அதற்கே உரிய பரபரப்புடன் நகர்ந்தது.

ஆனால் அண்ணனுடன் சேர்ந்து மதனின் முன்பு போய் நிற்பதை கற்பனை செய்தே நடுங்கினாள் -

மதனமோகன் லேசுபட்டவனில்லை.

மகா சாமர்த்தியமும் சாணக்கியத்தனமும் கொண்டவன்.

இவளோ சர்வ முட்டாளாய் அவன் விரித்த வலையில் போய் விழுந்தவள் - அந்த வலையின் சிக்கலிலிருந்து எப்படி மீளுவது என்பதறியாமல் இன்னும் தத்தளித்துக் கொண்டிருக்கும் மடப்பெண்.

இல்லையென்றால் கணக்கு வழக்கின் அறைச் சாவி தன்னிடம் ஏன் தரப்படுகிறது என்று நிதானித்திருப்பாளே... அண்ணனின் மாற்றத்தையும் கவனிக்கவில்லை - அந்நேரம் அலுவலகக் காவலாளி ஏன் கேட்டைத் திறந்து வைத்திருக்கிறான் என்று கேட்கவும் இல்லாமல் வலைக்குள் காலை விட்டவள் ஆயிற்றே.



"உள்ளே யார் உண்டு - என்ன விவரம்? என்று வினவாமல் பாலில் நழுவும் பழமாய் அமிழ்ந்து போனவள்.

ஆனால் இவை எல்லாம் இவளது கள்ளமற்ற மனதிற்கான சாட்சிகள் அல்லவா?!

மடியில் கனமில்லாததால்தானே அத்தனை இயல்பாய் உள்ளே போய் முதலாளியின் எதிரே நின்றது... இல்லையேனில் பதுங்கி பின் வாங்கி இருக்கலாமே?

மதன் அதை எண்ணியிருக்க வேண்டாமா?

ஆனால் அவனது கவனமெல்லாம் களவு போன தன் காசைத் திரும்பப் பெறுவதில்தான்.

'இனி யாரும் என்னிடம் வாலாட்டத் துணியக் கூடாது' என்றளவில் இவர்களை மிரட்டி, ஒடுக்குவதில்தான்.

ஆக அவன் தரும் தண்டனையை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை.

போலீஸிடம் ஒப்படைப்பேன் என்று மறுபடி அந்த முருங்கை மரத்தில் மதன் வேதாளம் ஏறாமல் இருந்தாலே போதும்.

காலையில் தபாலை பார்வையிட்டு விட்டு, வங்கி வேலைகளையும் மதன் முடித்த பிறகு இவர்களை அழைப்பித்தான்.

சிங்கக் குகைக்குள் நுழையும் முயல் போல உணர்ந்தாள். ஆனாலும் அந்த மிரட்சியை முகத்தில் காட்டிக் கொள்ளவில்லை.

மஹதியைப் பார்த்தவன் அவளை உட்காருமாறு சைகை செய்தான்.

பெண் என்ற பரிவாம்... முஷ்டிகளை இறுக்கியபடி நின்றாள்.

''சொன்னதைச் செய் மஹதி'' - என்றவனின் குரலை அலட்சியம் செய்ய முடியவில்லை. இனி மதனின் சொல் அல்லது குறிப்புணர்ந்து உடனே கீழ்ப்படிவதே நல்லது. அல்லது கடினமான குட்டு கிடைக்கும் என்று முடிவெடுத்தாள் - ஆனால் அவனுக்குப் பணிந்து போவது லேசாகவும் இல்லை.

சில நிமிஷங்கள்தான் மித்ரனோடு பேசியது - பேச்சின் பொருள் இதுதான் - மித்ரன் இன்னும் ஒன்றரை ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இதே அலுவலகத்தில், பொறுப்பில் வெறும் மாதம் இரண்டாயிரம் சம்பளத்திற்கு வேலை செய்ய வேண்டும். வேலை ஏனோ தானோ என்றிருந்தால் சீட்டுக் கிழியும் - வெளியே வேறு வேலையும் கிடைக்காதாம்...!

''சரி மித்ரன் - நீ போகலாம் - உன் சம்பளம் ஐந்தில் ஒரு பங்காய் குறைக்கப்பட்டது இங்கே வேலை செய்பவர்களுக்குத் தெரிய வரும் - உனக்கு பின்னே மட்டுமல்ல முன்னேயும் இகழ்ச்சியாய்தான் பேசுவார்கள் - அந்த அவமானத்துடன் நீ இங்கே வேலை பார்ப்பது... மற்றவர்களுக்கும் ஒரு பாடமாகும்...''

''போலீஸ் கேஸ் ஆக்காததற்கு நன்றி...''

''நீ போகலாம்..'' என்றவன் மஹதியின் புறமாய் திரும்பினான் - அந்நிலையில் அவன் முகத்தில் அரும்பிய புன்னகை அழகாகவே இல்லை என்றிவள் கறுவினாலும் அதில் பதிந்த தன் பார்வையை அவளால் மீட்க முடியவில்லை.

பெண் என்றால் பேயும் இரங்குமாமே... ஆக இந்த சாத்தான் தனக்கு இப்படி ஒரு புன்னகையைத் தருகிறதோ? எப்படியோ... விரிந்த அவனது உதடுகள் கவர்ச்சியாகவே தெரிந்தன.



''நன்றி...'' முணுமுணுத்தாள்.

''என் புன்னகைக்காகவா?''

மஹதியின் முகம் கடுத்தது - ''தப்பாவே புரிஞ்சுக்கிற
- இதை போலீஸ் கேஸ் ஆக்காமல் விட்டதற்காய்..''

''ஓஹோ? நீ என் புன்னகையை ரசித்தது போலிருந்த
அதான். சரி - இப்போ உன் பங்கான தண்டனை
என்னன்னு.''

''ஸாரி - மித்ரனுக்கான தண்டனையிலேயே அ
செலவழித்த தொகை உங்களுக்கு மீண்டுடுது - கூட
மற்றவர்களுக்கான மிரட்டலும் கூட - பிறகு ஏன் அ
சம்பந்தப்படுத்தணும்?''

எழுந்தவன் மெள்ள இவளை நோக்கி நடந்து
அருகே வந்து நின்றான் - அவனை அண்ணாந்து பா
முடியாமல் இவளும் எழ.

''உட்கார் மஹதி'' சாட்டையாய் சொடுக்கியது அவ
குரல்.

''மறுபடி என்னை ஏன் சகலத்தையும் நினைவு படு
வைக்கிறே? ம்ம்? இருட்டிய பிறகு மூடிய அலுவலகத்தி
திருட வந்தது நீ... ஆக எப்படி நழுவ முடியும்? அப்படி
உன்னை நான் சும்மா விட்டுவிட்டால் அது மற்ற
களுக்குத் தப்பாகவே தோணும்... தப்பு தப்பாய் யூ
பண்ணுவாங்க...''

அவனை நிமிர்ந்து பார்க்கக் கூசியவள், மேஜை
மின்னியபடி கிடந்த கண்ணாடி உருளையையே பா
திருந்தாள் -

''புரியுதில்லையா... நான் சொல்ல வர்றது?''



''இல்லை.''

''நீ அழகான பொண்ணுங்கறதால் நான் உனக்குச் சகாயம் செய்துட்டதாய் நினைப்பாங்க... என்னென்ன வகையில் நீ என்னை அனுசரித்து சகாயம் பண்ணியிருப்பேன்னு பேசுவாங்க.''

மறுபடி பல்லைக் கடித்து வார்த்தைகளை அடக்கி விழுங்கினாள் -

''ஆக உனக்கும் தண்டனை உண்டு. உன் சம்பளத்தில் நான் கை வைக்கலை - பெண்களுக்கு பல செலவுகள் இருக்கும் இல்லையா?''

''இல்லை - இதிலென்ன ஆண், பெண் பேதம்?'' என்று சொல்ல நினைத்து சொல்லாமல் விட்டாள்.

வெட்டி வார்த்தைகளுக்கு இங்கு வேலை இல்லை.

''என் செயலாளர் வேலையை விடப் போகிறார் - புதிதாய் நியமிப்பது ஒரு பெண்ணாய் இருந்தால் நல்லதுன்னு ஏற்கனவே யோசிச்சிருந்தேன் - அந்த உதவியாளர் வேலைக்கு நீ பொருந்துவேன்னு ஒரு எண்ணம்...''

''அதாவது உங்க அந்தரங்க காரியதரிசி.''

''வேலையில் மட்டும்.''

அந்த நக்கல் புரியாதது போலிருந்தவள் கேட்டாள் -

''அந்தளவிற்கு என் மேல் நம்பிக்கை இருக்கா உங்களுக்கு?''

''ம்ம்... உன்னை என் கண் எதிரேயே வைத்துக் கொள்வது ஒரு விதமான பாதுகாப்பாய் பட்டது..''

''அதைவிட என்னைச் சிறைக்கம்பி பின்னாலேயே போட்டிருக்கலாம்.''

சுருக்கென சொன்னாள்.



''உன் உதடுகள் மிகக் கவர்ச்சியானவை மஹதி.. பல
உன்னிடமே அது பற்றி சொல்லியிருக்கக் கூடும்... ஏன் நீயே
தினந்தினம் கண்ணாடியில் பார்த்துக்கிறியே... ஆனா அந்த
உதடுகளுக்குள்ளே சிறையிருக்கும் நாக்கில் கனிவே
இல்லையே? நீ என் கைக்குக் கீழே வேலை செய்தால்
திமிறும் அந்த ஆறங்குல அவயவமும் ஒரே மாசத்தில்
அடங்கிடும்னு நம்பறேன்.''

தாள முடியாமல் எழுந்தவள் அவனை நேருக்கு நேராய் பார்த்தாள். இப்போது சிரிப்பு அவனது உதடுகளில் மட்டுமின்றி கண்களுக்கும் பரவியிருந்தது -

''மன்னிக்கணும்... ரொம்ப தப்பாய் கணிக்கிறீங்க.''

''உன் உதடுகளின் கவர்ச்சி பற்றி யாருமே உன்னைப் புகழ்ந்ததில்லையா - மஹதி?''

எத்தனை அப்பாவித்தனமான தொனி..!

''இந்த கிண்டலை எல்லாம் விடுங்க... ஸார்.''

''சரி சொல்லு.. என் கணிப்பில் என்ன தவறு கண்டாய்?''

''மித்ரன் திட்டமிட்டு உங்க பணத்தைச் சுரண்டலை. அதற்கு நான் உடந்தையுமில்லை - அப்படியிருந்திருந்தால் அத்தனை இயல்பும் துணிவுமாய் சனிக்கிழமை மாலை நான் உங்க முன்னே வந்து நின்றிருக்க மாட்டேன்.''

''ஆக ரெண்டு லட்சத்தில் உனக்குப் பங்கில்லை?''

கைகட்டியிருந்தவன் மோவாயை உயர்த்திக் கேட்டான்.

''நிச்சயமாய் இல்லை.''

''அப்படின்னா இந்த நகைகள்...?''

தொட வருபவை போல அவனது விரல்கள், நீள, மஹதி அவசரமாய் உட்கார்ந்து கொண்டாள். மறுபடி மேஜையில்

இருந்த கண்ணாடி குமிழையே பார்த்தபடி தன் தோழி சித்ரா விற்கு தான் முன்பு கொடுத்த கடனையும் அதை அவள் திருப்பியதும் அந்தத் தொகையோடு தன் பழைய நகை களை விற்றே புதியவைகளை வாங்கியது பற்றி விவரித்தாள்.

"ஓஹோ... அந்த.. சித்ராவிடம் இப்போ பேச முடியுமா?"

"அவ... தேன்.. தேனிலவிற்குப் போயிருக்கா."

"செல்போன் இருக்கணுமே?"

"வேலைக்கு உதவுமேன்னு அவ செல்போன் வச் சிருந்தது உண்மைதான். இப்ப அவளது கணவரின் போன் இருக்கறதால் தன்னுடையதை அவள் எடுத்திட்டுப் போகலை... அவர் நம்பர் எனக்குத் தெரியாது... கேரளாவிற்குப் போறாங்கன்னு தெரியுமே தவிர... எந்த ஊர், ஹோட் டல்னும்..."

"சரி - விடு... இப்போதைக்கு தேனிலவுத் தம்பதிகளைத் தொந்தரவு செய்ய வேண்டாம்... அவங்க விலாசம்."

"வயநாட்டில் செட்டில் ஆன பிறகு தன் புது விலா சத்தைத் தெரிவிப்பதாய்.."

"அடடா..." ஏளனத்துடன் தன் ஏமாற்றத்தைக் காட் டினான்.

"சிநேகிதியின் புது விலாசம் வரும் வரை பொறுப் போம்... அதுவரை நீ இந்த புது வேலையை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை மஹதி.. தவிர வரும் வாரம் கன்னியா குமரி பக்கம் எனக்கு வேலைகள் காத்திருக்கின்றன - குமரிக்கும் வள்ளியூருக்கும் நடுவே தோதான நிலம் கிடைச்சதால் வாங்கிட்டேன். பக்காவாய் நம்ப ஃபாக்டரி அங்கே எழும்பும். சென்னையில் தொழிற்சாலையை



விஸ்தரிக்க இடம் போதாது. செலவும் அதிகமாகு தெற்கேன்னா லேபரும் சகாயந்தான் - தவிர பெரும்பா நம்ப தயாரிப்பு ஏற்றுமதி ஆகிறவை - தூத்துக்குடி பக்கந்தான் என்பதால் கப்பலில் ஏற்றும் வேலை சுலபம்... இனி ஆரம்ப கட்ட வேலைகளைக் கவ கணும்... நீ தயாராய் இரு."

எத்தனை எடுத்துச் சொல்லியும் தான்தோன்றித்தனம முடிவு எடுக்கிறானே என்ற ஆத்திரத்துடன் இவள் எழு அதே சமயம் அவனும் திரும்ப, இருவரது உடல்க உரசின.. இவளுக்கு உதறியது..

"நல்லது.. என்னிடம் இவ்வளவு பயமா? நல்லதுதா பணிவாய் வேலை செய்வாய்.."

"இது பயமில்லை... வெறுப்பு... அருவெருப்பு.. சீறினாள் தன்னையும் மீறி!



## 9

வெள்ளிக் கூண்டில் அடைபட்ட கிளியின் நி எப்படி இருக்கும் என்பதை அந்த ஒரு வாரம் மஹதிக் காட்டியது.

சிறிய குளிரூட்டப்பட்ட அறை.

நேர்த்தியான அலங்கரிப்பு - மேனிக்கும் விழிகளுக்கு குளிர்ச்சிதான்.



ஆனால் மனசு கொதித்தது.

இடைவேளை நேரங்களில் பீங்கான் கோப்பையில் மணமாய் காபி இவளிருக்கும் இடம் தேடி வந்தது.

மதனின் அறையிலிருந்து மணி ஓசை அழைத்தால் மட்டுமே இவள் போக வேண்டும் - மற்றபடி சதா அவனது கண் எதிரே நிற்க வேண்டியதில்லை என்பது மட்டுமே நிம்மதி.

இவளைத் தாண்டித்தான், அனுமதி பெற்றுத்தான் யாரும் முதலாளியின் அறைக்குள் நுழைய முடியும்.

சேர்ந்த முதல் நாளே தயங்கினாலும் மதனிடம் கேட்கத்தான் செய்தாள் -

'மாசம் ரெண்டாயிரத்துக்கு உழைக்க, செருப்பாய் தேய நான் தயார் - மித்ரனை இந்த காரியதரிசி வேலைக்கு நியமிக்கலாமே..' - என்று

"மனவியல், மனிதவளம் கற்றபோது உனக்கு கணினி பயிற்சியும் உண்டு மஹதி. மித்திரனுக்கு மின்சார தொடர்பு தவிர வேறு எதில் பரிச்சயம்? இவ்வளவு கூட யோசிக்காமல் இப்படி ஒரு அசட்டுக் கேள்வி கேட்கலாமா நீ?" என்று எதிர் கேள்வி கேட்டான் போலி இளிப்புடன்!

"தவிர பெரிய நிறுவன முதலாளிகளுக்கு பெண் உதவியாளர்கள் இருப்பதுதான் வழக்கம்... அதுவும் அழகும், இளமையுடனுமாய்..."

"இப்படிப் பேசுவது தரமாய் இல்லை."

"தண்டனை தரமாய் இருக்க வேண்டிய அவசிய மில்லையே."

அலட்டாமல் வந்தது பதில்!



ஆறேழு பேருடன் தன் பிரிவில் கலகலவென்ற பேச்சிற்கு நடுவே வேலை செய்து பழகியவளுக்கு இத்தனிமை பெரும் தண்டனைதான் - கிளியின் இறக்கைகளை நறுக்கி எடுத்து விட்ட கொடுமை! மொட்டை இறக்கைகளை அடித்தபடி தவித் தவிக்கும் இயலாமை!

ப்யூன் வேணு.

"லஞ்ச் உங்களுக்கும் சேர்த்தே சொல்லிடவான்னு முதலாளி கேட்டாருங்க.." எனக் கேட்க, அவசரமாய் மறுத்தாள் -

அந்நேரமாவது மற்றவர்களுடன் போய் அமர்ந்து பேசலாமே?

வேணுவோ தலையைச் சொறிந்தான்.

"உங்களுக்குப் புரியலைம்மா... இது முதலாளிக்கு தனியா ஸ்டாரு ஓட்டல்லேர்ந்து தருவிக்கற சாப்பாடு... வெள்ளிக் காகிதம் சுத்தி சுடச்சுட வரும்... ஒரு நாள் தக்காளி சாதம், சிப்ஸ், கோழிக்கறி, மறுநாள் புலவு கறி வறுவல்ன்னு..."

"இல்ல வேணு. நான் வழக்கம்போல வீட்டிலேருந்து எடுத்து வந்து மத்தவங்களோட சாப்பிட்டுக்கறேன்."

அரைகுறை தலையாட்டலோடு போய் விட்டான்.

மஹதி அங்கே போனாலும் அங்குள்ள கலகலப்பில் தனக்குப் பங்கில்லாதது போலிருந்தது -

அந்த வேலை சம்பந்தமான குழப்பங்களும், கேலி கிண்டல்களும் இப்போது இவளுக்குப் புரியவில்லை.

"இங்கே நடக்கும் வேலைகள் பற்றி நீ யாரிடமும் சொல்ல மாட்டேன்னு நினைக்கறேன்" என மதன் மிரட்டி

யிருக்க, ஒரு வார்த்தையும் கூட பேச யோசிக்க வேண்டியிருந்தது!

'நம்ப முடியாத வஞ்சகியாகிய தன் சீட்டைக் கிழித்து அனுப்பி விடுவது தானே? ஏன் இப்படி பதவி உயர்வோடு புலவு, வறுவல் என்று விருந்து படைக்கிறான்?

இறக்கை நறுக்கிய கூண்டு கிளிக்கு சலுகை தானியம் ஊட்டுவது போல?'

அடுத்த விநோதம் ஜெகன் யாரையும் பார்த்து வழியாமலிருந்தது! மஹதியின் இடத்தை நிரப்ப வேலைக்குச் சேர்க்கப்பட்டிருந்த ஹேமா தான் அடிக்கடி வேலை சம்பந்தமாய் இவளைத் தேடி வந்து பேசியது - சிறு மெழுகு பொம்மை போலிருந்த அப்புதுப் பெண்ணை மஹதிக்குப் பிடித்திருந்தாலும் அதிகம் பேசிப் பழக வாய்ப்பில்லை.

புதிய தொழிற்சாலையை நிறுவுவது தொடர்பாய் வேலைகள் குவிய அதில் மஹதி ஆழ்ந்திருந்த ஒரு மாலை நேரம் இன்ட்டர்-காம் சிணுங்கியது.

''யெஸ்?''

''இப்போ அவர் ஃப்ரீயாத்தானே இருக்கார்?''

சற்றே அதட்டலாய் வினவியது ஒரு பெண் குரல்!

தற்சமய வேலைப் பளுவில் மதன் யாரையும் பார்க்க விரும்ப மாட்டான் என்பது இவளுக்குத் தெரியும்.

கேட்பதோ ஒரு பெண்... அதுவும் உரிமையாய்..

''நீங்க வருவது பற்றி அவருக்குத் தெரிவிச்சாச்சா மேடம்?''

''எதிர்பாராத சந்திப்பில் சந்தோஷம் அதிகம்...'' - அலட்சியத்துடன் இழுத்தது குரல்.



''உங்க பெயரைச் சொன்னால், ஸாரிடம் கேட்டுச் சொல்றேன்.''

''நர்மதா.''

''ஒரு நிமிஷம் மேடம்'' என்ற பிறகுதான் நேற்று சாப்பாடு நேரத்தில் நடந்த பேச்சு நினைவிற்கு வந்தது -

''நாளைக்கு நதி இங்கே பாயப் போகுதாமே?'' என்று ஆரம்பித்தான் ஜெகன் -

''பாஸ் நனைஞ்சு நடுங்கப் போறார்!''

இவளும் ஹேமாவும் புரியாது விழித்தார்கள்.

''ராதா சொல்லேன்.''

வழக்கமாய் தகவல்களைக் கொட்டிக் கவிழ்க்கும் ராதா இப்போது சற்று யோசித்துப் பின்பே பேசினாள் -

''மதன் ஸாரின் சிநேகிதரின் மகள்.''

''அப்ப சின்னப் பெண்ணா?''

''அதெல்லாமில்லை... நர்மதாவின் அப்பா திரு. தாமோதரனுக்கு அறுபது வயசிருக்கும்... சிநேகிதர்னா.. தொழில் முறை நட்புன்னு நினைக்கறேன். நம்ப ஸார் இந்த நிறுவனத்தை ஆரம்பிச்சப்போ இருந்த பிரச்சனைகளை சமாளிக்க உதவினார் போல..''

''ஓஹோ... நர்மதா இப்போ எங்கேயிருக்காங்க?''

''பெங்களூரிலிருந்து இறக்குமதி ஆகும் அதி நவீன நதி.''

''வரட்டும்.. காவேரியைப் பகிர்ந்துக்கத் தயங்கறாங்க.. இந்த நதியேனும் இங்கே பாயட்டும்.''

மஹதி சொன்னதை மற்றவர்கள் ரசித்ததாய் தெரியவில்லை.



''திரு. தாமோதரின் ஆலோசனையை மதன் ஸார் ரொம்ப மதிப்பார் - ஆக மகளுக்கும் அணை கட்டாத சுதந்திரம்.''

இப்போது அந்த நதிக்கு, தான் புது அணை கட்டுவதாய் எரிச்சல் போலும்... இவள் மன்னிப்பு கோரும் முன்பே 'பேசி'யின் தொடர்பு துண்டிக்கப்பட்டது - மறு நிமிஷம் கண்ணாடி தடுப்பின் வழியே ஒரு பெண் மதனின் அறை நோக்கி விரைவது தெரிந்தது -

வெள்ளத்தின் பாய்ச்சல்தான்...

முதலாளியின் அறைக் கதவு திறந்து மூடிக் கொள்ள ஏனோ மஹதிக்கு வேலை ஓடவில்லை. மதன் எப்படி நர்மதாவை வரவேற்பான்?

எழுந்து கை குலுக்கியா?

ஜீன்சும் குட்டை மேலாடையுடனும் இருந்த நவீனப் பெண் அவள் - ஆகக் கட்டிப் பிடிப்பாளோ? பட்டும் படாமல் ஒரு முத்தம்...?

'என்னவோ செய்கிறார்கள்... தனக்கேன் இப்படி காந்துகிறது?'

தன்னையே அதட்டி, வேலைக்குள் ஒடுக்கினாள் - ஆனாலும் புத்தி அதிலேயே நின்றது..!

'உள்ளே என்ன பேசிக் கொண்டிருப்பார்கள்?

தன்னிடம் பேசுவது போல ஏளனமும் இளப்பமுமாய் அல்ல.

ஏனெனில் நர்மதா பணக்கார வர்க்கம்.

மிக இனிமையாய் குழைவாய் பேசுவானோ? அப்படிக் கொஞ்சுகையில் எப்படி இருக்கும் மதனின் முகம்?



சும்மாவே ஆண்மைக் கவர்ச்சியோடு இருப்பவன் இப்பே
மன்மதனாகவே தோற்றமளிப்பானோ?'

உன்னிப்பாய் கற்பனையில் இருந்தவள் அந்த வி
சொடுக்கில் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''என்ன யோசனை?'' நர்மதா கேட்க அவசரமாய் எ
தாள்.

''இனி என் குரலைக் கேட்டதுமே லைனை மறு
சில்லாமல் மதுகிட்ட கொடு. புரியுதா?''

''மதுவா?''

''நானும் அவரை உங்களைப் போல மதன்மோகன் சா
கூப்பிட முடியாதில்லையா? மது - சிக்குனு போதைய
இருக்குல்ல - அதான்.''

மௌனமாய் நின்றாள் - இதற்கு 'ஆம்' அல்லது 'இல்
என்று சொல்வது மரியாதையாய் இராது.

''நீ சிறந்த உதவியாளர் என்றால் - சமீபத்துலத
வேலையில் சேர்ந்தியா?''

''எட்டு மாசமாச்சு.''

நர்மதாவின் முகம் கடுத்தது -

''இவ்வளவு நாளாய் என்னைப் பற்றித் தெரியா
என்ன உதவியாளர் வேலை செய்தாய்? இனியே
கவனமாய் இரு - என்ன?''

கத்தி போல கூரான குதி உயர்ந்த காலணிகள் சப்தி
மிடுக்காய் வெளியேறினாள் அவள் -

ஆனால் அவளது வாசனை முழுக்க வெளியேறா
உள்ளேயே சுழன்றது -

ஆனால் மஹதிக்குள் ஏதோ பொசுங்கிய நெடி...

## 10



வழக்கமாய் பறக்கும் நாட்கள் இப்போது ஊர்ந்து நகர்ந்தன. ஏழெட்டு நாட்கள் போனது ஒரு வருஷம் ஆனது போலிருந்தது.

''நாளை நாம கன்யாகுமரி போகணும் - தயார்தானே?''

வியப்புடன் பார்த்தவளை சிறு எரிச்சலுடன் அதட்டினான் மதன்.

''என்ன மறந்துட்டியா... இல்ல நான் மறந்திடுவேன்னு நினைச்சியா?''

''இன்னும் ஒரு வாரத்தில் உனக்கு மரண தண்டனை'' என்று தேதி குறித்து விட்டால் ஒருத்திக்கு அது மறக்குமா என்ன?

ஆனால் பிறகு மதன் அது பற்றி பேசாததால் ஒரு வேளை தள்ளிப் போடப்பட்டது போலும் என்ற நம்பிக்கை நூலில் தொங்கிக் கொண்டிருந்தாள்.

''நாளை... எப்போ?''

''ட்ரெய்ன் டிக்கெட்ஸ் தயார் - எடுத்துப் பாரு.''

''அங்கே எத்தனை நாட்கள் தங்க நேரும்னு அந்த டிக்கெட்டில் குறிச்சிருக்குமா என்ன?''

''ம்ம்... இன்னும் நாக்கு துடுக்காத்தான் துள்ளுது... ம்ம்? ஒரு வாரம் - அல்லது அதிகம் போனால் பத்து, பனிரெண்டு



நாட்கள்.. நம்ப கட்டிட கலை நிபுணர், என்ஜினியர், தொழிற் சாலை நிர்வாகிகள் எல்லோரும் வருவாங்க. அத்தனை பேரின் குறிப்பு, யோசனைகள், எதிர்பார்ப்புகளை நீ குறிப்பெடுத்து தொகுக்கணும்... அப்பதான் ஒரு இழையும் விடுபடாமல் நாம செயல்பட வசதி..''

''தங்குவதெல்லாம்?''

'முக்கியமானதைப் பேசும்போது ஏன் முட்டாள் தனமாய் குறுக்கிடுகிறதாய்' என்பதாய் ஒரு பார்வை பார்த்தான் -

''தகுந்த ஏற்பாடுகளை செய்தாச்சு.''

''இல்ல... நான் தனியே வந்து..''

''நர்மதாவும் வர்றா.''

அந்த ஒரு கணம் தன்னுள் பெருகிய உணர்வு அவ ளுக்குப் பிடிபடவில்லை... அது நிம்மதியாகத்தான் இருக்க வேணும்.. ஆனால் நெருடலாக அல்லவா உறுத்தியது?

அவனும் அதை கவனித்து விட்டான் போலும் -

''என்ன, நர்மதா வர்றதில் உனக்கேதும் ஆட்சேபனை இல்லியே..?''

இவனிடமிருந்து முழுப் பூசணிக்காயை மறைக்க முடியாதென்பது புரிய ஒரு பகுதியை மட்டும் காட்டினாள்!

''இல்ல... அவங்களுக்கு என்னைப் பிடிக்கலையோன்னு...''

''உன்னைப் பிடிக்கவோ பிடிக்காமல் போகவோ அவளுக்கென்ன இருக்குது?''

அந்தத் தொனி வலுக்கக் குட்டியது.

அதாவது இங்குள்ள பேனா, நாற்காலி போலொரு ஜடப்பொருள் நீ என்ற அலட்சிய தொனி.



''அவங்க உங்களைப் பார்க்க வந்ததும் அவங்க யார்னு நான் புரிஞ்சுக்கலை... கொஞ்சம் தாமதமானதால்.''

''இனிமேல் கவனமாயிரு.''

அடுத்த சுரீர்!

''அப்படின்னா நான் வேலையில் சேர்ந்ததுமே இந்தந்த பெண்களின் குரல் கேட்டதுமே அவர்களை உள்ளே அனுமதித்து விடுன்னு நீங்க உத்திரவு இட்டிருக்கணும். அது போக அவங்க குரல்களை நான் பரிச்சயப்படுத்திக் கொள்ள வசதியாய் ஆடியோ கேசட்டும் தந்திருந்தால் அந்த சின்னக் குழப்பமும் நேர்ந்திருக்காது.''

அவனது தாடை இறுகியது... ஆனால் அது உள்ளே கொப்பளித்த சிரிப்பை அடக்கவே என்பதும் புரிந்தது! ததும்பிய சிரிப்பில் அவனது விழிகள் மினுமினுப்பதை லயித்துப் பார்த்திருந்தாள் -

''உன்னோடு இருப்பது எனக்குப் பிடிச்சிருக்குது..''

''என்னது?''

''பொழுது சுவாரஸ்யமாய் போகுதே -''

''நேர்மையற்ற என்னோடு இருக்க உங்களுக்கு பயமாயில்லை இருக்கணும்?''

இவள் சீண்ட யோசனையாய் பார்த்தான் -

''அதுதான் யோசிக்கறேன் என் அனுபவத்தில் நான் குத்தின புள்ளி பெரும்பாலும் சரியாகவே இருக்கும்... உன்னைத்தான் சரியாய் புரிஞ்சுக்கலையோ என்ற சந்தேகம்...''

மித்ரனுக்குத் தங்கை வெளியூர், அதுவும் வித்தியாசமான ஒரு சூழலில் போவதில் - சிறிதும் விருப்பமில்லை என்றாலும் தடுக்கவும் வழியில்லை.



''தினம் போன் போடு மஹதி... ஏதும் சரியில்லைன்னு தோணினால் வந்திடு. சொன்னால் நானே வந்து உன்னைக் கூட்டிட்டு வந்துடறேன்.''

''பயப்படாதே மித்ரா - மதன் தப்பானவராய் தோணலை... தவிர அந்த நர்மதாவும் வருவா போல.''

''அவரும் அவளும்.. ஏன்?''

''எதையும் யூகிக்க முடியலை.''

''சிக்கலான நிலை - எல்லாம் என்னாலதான்.''

''இனிமே எந்த தப்பிலேயும் சிக்காதே மித்ரா... அவ்வளவுதான்.''

''பாடம்தான் படிச்சுட்டேனே - ஆனால் உன்னையும் இக்கட்டில் மாட்டிவிட்டதுதான் கொடுமை.''

''தனியான ஏ.ஸி. அறை, அலையற வேலைப் பளு எல்லாம் இல்லை - அதே சம்பளம் - பிறகென்ன?''

இவள் சிக்கியிருப்பது இக்கட்டில்தான் - ஆனால் அதைச் சொல்லி அண்ணனின் துன்பத்தைக் கூட்டுவானேன்?

பிரயாணம் மிக வசதியாகவே அமைந்தது - உப்புக் காற்றும் திரும்பிய பக்கமெல்லாம் நீலக்கடலுமாய் இரைந்த கன்னியாகுமரி அழகாகவே இருந்தது. இந்திய நுனியில் திருவள்ளுவரின் பிரமாண்ட சிலையும் ஒருபுறம் தேவியின் கோயிலும், மற்றொரு பக்கம் குப்பத்துப் பகுதியில் நெடுக நின்ற வெள்ளை தேவாலயமுமாய் வித்தியாசமான ஊர்.

சமுத்திரத்தைப் பார்த்தது போலிருந்த விடுதியில் தனக்காய் ஒதுக்கப்பட்ட தனியறையை பார்த்து பிரமித்து போனாள் - கடல் போல விசாலமான அறை - ஒருபுறம் முழுக்க திரைச்சீலை மறைப்புக்குள்ளிருந்த கண்ணாடி -

அதன் வழியே கடலும் வானும் நீலமாய் பின்னிக் கிடந்ததை ரசிக்க முடிந்தது. எதிர்புறம் வெள்ளை நிற வழுவழுப்பில் சுவர்கள் - அதில் உயர்ரக ஓவியங்கள். எழுதுவதற்கான மேஜையில் ஒரு கணினி வைக்கப்பட்டிருந்தது - அது மதனின் ஏற்பாடு போலும்.. சொகுசான குளியலறை - அங்கு ரகம் ரகமாய் க்ரீம், சோப்பு, வாசனைத் தைலங்கள்.

குளியல் தொட்டி ஒன்றை அவள் நேரில் பார்ப்பது இன்றுதான் - முன்பு வெள்ளித் திரையில் பார்த்ததுதான்! அதுவும் பழைய படங்களில்... அந்த நாயகிகள் போல, தொட்டியை அடைத்தவள் குழாய்களைத் திருகி விட தொட்டி வெதுவெதுப்பான நீரால் நிரம்பலானது.

ஒரு குட்டி பாட்டிலின் திரவத்தை அதில் சேர்க்க, வாசனைக் குமிழ்களாய் தொட்டி முழுக்க நுரை பூக்கள் -

பயண அலுப்பு, வியர்வையை முதலில் ஷவரின் அடியே நின்று கழுவியவள் தொட்டிக்குள் இறங்கினாள் - இளம் சூடான நறுமண நீர் அவளைச் சுற்றி அணைத்தது - ஒரு நூதன அனுபவத்தில் முதலில் தயங்கிய உடல் சற்று நேரத்தில் தளர்ந்து மிதந்தது... உடலின் பாரமெல்லாம் கரைந்த பிரமை! மனம் கூட லேசாகிப் போனது... அந்த சுகத்தில் கண்கள் செருகின... வாசலின் அழைப்பு மணி ஒலிக்கவும் விழித்த போதுதான் தான் சற்று தூங்கியே விட்டது புரிந்தது... தொட்டியின் நீர் குளிர ஆரம்பித் திருந்தது...

எவ்வளவு நேரமாய் இப்படி கிடந்து விட்டோம்.. என்ற பரபரப்புடன் ஒரு நைட்டியை உருவி அதற்குள் நுழைந்தவள் கதவைத் திறந்தாள் - அவள் நினைத்தது போல வெளியே நின்றது ஒட்டலின் பணியாள் அல்ல இவளது முதலாளி!



"ஸாரி... ஸார் குளிக்க ஆரம்பிச்சு... அப்படியே.."

உடலைத் துவட்டாமல் போட்டிருந்த மெல்லிய உடை அவளது உடலுடன் ஒட்ட ஆரம்பித்திருந்தது. பன்னீரில் ஊறிய ரோஜா போல தன் உடல் அற்புதமாய் மணப்பதை நுகர முடிந்தது...

"பரவால்லை... உன்னை இப்படி பார்ப்பது முதல் முறை."

"சாப்பாடு வந்திருக்குமோன்னு நினைச்சு இப்படியே வந்துட்டேன்."

"சாப்பிட உன்னைக் கூட்டிட்டுப் போகலாம்னு வந்தேன்."

"அஞ்சு நிமிஷத்துல உடுத்திட்டு."

"கட்டுறதை விட இப்படி விரிச்சு விட்டா உன் கூந்தல் அழகாயிருக்குது மஹதி..."

"அது.. வேலை செய்ய இடைஞ்சலாயிருக்கும்."

"ம்ம்... பிறர் வேலைக்கும் இடையூறுதான்" புன்னகைத் தவன் உள்ளே வந்துவிட, இவளுக்கு கடும் சங்கடமா யிருந்தது.

இத்தனை நேரம் நீருள் அமிழ்ந்து கிடந்த உடல் அல்லித் தண்டாய் வெளுத்து ஜில்லென்றிருந்தது. கூச்சமும் சேர உடம்பு நடுங்க ஆரம்பித்திருந்தது. உதடுகள் காற்றில் சிக்கிய மலரிதழ்களாய் துடித்தன.

"நான் உடை மாற்றணும்."

"இனி இந்த நிலையில் கதவைத் திறக்காதே, மஹதி."

தலைகுனிந்திருந்தாள் -

"இப்படி உன்னைக் காணும் எந்த ஆணுக்கும் தன்னைக் கட்டுப்படுத்துவது ரொம்ப சிரமம்... ம்ம்?"



ஒரு குழந்தையிடம் பேசுவது போல பேசியவன் அவளது கையை எடுத்து தன்னுடையதில் பொதிந்து வைத்தான் - சில்லென்ற அவளது கை சூடான அவனதில் சுகமாய் சிறைப்பட்டது.

அந்த வெப்பம் இவளை அதிர வைத்தது போல, இவளது மென்மையும் குளிர்ச்சியும் அவனை மயக்கின போலும்...

மஹதியின் இரு கைகளையும் சேர்த்து எடுத்தவன் அவற்றை தன் கன்னங்களில் பதித்துக் கொண்டான்.

சொரசொரத்த ஆண் கன்னங்களில் இவளது பட்டுக் கைகளை மேலும் அழுத்த, இருவருக்குள்ளும் அலையலை யாய் மோகம் பரவியது.

மேலும் நெருங்கியவன் அவள் காதில் கிசுகிசுத்தான் -

"பூ போலவே இருக்கே மஹதி - மிருதுவாய் மணமாய்."

உன்மத்தமான உதடுகள் இவளது உள்ளங்கையில் அழுந்த முத்தமிட, இவளது விழிகள் மயங்கி முத்துச் சிப்பியாய் மூடின.

"ஏதேனும் பேசேன் மஹதி..."

அந்தக் குரல் இவளது மூளையைத் தட்டியது -

"இது... நீங்க தரும் தண்டனை... நான் அதை மௌனமாய் ஏற்றுக்கறதுதானே முறை?"

இவள் சொன்னதும் பொக்கிஷமாய் பற்றி வைத்திருந்த கைகளை நழுவ விட்டுப் பின் வாங்கினான் -

"சாப்பாட்டை உனக்கு இங்கேயே அனுப்பிடறேன். நாளை காலை ஏழு மணிக்கெல்லாம் தயாராயிரு... வேலையிடத்திற்குப் போகணும்.."



அவன் வெளியேறியதும் கதவைத் தாளிட்டவள் உடலைத் துடைத்து அந்தத் தூவாலையாலேயே தன்னைப் போர்த்தியபடி சரிந்து உட்கார்ந்தாள்.



## 11

திறந்த ஜன்னல் வழியே குளிர் காற்றும், அலைகளின் இரைச்சலும் நுழைந்திருந்தன... உறங்கத் தோதுவான சூழல்தான். ஆனால் பிடிவாதம் பிடிக்கும் குழந்தை போல உறக்கம் இவள் பிடிக்குள் சிக்காமல் நழுவி நழுவி ஓடியது. ஒன்றிலிருந்து எண்ணத் தொடங்கியவள் பல நூறுகளை எட்டியுங் கூட தூக்கம் வசப்படவில்லை. மோகம் மகுடி ஊதி மதனின் நினைப்பை எழுந்து ஆட விட்டது!

மோனத்தில் ஆழ்ந்து நின்றிருக்கும் மரங்களை கலைக் கும் குறும்புக் காற்று போல எண்ணிக்கையில் நிலைக்க முயன் றதை மனதை கள்ள நினைவுகள் முட்டி கிச்சு கிச்சு மூட்டின.

சொர சொரத்த அவன் கன்னங்களில் தன் கை பட்டதும் ஏன் தன் உடம்பெல்லாம் ஒரு கிளர்ச்சி?

பட்டான தன் உள்ளங்கைகள் பதிந்ததும் அவனும் பரவசமானானோ. அந்த பரவசம் தாளாமல் தான் அவனது உதடுகள் அத்தனை அழுந்த முத்தமிட்டனவா?

நினைவையும் கூட தாளாமல் மஹதியின் மலருடல் ஒடுங்கியது.

புரண்டு தத்தளித்தது.

இது ஆர்வமும் ஆசையுமான தொடுதல் என்று புரிந்தும், தன் கூச்சத்தை அதிர்ச்சியை மறைக்கத்தான் அப்படிச் சொன்னாள் -

அதாவது அது அவன் தரும் தண்டனை என்று...

அந்த வார்த்தைக் கல் அவனை நொறுக்கி விட்டது.

அப்படி ஒரு வார்த்தைக் கடிவாளம் இட்டு தான் முரட்டுத் தனமாய் இழுக்கவில்லை என்றால் அந்த நெருக்கம் தொடர்ந்திருக்குமோ? எப்படி?

இழுத்து இறுக்கியிருப்பான்...

அள்ளி நொறுக்கியிருப்பான்?

கன்னங்கள் சூடேற புரண்டு தவித்தாள் -

இப்படி கொதிக்கும் கன்னத்தில் அவனது உதடுகள் பன்னீராய் முதலில் பதிந்து பின் அனலாய் மாறியிருக்குமோ?

எழுந்தவள் தண்ணீரை முகத்திலும் கழுத்திலுமாய் அள்ளித் தெளித்துக் கழுவினாள் - அதுவும் தப்பானது -

அதுவரை கைக்கெட்டாமல் நின்று கெக்கெலித்த தூக்கம் இப்போது கண்ணுக்கே தட்டுப்படவில்லை.

நாளை வேலை கடுமையாய் இருக்கும்... சமாளிக்க முடியுமா? ஆறு மணிக்கு அலாரம் வைத்தது அநாவசியம் - தூங்கினால்தானே எழ?

ஆனால் அவளையும் அறியாமல் உறங்கியவள் அலார ஒலிக்குத்தான் எழுந்தாள் - தயாராகி குறிப்பெடுக்க, தேவையானவற்றை எடுத்து வைத்தவளுக்கு உணவு அறை தேடி வந்தது.



மதனின் முகம் பார்க்கத் தயங்கியவள் ஐந்து நிமிட முன்னதாகவே போய் காரில் அமர்ந்து கொண்டாள் - ஏது எழுதப்படாத வெற்று காகிதத்தைப் பார்த்தபடி இருப்பதா காட்டிக் கொண்டாலும் மஹதியின் கண்கள் அடிக்க விடுதியின் வாசலைத் தொட்டு மீண்டன.

அவன் வர எடுத்துக் கொண்டது ஐந்தே நிமிடங்கள்தான் அது அவளுக்கு ஒரு மாத காலம் போல நீண்டது.

ஒரு அந்நியன் தன்னை நெருங்கித் தொட்டது தனக் ஆத்திரமூட்டியிருக்க வேணும் - அருவருத்து குறுகியிரு கலாம்...

கையாலாகாத அழுகையில் முடிந்திருந்தால் கூட அ ஒரு நியாயம்.

'தொட்டால் பூ மலரும்' என்பதாய் ஏனிப்படி உடலு உள்ளமும் அந்த நொடி விம்மி மலர்ந்தன?

இவன் தொடுதலுக்காகவே பிறந்தது போலொ பரவசம்?

அதையே நினைத்து இரவில் தூக்கமின்றி புரண்ட நியாயமே இல்லை.

அது உடம்பின் நொடி நேர சறுக்கல் என்று வைத்தாலு பிறகேனும் - மனம் சுதாரித்திருக்க வேண்டாமா?

இப்போதும் மதனைக் காண கண்கள் அலை பாய் கின்றன... கண்டதும் அவனை அப்படியே உறிஞ்சி கொள் வது எதனால்?

விஞ்ஞானம் இதை ஹார்மோனின் சேட்டை என்ற விவரிக்குமானால், தன் பருவமடைந்த அல்லது விவரமறிந் கடந்த சில வருடங்களில் எங்கே பதுங்கிக் கிடந்தன... இந் உணர்வுகள்... சபலம்?



ஜொள்ளு ஜெகன் கூட வசீகரமானவன்தான்.

தான் சற்று விட்டுத் தந்திருந்தால் ஒட்டும் ரகம்.

ஆனால் எவரிடமும் கவனமும் கண்டிப்புமாய் நின்ற தனக்கு ஏன் திடீரென இந்தத் தடுமாற்றம்?

மதனும் இவளை நேருக்கு நேர் பார்ப்பதைத் தவிர்த்தான்.

முகம் சிறுத்திருந்து.

ஒரு பெண்ணிடம் முறை மீறி விட்டோமே என்ற வருத்தமா?

அல்லது தன்னிடம் சம்பளம் பெறுபவளிடம் அவமானப்பட்ட கடுப்பா? மௌனம் அவர்களிடையே கெட்டிச் சுவராய் நின்றது.

இருபது நிமிடப் பயணத்தின் பிறகு தொழிற்சாலைக்காய் அவன் தேர்ந்தெடுத்திருந்த இடம் வர, இறங்கினார்கள்.

சில மரங்களைத் தவிர, அது பொட்டல் காடுதான் - வெவ்வேறு வடிவங்களில் அங்கும் இங்குமாய் சில பாறைகள் -

மதன் சரிவில் விரைந்து இறங்க, தொடர்ந்த இவள் கவனமாகவே இருந்தும் சறுக்கி விட்டது. விழா விட்டாலும் சறுக்கிய இவளது பாதம் ஒரு சின்ன பாறையில் முட்டி நின்றது. மோதிய வேகத்தில் இடது பெருவிரலின் முனைக் கிழிந்து வெதுவெதுப்பாய் ரத்தம் வழிய ஆரம்பித்தது. நிலை குலைந்து நின்றவளுக்கு சற்று நேரம் ஏதும் ஓடவில்லை.

அருகேயிருந்த மேஸ்திரி -

''அடடே... சரிவுல நடக்கையில நுனிவிரலை அழுத்திக்கணும்மா - பரவால்ல... என்ஜினியரு தம்பிட்ட பிளாஸ்திரி இருக்கும் - வாங்கியாரேன்'' என்றபடி போனார்.



கைப்பையிலிருந்த நாப்கின்னால் ரத்தத்தைத் துடைத் பின் அவர் நீட்டிய பிளாஸ்திரியை விரல் முனையில் ஒட் வைத்தாள் -

வேலை ஆரம்பமானது. விவரித்த, விவாதிக்கப்பட் புது யோசனை, திட்டங்களை சுவாரஸ்யமாய் கேட்டப குறிப்பெடுத்தாள் -

முதலில் பேசாமலிருந்த பெருவிரலின் நுனி, தனக்கு போதிய கவனிப்பு கிடைக்கவில்லை என்ற பொருமலிலே என்னவோ கடுக்க ஆரம்பித்தது!

தன் உடம்பின் பாரத்தை முடிந்தளவு வலது காலி போட்டவள், வேலையில் மும்முரமானாள் - ஆனா வெயில் ஏற ஏற தன் முகத்தின் வாட்டத்தை மஹதியா மறைக்க முடியவில்லை.

''என்னை உட்கார வை'' எனக் கேட்டன காலு பாதமும் - ஆனால் வெட்ட வெளி, பொட்டலில் எங்கிருந் முளைக்கும் நாற்காலி? தொடர்ந்து நிற்க முடியாது என்ப புரிந்தது...

ஆனால் அதை யாரிடம், எப்படி சொல்ல..?

''என்ன?''

சுருக்கென கேட்டான் மதன்.

''முன்புறமுள்ள அரை ஏக்கரில் கட்டிடம் வே டாம்னீங்க ஸார்... அதைக் குறிச்சாச்சு.''

''உடம்புக்கு என்னன்னேன்?''

''விரல்... கால் வலி.''

விரல் நுனியின் கட்டை கவனித்து விட்டான்.

''நேற்றிரவு கூட ஏதுமில்லையே?''

இவன் பார்வையிலிருந்து எதுவுமே தப்பாதோ?

''இப்பதான்... சறுக்கி கல்லில் பட்டு... ரத்தம் வந்து.''

''பிளாஸ்திரி நனைஞ்சிருச்சு - டாக்டரிடம் காட்டிரலாம்.''

''இல்ல ஸார் - ஒரு நாற்காலி இருந்தால் - உட்கார்ந்து குறிப்பெடுக்கறேன் - அதாவது அது உங்களுக்கு மரியாதைக் குறைவாய் படலன்னா.''

''சந்துரு நீங்க குறிப்பெடுங்க - நான் மஹதியை டாக்டரிடம் காட்டிட்டு வரேன். டவுனில் யார் நல்ல டாக்டர்?''

''நீங்க எதுக்கு சார் அலையணும் - நானும் டிரைவருமாய் இவங்களை வைத்தியத்துக்குப் பிறகு விடுதியில விட்டுட்டு வரோம்.''

மேஸ்திரி சொல்ல, சற்றுத் தயங்கி பின் சம்மதித்தான் -

மருத்துவர் தந்த மாத்திரையின் தயவில், தூங்கி எழுந்தவளுக்கு உடம்பு கலகலவென்றிருந்தது.

பிளாஸ்கில் இருந்த காபி, பிஸ்கட்டுகளை சாப்பிட்டு முகம் கழுவி துடைத்த போது போனில் அழைப்பு -

''இப்ப பரவாயில்லியா மஹதி?''

ஒரே நொடியில் உருகிப் போனாள்.

''ஆமா ஸார்.. ஏதாவது வேலை இருக்கா?''

''மதியம் எடுத்த குறிப்புகளை எடுத்துட்டு வரேன் - எல்லாவற்றையும் கணினியில் தொகுத்து வச்சிடு.''

''நல்லது ஸார்.''

''ஸாரி... நேற்று போல எந்த அசம்பாவிதமும் இனி நடக்காது.''

மனசு மேலும் உருகி வழிந்தது.



''ஏன்னா... அதெல்லாம் வேலைக்கு இடையூறு... எனக் வேண்டியதெல்லாம் குறித்த நாட்களுக்குள் வே கச்சிதமாய் முடியணும் - அவ்வளவுதான் - அதுதா முக்கியம் - புரியுதில்லையா?''

''புரியுது ஸார்'' என்றாள் இறுக்கமாய்.



12

ஆக இவளது உடல்நலனோ, இவளை வரம்பு மீ தொட்டதோ அவனுக்கு ஒரு பொருட்டல்ல... வேலையும் அதன் லாபமும் மட்டுமேதான் குறி.

அதற்காய் மற்ற புலன்களை அடக்கியாள அவன் தய அவளது மற்றொரு பக்க புத்தி குதர்க்கமாய் சிரித்தது -

ஔவைப் பாட்டி பாடியது நினைப்பிருக்கில்லையா?

'புலன் ஐந்தும் வென்றான்.

தன் வீரமே வீரம்'ன்னு?

'அதாவது உருக்குலைக்கும் உணர்வு எனும் உட்பகை முறியடிப்பதுதான் நிஜமான வெற்றி' - என்று.

கல்லூரியில் அவ்வையின் இந்த வரிகளை கற்பி பேராசிரியை மாணவிகளுக்கு காதலைப் பற்றியும் இ கொண்டே எச்சரித்தார் -

'தேவர்கள் கடைந்த பாற்கடலில் முதலில் வெளிவந் ஆலகால விஷம் - பிறகே உயிர் காக்கும் அமு



கிடைத்தது - படிக்கும் இந்த பருவத்தில் அமிர்தம் என்றெண்ணி, ஆலகால விஷத்தைக் குடித்து விடாதீர்கள் பெண்களே - புரிகிறதில்லையா... இன்பக் காதல் என்றெண்ணி குழியில் விழுந்து விடாதீர்கள் - புலனடக்கம் காத்து உரிய பருவத்தில் அமுதம் பருகுங்கள் - சாதிக்க வேண்டிய வயதில் கவனம் சிதற வேண்டாம்.''

அன்று ரசித்த அந்த ஆலோசனை இன்று மதனின் தீவிர தன்னலமாக மட்டுமே தோன்றியது.

கூந்தலை இறுகப் பின்னலிட்டவள், புடவையை இழுத்து போர்த்தியபடி எடுத்த குறிப்புகளை கணினிக்கு மாற்றினாள் - மதன் வர, வேலை தொடர்ந்தாலும், அவன் விழிகள் இவளது உடை, கூந்தல் அமைப்பை கணக்கிட்டு விட்டன - இருந்தும் வழக்கமான குத்தலோ சீண்டலோ இன்றி கருமமே கண்ணாய் வேலையை முடித்தான் -

''இப்ப சாப்பாடு வரும் மஹதி - நான் சொன்ன கடிதங்களை தயார் பண்ணு - பிரிண்ட்டர் இருப்பதால் அதில் ஏதும் பிரச்சனை இல்லை - நாளைய தபாலில் கடிதங்களை அனுப்பணும்.''

''சரி ஸார்.''

''நாளை நீ வேலையிடத்திற்கு பதினொரு மணிக்கு வந்தால் போதும் - வெறுமே அளவெடுக்கற வேலைதான் - உனக்காய் ஒரு நாற்காலியை அங்கே போடச் சொல்லியிருக்கேன்.''

ஒருவித இயந்திரத்தனத்துடன் சொன்னவன் வெளியேற, இவளிடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சும் வெளியேறியது.

மதன் என்ன செய்தாலும் ஏனிப்படி அவஸ்தையாகவே இருக்கிறது? புரியவில்லை... புரிந்தது போலுமிருக்க... அவசரமாய் எண்ணங்களை வேறு திசைக்குத் திருப்பினாள்.



மறுநாள் சற்று தாமதமாகவே கிளம்பலாம் என்பதனால் குளியலறைத் தொட்டியை நிரப்பினாள் - இடது பாதத்தை நனையாதபடி உயர்த்தி வைத்தவள் உடலை வாசனையான சுடுநீரில் அமிழ்த்தினாள். இருபது நிமிடங்கள் கழித்த எழுந்தபோது புதிதாய் செய்யப்பட்டது போலிருந்தத உடம்பு! நேரமிருந்ததால் கூந்தலையும் அலசி, உலர்த்த முடிந்தது - தயாராகி, அனுப்ப வேண்டிய தபால்களுடன் அறைக் கதவை பூட்டும்போது கேட்ட சீரான நடைச் சத்தம் அவளை எச்சரித்தது.

பரிச்சயமான, சற்றே பதற வைக்கக் கூடிய காலடி ஓசை.

பளிங்குத் தரையில் கூரான, குதிங்கால் உயர்ந்த, காலணிகள் பதியும் மிடுக்கொலி.

அவசரமாய் சாவியை உருவிக் கொண்டு கிளம் முயன்றவளை நர்மதாவின் குரல் பிடித்து இழுத்தது -

''என்ன இத்தனை நிதானமாய் கிளம்பறே மஹதி? நேத்த ராத்திரி வேலை அதிகமா?''

குரலின் குத்தல் எரிச்சலூட்டியது.

ஆனாலும் பதமாகவே பதிலளித்தாள் -

''இன்று என் வேலை தாமதமாய்த்தான் ஆரம்பிக்கும்னா ஸார்.''

''அதான் ஏன்ங்கறேன்? நேத்து ராத்திரி அவரும் ரொம் நேரம் இங்கே... அதாவது உன் அறையிலேயே இருந்தா போல?''

''எங் கால் விரலில் லேசான அடி - அதனால மதிய வேலையிடத்திற்குப் போகலை... அப்ப முடிந்த வேல பற்றிய குறிப்புகளை...''

''ரெண்டு பேருமாய் சேர்ந்து கவனிச்சீங்களா?''

அந்த விஷமக் கேள்விக்கு பதிலளிக்க மஹதி விரும்ப வில்லை.

தன் முகத்திற்கும் மேனிக்கும் ஏகப்பட்ட அலங்காரங் களைச் செய்து அழகூட்டியிருந்த இந்தப் பெண் ஏன் தன் எண்ணங்களை இத்தனை அசிங்கமாய் வைத்திருக்கிறாள்?

''உனக்குப் பெற்றோர் இல்லைங்கறதைக் கேள்வி பட்டேன் மஹதி. வீட்டில் பெரியவங்களேனும் இருந்திருந் தால் யாரிடம் எப்படிப் பழகணுங்கற வரைமுறை யெல்லாம் சொல்லித் தந்திருப்பாங்க. இப்படி இளவயசு முதலாளி யோடு ராத்திரிப் பொழுது, தனியே வேலை செய்ய நேர்ந் தால், ஒண்ணு வேலையைப் பொதுவான இடத்தில் வச்சு முடிக்கணும். இல்ல, கூட வேறு யாரேனும் இருக்கறது போல பார்த்துக்கணும்.''

உபதேசித்தாள் -

''யாரைக் கூப்பிட..''

''நான் இருந்தேனே..''

''நீங்க கன்னியாகுமரி வருவதாய் ஸார் சொல்லியிருந் தாலும், எப்போ வந்தீங்க என்பது எனக்குத் தெரியாது..''

''தெரிஞ்சிருந்தால் அந்தத் தப்பு நடந்திருக்காதில்லையா?''

பேச்சின் போக்கும், தொனியும் பிடிக்கவில்லைதான் - ஆனால் முகத்தில் எந்த உணர்வையும் வெளிக் காட்டாமல் நின்றிருந்தாள் மஹதி. அங்கிருந்து நகர்ந்து விடலாம் - இது போன்ற அர்த்தமற்ற, இரட்டை அர்த்தப் பேச்சுகளைப் பொறுத்துக் கொள்ள அவசியமில்லை. ஆனால் விலகினால், நர்மதாவின் கோபம் கூடும் - ஆக தணிந்து நின்றாள் -



''இனி இப்படி நடக்க வேண்டாம்'' - உத்தரவு வந்தத

''இதை மதன் ஸாரிடமே சொல்லிடுங்க - அவர் முதலா - அவர் சொல்படி தானே நாங்க வேலை செய்யக் கூடும்'

''அடடா... உத்தமமான ஊழியை.. அவர் சொன் தெல்லாம் செய்திடுவியா?''

''அந்த நம்பிக்கையில்தான் என்னை இங்கு வ கூட்டிட்டு வந்திருக்கார், மேடம்..'' அடங்காத நாக்கு து காய் பேசி விட்டது.

''உன் மிரட்டலை எல்லாம் மதனிடமே வைத்துக் கொ என்று சூசகமாய் சொல்லியாயிற்று.

''கிளம்பறேன் மேடம்.''

நர்மதா தன்னை நெருங்கிய அதே வேகத்துடனு மிடுக்குமாய் அங்கிருந்து நகரத்தான் இவளுக்கும் ஆ ஆனால் காலில் புண்பட்ட பெருவிரல் அதை அனுமதி வில்லை.

விந்தி நடந்தவளுக்கு மதனின் மீது ஆதங்கம்தான் -

தன்னை வேற்றூர் கூட்டி வந்தவருக்கு நாலு பேரி வாயில் தான் விழாமலும் பார்த்துக் கொள்ளும் கட இல்லையா - என்று.

வேலை முடித்து, வரவழைக்கப்பட்ட உணவுப் பொ லங்களைப் பிரித்து தக்காளி சாதம், உருளை வறுவ மென்றபோது அது குறித்துப் பேச சமயம் வாய்த்தது.

மதன் நெருங்க, உணவு பொட்டலத்துடன் எழுந்தாள்

''இது மாதிரியான மரியாதை எல்லாம் தேவையில்ல காலில் வலி குறைஞ்சிருக்குதா - புண் ஆறுதா?''



''இதனால் உங்க வேலைக்கு ஒரு தடங்கலும் வராது-'' நறுக்கென குத்தும் பதில்!

''தபாலை அனுப்பியாச்சா?''

''ஆமா ஸார்... ஆனால்...''

தானும் ஒரு கவளத்தை வாயிலிட்டபடி இவளைப் பார்த்தான் -

''காலை நர்மதா மேடம் என்னிடம் பேசினாங்க.''

''ம்ம்.''

''நேற்றிரவு நீங்க... என் அறைக்கு வந்ததைப் பற்றி கொஞ்சம் கோபமாய், கசப்பாய் பேசினாங்க... அவங் களுக்கு அது பிடிக்கலை.''

''நேற்றிரவு... வேலை மட்டும்தானே நடந்தது?''

தனக்கும் குத்தலாய் பேசத் தெரியுமென காட்டிக் கொண்டான்.

''ஆனால் அவங்களுக்கு உங்க மேல் நம்பிக்கை இல்லை - நீங்க வேலையை மட்டும் கவனித்ததாய் மேடம் நினைக் கலை.''

வலிக்கட்டும் என்றே அழுந்தக் குட்டின இவளது வார்த் தைகள். ''வேலைக்காக மட்டுமே உன்னை இங்கே அழைச்சு வந்தேன்.''

''அதேசமயம் என் பெயருக்கும் பழுது வரக்கூடாதில்லையா?''

''அதாவது உன் நல்ல பெயருக்கு? நீ ரெண்டு இலட்சம் கையாடி, அதை மறைப்பதற்காக கணக்கைத் திருத்தவும் துணிஞ்சதையும், அதற்குத் தண்டனையாகத்தான் இங்கே வந்திருக்கிறாய் என்பதையும் மறந்தாச்சா மஹதி?''

திகைத்து நின்றாள் - பதிலுக்குக் குத்தவும் தோன்றாதபடி..!





''இன்று இரவு நமக்கு இந்த நிலத்தை விற்ற பெரியவரின் வீட்டில் விருந்து மஹதி - போக தயாராயிரு..'' என்று மதன் சொல்ல இவள் குழம்பி நின்றாள்...

விருந்து விசேஷமெல்லாம் எப்போதோ சொப்பனத்தில் நிகழ்ந்தவை போல மங்கலாய் நினைவிலுண்டு - அது பெற் றோரோடு இருந்த காலம்... உறவினர் அதிகம் இவர்களைத் தேடி வந்ததில்லை என்றாலும் வந்தவர்களை விரும்பி உபசரித்ததுண்டு. சிறு வயதில், ஒரு ராஜகுமாரன் வந்து ஒரு எளிய பெண்ணை மீட்டதாய் கதை சொன்ன அம்மா, பிள்ளைகள் இருவருக்கும் விவரம் வந்த பின் உடைத்தே விவரம் தந்தார்கள் -

''எங்க கல்யாணம் கொஞ்சம்... ரொம்பவே வித்தியாச மாய் நடந்தது - அதுவும் இருபது, இருபத்திரண்டு வருஷங் களுக்கு முன்னே.. அப்போதும் பெண்கள் படிப்பதும், வேலைக்குப் போவதும் சகஜமாயிருந்தது என்றாலும் எங்கப்பா எங்களை அதிகம் படிக்க அனுமதிக்கலை. நாலு பெண்களில் மூத்தவளை கல்லூரிக்கு அனுப்பினால், அதை ஒத்துப் படித்த மாப்பிள்ளையைத் தேடணும் - அதற்கு வீக்கமான வரதட்சணையை அழணும்... பிறகு இளைய பெண்களும் சட்டமாய் கேட்பாங்கல்லையா -

'அக்காவிற்கு நாங்க சளைப்பா?'ன்னு..

ஆக பொதியை, அதாவது பொறுப்பை ரொம்பப் பெரிதாக விடவில்லை. எங்கப்பா - பள்ளிப் படிப்பு முடிச்சதும் 'கேட்டு வர்ற மாப்பிள்ளைக்கு - அதுவும் சீர் பட்டியலில்லாத வர்றவனுக்குத்தான் எம்பொண்ணு'ன்னுட்டார்."

"அப்ப நீங்க இன்னும் அழகா இருந்திருப்பீங்க இல்லம்மா?"

இந்நேரம் அப்பாவும் கதையில் இடை புகுவார் -

"எம்மனைவி ஆன பிறகுதான் உங்கம்மா மினுமினுங்கறா.. கல்யாணத்தப்ப பாவம் - சிறு மரப்பாச்சி பொம்மையாட்டம் நின்னா."

"மாப்பிள்ளை மட்டும் எப்படி இருந்தாராம்?"

மித்ரன் அம்மாவை விட்டுத் தரவே மாட்டான்!

"மாப்பிள்ளைக்கு 34 வயசு - ஹோட்டலில் சரக்கு மாஸ்டர் - வளப்பமாய் தொந்தியும் வறட்டுக் குரலுமாய்.."

பிள்ளைகள் குழம்ப, அம்மா விளக்குவாள் -

"உங்கப்பா சொல்றது சரிதான்."

"ஓஹோ உங்களைக் கட்டின பிறகுதான் இப்படி கட்டாய், கம்பீரமாய் மாறிட்டாரா அப்பா?"

"அடடே சமர்த்து... அப்படி ஒருத்தர்தான் என்னை முதல்ல பெண் கேட்டு வந்தாரு. முக லட்சணம் இருந்தாலும் இப்போதுள்ள வயசுப் பெண்களைப் போல எங்களுக்கு நாகரீகம் நறுவிசெல்லாம் போதாது - அதுக்கு எங்கே காசு? ஆக எண்ணெய் வழியற பொம்மையாட்டம் நின்னோம் - ஆனா மனசுள்ள பொம்மை! அப்ப எனக்கு வயசு பதினேழு - இரண்டு மடங்கு வயசுல, மாமா போல நின்னவரைக்



கட்டிக்க பயம், துக்கம்... கூடவே அப்பாட்ட பய
பொம்மை வாய் திறக்கலாகுமா? ஆக கல்யாண மேடை
வந்தாச்சு.."

"ஐயைய்யோ... பிறகு?"

"மாப்பிள்ளைக்கு வாங்கின மோதிர அளவு பத்தல
குண்டு விரலுல நுழையலைங்கவும், முந்தின ராத்திரி கு
மப்பிலும், மிச்ச தலைவலியுமாயிருந்த மாப்பிள்
எகிறிட்டாரு - மாலைய பிச்சுப் போட்டு அவரு தாம் தூம்
குதிக்க, 'அடிச்சுதடா அதிர்ஷ்டம்'னு நான் மனையில பே
உக்காந்துட்டேன்!"

"ஹை அதெப்படி விடுவாங்க? சரியாச் சொல்லுங்கப்ப

"சரக்கு மாஸ்டர் கூச்சலில் அரண்டு உங்கம்மா, அ
கம்மா, தங்கச்சிமார் எல்லாரும் அழ, உங்க தாத்தா நி
குலைஞ்சுட்டார் - புதுத் திருப்பத்தை எப்படிச் சமாளிக்க
தெரியாத திண்டாட்டம்."

"உங்கப்பாவும் எங்கத் தெருதான் - பார்த்த பரிச்ச
மட்டுந்தான் - ஆனா அந்நேரம் எம்மேல இரக்கம்
திருக்குது - மாப்பிள்ளை வெளியேறிட, அப்பாக்கு அவ
தொடர்ந்து கெஞ்ச கூடத் தோணலை... பிரமைப் பி
சாப்பல நின்னவர்கிட்ட இவர் போய் கேட்க, சம்மதம் கி
சிருச்சு."

"ஓ..? அப்புறமும் ஏம்ம்மா உங்க உறவுக்கார
அதிகமா இங்க வர்றதில்ல... நீங்களும் போறதில்ல?"

"வேத்து ஜாதியாம். மத்த மூணு பொண்ணுங்களுக்
இனி எப்படி கல்யாணமாகுன்னு மத்தவங்க பயமு
தினதால விழுந்த இடைவெளி - அதுவும் நல்லதுக்குத்த



- வேண்டாத நெருக்கடியும், போதனையும் இல்லைல்ல? உறவுல வேகிறதைவிட ஒரு கட்டு விறகுல வேகலாம்னு ஒரு பழமொழி உண்டு.

பாலில் ஒரு சொட்டு தயிர் விட, மொத்தமும் தயிராகறது போல ஒரு உறவின் வழியே எல்லோரும் ஐக்கியமாகிறது ஒரு வகை -

பாலில் கல் உப்பைக் கரைச்சாலோ - திரிஞ்சு வீணாயிடும். அது மாதிரி - எந்த வம்பும் வேணாம்னு ஒதுங்கிட்டோம் - உங்கப்பா வீட்டிலேயோ, பையன் ஒரு வார்த்தை நம்மைக் கலந்து ஆலோசிக்காமல் தாலியைக் கையில் எடுத்துட்டானே என்ற வீம்பு!"

ஆனால் விபத்து பற்றி அறிந்ததும் இருபக்க உறவுகளும் ஓடித்தான் வந்தார்கள் - அம்மா வழி உறவான பிரபாகர் மாமா எப்போதுமே பாசமானவர்தான் -

பெற்றவர்களை ஒருசேர இழந்த துக்கம் கடுமையானது. அந்நேரம் ஆதரவாய் நின்றது உறவு. ஆனால் ஒரு மாதம் முடிவதற்குள்ளாகவே மாமாவிடம், தானும் அண்ணனும் தனியே தங்கவே விரும்புவதை மஹதி சொல்லி விட்டாள் - பணம் ஒரு பிரச்சனையாய் இல்லாதது போக, மாமாவும் அதை முறையாய் செய்து தர, எல்லாம் சுமுகமாய் போனது.

தனித்திருந்த அந்தக் காலத்தில் ஏது விருந்தும் விழாவும்?

ஆக அந்த வார்த்தையே இவளை மிரட்டியது.

ஆனால் மஹதி மறுக்க மறுக்க, மதனின் பிடிவாதம் இறுகியது.



"இப்ப என்ன - அருணாச்சலம் ஐயாவே உன்னை நேரில்
வந்து அழைக்கணும்னு எதிர்பார்க்கறியா?"

"இது வாங்குகிறவருக்கும் விற்பவருக்கும் இடையே
ஒரு மரியாதை நான் உங்க காரியதரிசி..."

"இல்ல - உதவிக்கு உடன் வந்திருக்கும் ஒரு நம்பகமா
பெண்."

"எனக்கு மறக்கலை - இவள் தப்பி விடக் கூடாதே என்று
கூட்டி வந்திருக்கும் ஒரு குற்றவாளி - கிரிமினல்!"

"மஹதி - நீ அதிகமாப் பேசறே."

"உண்மை - அதிகமாய்ப் படுதா?"

முரண்டினாலும் அவனோடு போய் விருந்தினராய்
அமரத்தான் நேர்ந்தது - வழக்கம் போல எளிய புடவைதான்
- கூந்தலை மட்டும் சற்றுத் தளர்வாய் பின்னியிருந்தாள் -
போகும் வழியில் அவன் வாங்கித் தந்த ஜாதி மல்லிப்
பூச்சரத்தை வாங்கத் தயங்கினாள் -

"விருந்திற்கு நம்மை மதிச்சு அழைச்சிருக்காங்க - நாமும்
மதிப்பாய் போறதுதான் மரியாதை."

பூவை வாங்கினாள்.

கைப்பையிலிருந்து ஒரு கிளிப் எடுத்தவள் அழகாய்
சூடிக் கொண்டாள். இப்படி தலை நிறைய பூச்சூட்டுவது
தாயோடு தொலைந்த சிங்காரம்!

பெரியவரின் வீட்டில் ஏற்கெனவே கலகலவென்று பேசிச்
சிரித்திருந்த நர்மதாவைப் பார்த்ததும் மனம் கலங்கியது -
அவளுக்கு ஒரு பெண் துணையாய் இருக்கவே தன்னை
மதன் அழைத்து வந்தாரோ என்ற சந்தேகம் நர்மதா நடந்து
கொண்ட விதத்தில் அழிந்தது - அந்த வீட்டுப் பெண்களை

நர்மதா ஏறிட்டும் பார்க்கவில்லை - மாறாக பெரியவரின் மருமகனோடு இழைந்து பழகினாள் - பார்வைக்கு இளவரசன் போலிருந்த அந்த வீட்டு மாப்பிள்ளைக்கும் மாமனார் வீட்டில் பொழுது நகராத பிரச்சனை போலும்... புதியவளைப் பற்றிப் படர்ந்தான் -

அவர்கள் பக்கம் திரும்புவதற்கே சற்று சங்கோஜப்பட்டவள் அதே நிலைமையில் இருந்த அவ்வீட்டுப் பெண்களுடன் மரியாதையுடன் சற்று பேசினதோடு சரி.

உணவு அற்புதமாய் இருந்தாலும் அளவோடு சாப்பிட்ட நேரம், பேச்சு அங்கும் இங்குமாய் அலைந்து திருமணம் என்பதில் வந்து நின்றது. ஆரம்பித்தது பெரியவர் அருணாச்சலம்தான் -

''உங்களுக்கு வியாபாரத்துல திறமை, நேர்மை எல்லாம் இருக்குது தம்பி... இனியும் தாமதம் பண்ணாம கல்யாணம் பண்ணிடணும்.''

''நமக்கான துணையும் நேரமும் இணங்கி, நெருங்கி வரணுமேங்க...''

மதன் சொல்ல,

மஹதி மிகக் கருத்தாய் சாதத்தைப் பிசைந்தாள்!

மதனுக்குக் கல்யாணம் என்ற பேச்சிலேயே தன் தொண்டை இறுகுவதை அவளால் உணர முடிந்தது -

''அதுக்கான வயசும் இருக்கே தம்பி? காலாகாலத்துல பிறக்கற பிள்ளைங்க தானே நாம தளருகிற சமயமாய் வளர்ந்து நமக்குத் தோள் தருவாங்க?''

''அது ஒரு வித சுயநலம் இல்லையாங்க?''

நர்மதா உற்சாகமாய் அதற்குத் தலையாட்டினாள் -



''யெஸ் - இதில் நானும் மதுவின் கட்சி - பிறக்
பிள்ளை என்னைப் போல இருக்கணும், நான் தேர்ந்தெடுக்
படிப்பைக் கற்கணும், நான் சேர்த்த சொத்தைக் கட்
காப்பாற்றணும் எதிர்பார்ப்பது ஒரு வித சுயநலம் தான்.'

இந்தக் கருத்து மஹதியை திடுக்கிடப் பண்ணியது தா
தன் தந்தை தாயுடன் சேர்ந்திருந்த நாட்கள் உள்ளே
குதூகலப் படமாய் ஓடின - ஒருவனுக்கு ஒருவர் காட்
பரிவு, விட்டுத் தந்த கனிவு, மற்ற உறவுகளை, சுகங்க
விட்டுத் தர தயாராயிருந்த தியாகம்... இதில் எங்
இருக்கிறது சுயநலம்? எல்லாம் அன்பின் ஆட்சிதானே?

''நீ என்ன நினைக்கறே மஹதி?''

மதனின் கேள்விக்கு மென்மையாய் பதில் வந்தது -

''குடும்பத்தில் அன்பு இருந்தால்... போதும்... அதுதா
நிறைவு... வேறேதும் குறையாய் தெரியாது.''

''பலே... தம்பி - திறமையான உதவியாளர் மட்டும
தெளிவானப் பெண்ணுங் கூட... மஹதி ஆலோசனைப்
நடந்தா எல்லாம் ஜெயந்தான்'' பெருங்குரலில் ஆமோ
தார் பெரியவர்.

உணவு முடிய, மஹதி தன் தட்டுடன் எழுந்தாள் - நர்ம
தனது எச்சில் தட்டையும் இவளிடமே அலட்சியத்துட
நீட்ட, துளி தடுமாறினாலும், அதை வாங்க மஹதியின்
நீள,

''நீயே உன் தட்டை எடு நர்மதா... என் மதியின் மந்
மஹதி, இந்த வேலை எல்லாம் செய்தால் அத்தனை
கௌரவமாய் இருக்காது...'' - தடுத்தான் மதன்.





## 14

அவன் தன்னை அப்படித் தாங்கிப் பேசியதை மஹதியால் நம்பவே முடியவில்லை... அன்றிரவும் மனதின் ஆனந்த உளைச்சலில் மறுபடி உறக்கம் தள்ளிப் போனது... ஆனால் மறுநாளின் வேலை உற்சாகமாகவே நடந்தது. ஒவ்வொரு நாளும் வேலை கணிசமாகவே நடந்து முடிய,

''கோயில், விவேகானந்தா பாறை, காந்தி மண்டபம், எல்லாம் பார்த்திடலாம் - பிறகு கார் தரேன் - கடைகளையும் ஒரு சுற்று பார்த்திடு மஹதி'' என்று ஊழியர்களுடன் ஒரு மாலையை சேர்ந்தே கழித்தான் மதனமோகன்.

பிறகு தனியே கடைகளைச் சுற்றி வந்தவளின் மனது முழுக்க உல்லாசம் நிரம்பி வழிந்தாலும் பறந்து விடலாம் போன்ற இலகுவிலும் இருந்தது. சங்கு, சிப்பிகளால் உருவான ஆபரணம், கைவினைப் பொருட்களை கண்டு ரசித்தாலும் வாங்கி பையை நிரப்பவில்லை அவள் - வாங்கியவைகளை வீட்டில் அடைத்தால் பிறகு பராமரிப்பதும் சிரமம் - ஆனால் பிரியமாய் பழகும் அண்டை அயலாருக்காய் சில சிறு அன்பளிப்புகளை வாங்கிய பின் முகத்தில் மோதிய உப்புக் காற்றை அனுபவித்தபடி கடற்கரையை நோக்கி நடந்தவள், திகைத்து நின்று விட்டாள்...

''அடடே... நீங்க எப்படி இங்கே...?''



''நம்ப பாஸ்தான் வரச் சொன்னார் - உங்களிடம் அ
பற்றிச் சொல்லலைப் போல...?''

''இல்லையே... நேற்றுதான் நம்ப ஆபீஸிற்கு போ
செய்து ராதாவிடமும் பேசினேன்... அவ கூட சொல்லலியே?

''வேறென்ன சொன்னாங்க?'' வெட்கப் புன்னகையுட
வினவிய ஜெகனைப் புதியவன் போலப் பார்த்திருந்தாள்
பல மாதங்களாய் வேலை நிமித்தம் பழகியவர்கள் எ
றாலும் வேற்றூர் வந்து ஜெகனைச் சந்தித்தது பிறந்த வீட்
சொந்தங்களைப் புகுந்த வீட்டில் பார்ப்பது போல ஒ
பரவசமாய்தான் பட்டது!

முன் தினம் அலுவலகத்திற்கு தொலைபேசியில் தொடர்
கொண்ட மஹதி குறையும் பட்டாள் -

''என்ன ராதா - என்னைச் சுத்தமாய் மறந்தாச்சுல்ல?''

''உன்னைப் பற்றி நேற்றுங்கூட பேசினோமே -
கொண்டு வர்ற புளிக் குழம்பைப் பற்றி.''

''ஆபீஸில் எல்லாரும் நல்லா இருக்காங்கல்ல?''

''வழக்கம் போலதான் - மித்ரன்ட்ட உன்னைப் பற்றி கே
டுக்குவேன் - எப்படி இருக்குது கன்னியாகுமரி - புதுசா
வாங்கியிருக்கிற இடம் எல்லாம்?''

''கடலின் இரைச்சலையும் காற்றையும் அனுபவிக்க
தோடு சரி - கடல் நுரையில் கூட இன்னும் நான் கா
நனைக்கலை - அத்தனை வேலை - நம்ப நிலம் இருக்கற
அரை மணி நேர பயண தூரம் - காலை எட்டு மணிக்
ஆரம்பமாகும் வேலை, மாலை ஐந்து வரை ஓடும் - பிற
அறைக்கு வந்ததும் அங்கே குறிப்பு எடுத்தவைகளை
எல்லாம் கம்ப்யூட்டரில் பதியணும் - பிறகு...''

''போதும் தலை சுத்துது - எப்ப திரும்பறே?''

''வேலை முடியறதைப் பொறுத்து - ஹேமாவிற்கு வேலையில் ஏதும் சந்தேகமானால்...''

மறுமுனையில் 'களுக்' என சிரித்தாள் ராதா.

''என்ன?''

''அதெல்லாம் ஜெகன் கவனிச்சுக்கறார்.''

''நம்ப ஜொள்ளு ஜெகனா?''

''கொள்ளுன்னா வாயைத் திறந்து, கடிவாளத்திற்கு இறுக மூடிக்கறது போல இருந்த ஜெகன் ஸார் இப்ப கல்யாண கடிவாளத்திற்கு சம்மதிச்சாச்சு.''

''விவரமாச் சொல்லேன்.''

''நீ வந்ததும் சொல்றேம்ப்பா - கூடிய சீக்கிரம் ஜெகனும் ஹேமாவும் தம்பதிகளாகப் போறதுதான் விஷயம்.''

''அடடே.. கேட்க சந்தோஷமா இருக்குது.''

நேற்று அவளை மகிழ்வித்த செய்தியின் நாயகன் இன்று தன் முன் பிரதியட்சமானதில் மஹதியின் உற்சாகம் கரை புரண்டது!

''வாங்களேன் ஜெகன் - ஏதேனும் டிபன் சாப்பிட்டபடி பேசலாம்.'' வெளியே ஒலிபெருக்கிகள் வெவ்வேறு வித இசைகளை முழக்கி காதிற்குக் கதம்பமாக்கிக் கொண் டிருந்தன -

அதிலிருந்து தப்பவே ஒரு உணவகத்தினுள் புகுந்தனர் - இவள் கையிலிருந்த பையை அவன் வாங்கிக் கொள்ள, தனக்காய் காத்திருந்த வாகனத்தை அனுப்பி விட்டு மஹதி அவன் எதிரே அமர்ந்தாள் - பரிமாறப்பட்ட ஆறிய பூரி



ருசிக்கவில்லை என்றாலும் ஜெகன் கூச்சலும் தயக்கமு சொன்ன அவனது காதல் கதை சுவாரஸ்யந்தான்!

சினிமாவிலும் கதைகளிலும் இவள் காதலைப் பெரி ரசித்ததில்லை என்றாலும் அறிந்த, பழகிய இருவரின் க ஒரு வித பிரமிப்பாய்தான் இருந்தது.

''ஹேமாவிடம் என் வாழ்த்தைச் சொல்லுங்க.''

''சொல்றேன்.''

''நீங்க என்ன விஷயமாய் கன்னியாகுமரி வந்தீங் றதைச் சொல்லலியே?''

''தொழிற்சாலை கட்டப் போகும் நிலத்திற்கு எ இருக்கும் ஐந்து ஏக்கரும் விற்பனைக்குத் தயார் போ மதன் ஸாருக்கு அதையும் வாங்க விருப்பம்.''

''ஓஹோ?''

''ஒரு காலனி போல அமைச்சு அதில் தொழிலாளர்க கான வீடுகளைக் கட்ட யோசனை போல.''

''ம்ம்... நல்ல திட்டம்தான்.''

''ஆனா அதிலே ஒரு சிக்கல். முதலில் நமக்கு விற் சொன்ன விலை அதாவது 25 ஏக்கரின் விலை சகாய தாய் இருந்தது.''

''பின்னே ஊரை விட்டு ஒதுங்கின இடம்... எ விற்குப் போகும்? துண்டு துண்டாய் பிய்த்து விற்பனை மொத்தமாய் ஒருவருக்கே விற்பது அவருக்கு வசதி

''ஆனா நம் தொழிற்சாலை இங்கே வர இருக்கற எதிர் நிலத்துக்காரர், தன் நிலமும் தேவைப்படும் எ புரிஞ்சு எக்கச்சக்கமான ஒரு விலை சொல்றார்.''



''இது உலக நடப்புதான். நமக்குத் தேவை எனவும் விலை உயரும், பிகுவும் பண்ணுவாங்க - பேரம் லேசில் படியாது.''

''பிரச்சனை அது மட்டுமில்லை மஹதி - ஏற்கெனவே நமக்கு 25 ஏக்கரை விற்றவர் தனக்கும் இப்ப அதிக தொகை வேணும்ங்கறார்.''

''யார் பெரியவரா? கண்ணியமானவர்... அவரா?''

''காசு விஷயத்தில் கண்ணியமாவது கருவாடாவது'' - ஜெகன் அலுத்தான் - ''வர்ற வழியில குப்பத்தில் எல்லார் குடிசை வாசலிலேயும் மீன் உப்போட காஞ்சிட்டு கிடந்துதா... அதான்'' - விளக்கினான்.

''ஏற்கெனவே விற்பனையான நிலத்திற்கு மேலும் எப்படி பணம் கேட்கக் கூடும்?''

''மதன் ஸார் ஒரு அட்வான்ஸ் தொகை மட்டும் கொடுத் திருக்கார் போல. மற்றபடி ஏக்கருக்கு இவ்வளவுன்னு பேசி முடிச்சாச்சு... இப்போ எதிர் நிலத்திற்கு ஐந்து மடங்கு விலை தரும் நீங்க எங்களுக்கும் இரட்டிப்பாய் பணம் தந்தால் தான் ஆச்சுன்னு.''

''பெரியவர் அருணாச்சலம் அப்படிப்பட்டவராய் தெரியலியே.''

''இல்ல... பேர் சதீஷ்... அவர்தான் பிரச்சனை பண்றது.''

''ஓ.. அது பெரியவரின் மருமகன்..'' - மாமனாரின் வீட்டில் பொழுது நகராததால் இப்படி வியாபாரத்தில் வில்லங்கமாய் ஏதேனும் விளையாடிக் கொண்டிருக்கிறான் போலும் என்று எரிச்சலாய் உள்ளே நினைப்பு ஓடியது.

''நம்ப ஸாருக்கு தலைக்கு மேல வேலை - நிர்வாக, புது தொழிற்சாலையை நிறுவும் வேலை எல்லாமுமாய் சேர,



இங்கே வந்து இந்த பேரத்தை சுமூகமாய் பேசி முடி யப்பா''ன்னு என்னை வரவழைச்சுட்டார்.''

''ம்ம்... நல்லபடி முடியுங்க.''

''உங்ககூட பேசினதில் எனக்கு ஒரு உபயோகமான குறிப்பு சிக்கினது மஹதி.

''பாம்பு எத்தனை நீளமானாலும் அதன் வாலைப் பிடிச்சாப் போதும் என்பது தற்காப்புக் கலையின் ஆரம்பப் பாடம். இந்த பிரச்சனையில் பெரியவர் காலில் விழுந்து விவரத்தை அவர் காதில் போட்டாலே பிரச்சனை சரி யாகிடும்னு படுது... இந்த சதீஷ் மாமனாருக்குத் தெரி யாமல்தான் ஆடறான்னு தோணுது. என்ன இருந்தாலும் அந்தக் கால மனுஷருக்கு இருக்கும் வாக்கு சுத்தம் இப்போதுள்ள இளைஞர்களிடம்... ம்ப்ச்.''

''அப்படி சொல்ல முடியாது ஜெகன் - நல்லவர்களும் கபடுள்ளவர்களும் எப்போதும் உண்டு... எல்லா வயசிலும் நம்ம மதன் ஸார் இளைஞர்தான் அவர் குறுக்கு வழியில் நடப்பது போல... ஏன் யோசிப்பது கூட இல்லையே...''

''உண்மைதான் - ஸார் நேராய் நடக்கறதால்தான் இந்த வெற்றி. தவிர வியாபாரத்துல நல்ல பெயரும் மரியாதை யும்... இங்கு வேலை பார்க்கும் நமக்கும் ''இது நம்ம நிறுவனம் - இதற்கு ஒரு கஷ்டம் நஷ்டம் வராமல் பார்த்துக்கணுங்கற வேகமெல்லாம் வருது.''

பேசியபடி இருவரும் விடுதியை நோக்கி நடந்தபோது இவளுக்கே ஆச்சரியந்தான் - மற்ற நேரங்களின் மதனைப் பற்றிக் கறுவும் தான்தானா இப்போது அவனது நேர்மையை நல் நடத்தையைப் பாராட்டிக் கொண்டிருப்பது?

பெரியவர் வீட்டின் விருந்தின்போது மதன் பேசியதை இவளும் ஆர்வமாகவே கவனித்திருந்தாள் -

'சிறு வயதில் வெற்றியை உங்க வசமாக்கிட்டீங்க தம்பி' என பெரியவர் பாராட்ட,

''எனக்குத் தெரிஞ்சதைச் செய்தேன்யா - படித்ததை, புரிஞ்சுகிட்டதை செயல்படுத்தினேன். கடவுளின் அருளும் சேர, முன்னேற முடிந்தது.''

''இப்ப படிச்ச பல பிள்ளைங்க சேமிப்புக் கிடங்காய் கிடக்குதுங்க. சேகரித்தத் தகவல்கள் பூட்டிக் கிடந்து மழுங்கினா என்னப் பிரயோஜனம்? நாம உற்பத்தி சாலை போல இருக்கணும் - படிச்சதைப் பயன்படுத்தணுமில்லையா? கல்லூரியில கொடுத்த பட்டத்துக்கா நமக்குச் சம்பளம்? அதைக் கொண்டு நாம சாதிக்கறதுல இருக்குது சூட்சுமம்.''

மதனின் வெற்றியில் தனக்கேன் இத்தனை பெருமிதமும், பூரிப்பும் என்ற வெட்கக் கேள்வியுடன் விடுதியை அடைந்தவளுக்கு அங்கு காத்திருந்தது - ஒரு அதிர்ச்சி!

ஜெகன் அவனது அறைக்குப் போய்விட, தன் அறைக்கு மிக உல்லாசமாகவே நடந்தாள் - போகும் வழியில் மதனின் அறையைக் கடந்த போது அவன் அறைக் கதவு திறந்தது.

தன்னையும் மீறி மலர்ந்த முறுவலுடன் அவன் புறமாய் திரும்பியவள் அவன் முகத்தில் கோபங் கண்டு விக்கித்து நின்றாள்!

''ரொம்ப உல்லாசமான மாலைப் பொழுது போல...?''

''அ... ஆமா - சில பொருட்களை வாங்கினேன்.''

''அதைத் தூக்கிக் கொண்டு வர ஒரு ஆள் - அதோடு அம்மணி உன்னை தாங்கிக் கூட்டி வரவும் அவன் தயார் - அப்படித்தானே?''



''யார்... என்ன சொல்றீங்க?''

''யாரோட பேசினே... வந்தே?''

''ஜெகனை கடைத் தெருவில் பார்த்தேன் -''

''அவனை உன்னோடு டிபன் சாப்பிடறதுக்காய் நா ஐநூறு மைல் கடந்து வரவழைக்கலை மஹதி.''

பேச்சின் போக்கு புரியாமல் நின்றாள் -

''கடற்கரை மணலில் கைகோர்த்தபடி நடப்பதற்கு இல்லை.''

''கால் விரலில் கட்டு போடலை... கடல் மண் புண்ணி பட்டு உறுத்தியதால் தான்...''

''அதற்காக - நீ நடக்க வேண்டாம்னுதான் உனக்கு காரைத் தந்தேன் - அதில்தானே கடைத் தெருவிற்கு போனே?''

''பிறகு ஜெகன் இருந்ததால் - டிரைவர் ஏன் காத்திரு கணும்னு... அவரை அனுப்பிட்டேன்.''


அந்த ஓட்டுனர்தான் வந்து ஜெகனை இவள் பார்த்தை பற்றிய விவரத்தை முதலாளியிடம் ஒப்பித்திருக்க வேண்டும்

பிறகு பேசியபடி இவர்கள் இணையாய் வந்ததை த அறை ஜன்னலின் வழியே கவனித்திருக்கலாம். கா விரலின் காயத்தில் கடல் மண்ணின் உறுத்தல் தாளாம இவள் தடுமாற, ஜெகன் உதவியாய் கை நீட்டியது உண்மை - அவனுக்கென்று ஹேமா வந்துவிட்ட தெம்பில் இவளு தயங்காமல் அதைப் பற்றி நடந்தாள்...

அதில் அப்படியென்ன பாவம்?

மதன் இப்படி பௌர்ணமி இரவின் அலையாய் பொங்கு அளவிற்கு?





15

முழு நிலவின் மோகன ஒளியில் எம்பி ஆர்ப்பரித்தது கடல் -

அந்த எம்பலையும், துள்ளலையும் ஜன்னல் வழியே பார்த்திருந்தாள் மஹதி. மூன்று கடல்களின் சங்கமம் என்று மனிதன் நீரிற்கு வெவ்வேறு பெயரிட்டு வைத்தாலும் சமுத்திரம் ஒன்றேதான்.

ஆனால் மனித மனங்களில் மட்டும் எத்தனை வித்தியாசங்கள்...?

அதிலும் ஒருவரின் மனமே வெவ்வேறு நேரங்களில், சந்தர்ப்பங்களில் விதவிதமாய் திருகிக் கொள்கிறது.

மீண்டுமாய் மதனின் குற்றச்சாட்டை நினைக்க இவளுக்குள் கோபம் கொதித்துக் குமிழ் விட்டது!

எந்த ஊரின் நியாயம் அது?

இவர் ஒன்றுக்கு இரண்டாய் இளம் பெண்களைக் கூட்டிக் கொண்டு வெளியூர் ஹோட்டலில் - அது வெவ்வேறு அறைகளில்தான் என்றாலும் - தங்கலாம் - விருந்திற்கும் போகலாம் - அது நியாயம்.

இவருடன் போன நர்மதா, விருந்தினர் வீட்டு மாப்பிள்ளையுடன் இழைவதும், அவன் தோளைத் தட்டி, கையைப் பிடித்து சிரிப்புது தர்மம் - என்றால்?



தான் ஜெகனுடன் செலவழித்த ஓரிரு மணி நேர அநியாயமா?

அலைகளின் நுனியில் பட்டு மின்னிய நிலா ஒளி போ இவளது மூளைக்குள்ளும் வெளிச்சமடித்தது.

இது தனக்கான தண்டனைக் காலம் - இதில் நியாயத்ன எதிர்பார்க்கலாமா?''

தங்குமிடத்தில் வசதிக்குக் குறைவில்லை - ராஜ போக தான் - பிறரின் முன் கரிசனையும் கௌரவமுமாகவே நடத் கிறான் - ஆக தனிமையில் இப்படி வார்த்தைகளால் சொடுக் வலிக்க வைக்கிறான் - இந்த தண்டனையை ஏற்றுக் கொ வதே நியாயம். வேலைகளை முடித்து விட்டுப் படுத்தாள்

மறுநாள் எதிர்ப்புறம் இருந்த நிலத்தில் வேலைக காத்திருந்தன -

''சொல்ற அளவை மட்டும் குறிச்சுக்கோங்கம்மா.. என்று மேற்பார்வையாளர் வேலையில் மும்முரமா இவளும் இயன்றளவில் உதவினாள். குறித்து முடித்த போ எதிரே வந்து மிக ஒயிலாய் நின்றாள் நர்மதா -

''வெயிலில் நின்று வியர்த்து கறுத்திட்டே மஹதி'' கரிசனையாய் கவலைப்பட்டாள் -

''வேலை முடிஞ்சது மேடம்..''

வெள்ளை நிற இறுக்கமான சுடிதாரில் கலையா ஒப்பனையுடன் நின்றாள் நர்மதா - உடை அவளது வளை களை எடுத்துக் காட்டியது போலவே முகத்தின் மூப்பு தொனிப்பாய் தெரிந்தது போலத் தோன்றியது மஹதிக்கு.

''அருமையான இடமில்லையா?'' சுற்றிலும் சல்லாபமா கண்களைச் சுழற்றி கேட்டாள் நர்மதா.

''ஆமா மேடம்.''

''எனக்கும் சென்னையின் தூசும் இரைச்சலும் சலிச்சிடுச்சு - இதோ இங்கேருந்து அந்த மூணாவது பனைமரம் வரைத் தடுத்து எங்களுக்கு ஒரு வீடு கட்டிடலாம்னு நினைக் கறேன்.''

''ஓ..?'' தடுமாறியவள் ''இது ஊழியர் காலனின்னு...'' தொடர்ந்தாள்.

''அங்கே முதலாளியும் தங்கக் கூடாதுன்னு சட்டமா? எங்கக் குழந்தைகள் இப்படி காற்றோட்டமான இடத்தில் ஓடி ஆடி வளரணும்னு ஆசைப்பட்டிருக்கேன்... அதே போல அமையும் போலிருக்குது...''

மஹதிக்கு நடுநெஞ்சில் வலித்தது -

ஏன் என்பதில் வழக்கம் போலத் தெளிவில்லை...

''என்ன பேச்சையே காணும்?''

''உங்கப்பா... எங்கே இருக்கார் மேடம்?''

''பெங்களூர்தான் - ஆனால் அது இப்போ சென்னையை விட களேபரமாயிடுச்சு - ஆக அப்பாவிற்குப் பக்கத்தி லேயே ஒரு வீடு அமைச்சிட்டால் பிரச்சனை தீர்ந்தது - என்ன?''

''நல்லது.. மறுபக்கம் கொஞ்சம் வேலை பாக்கியுண்டு மேடம்...'' என்று நழுவ முயன்றாள்.

அடிபட்ட கால் விரல் போல இப்போது நெஞ்சம் 'விண் விண்'ணென்று வலியில் துடித்தது.

''ஒரு நிமிஷம் மஹதி - என் அப்பா பற்றி கரிசனையாய் கேட்டாயே... நாளை காலை அப்பா இங்கே வர்றார் -



அப்பாவின் கருத்தைக் கேட்காமல், மது ஏதும் ெ
தில்லை. எட்டு வருஷங்களிற்கு முன்னே மது வியாபார
ஆரம்பித்தபோது அப்பா செய்த சில உதவி, தந்த சில ஆ
சனைகள்தான் தன்னை இந்தளவு உயர்த்தி இருப்ப
மதுக்கு ஒரு நம்பிக்கை. ஆக நிலமும், தொழிற்ச
அமைப்புத் திட்டங்களும் தயார் என்றாலும் அப்பா
அத்தனையையும் பார்த்து தலையாட்டினால்தான் மது
திருப்தி.''

மரியாதையான ஒரு முறுவலுடன் நின்றிருந்தாள் மஹ

உள்ளே இதயம் வெந்திருக்க முகத்தில் அ
காட்டாமலிருக்கும் இம்சை...

''நாளை இரவு ஒரு விருந்திற்கு நம்ப ஹோட்டலி
ஏற்பாடு செய்திருக்கேன் மஹதி. இங்கே மதுே
இணைந்து உழைக்கும் சிலர் மட்டும்தான் - வேலை
டுமே செய்து களைத்த உங்களுக்கு ஒரு மாற்றம் - ந
ஏழரை மணிக்கு - மறந்துடாதே.''

''வந்து மேடம்.''

''மறுக்கக் கூடாது. எங்கப்பாவை நீ சந்திக்க வேண
டை..''

பெட்டிக்குள்ளிருந்த சில சேலைகளை மீண்டும்
தரம் புரட்டினாள் மஹதி... இருந்த ஒரே பொன்வண்டு
பட்டை இங்கு அவள் எடுத்து வரவில்லை. இருந்
தாலும் அத்தனை பகட்டாய் உடுத்தக் கூடிய வை
அல்ல இது. அழைத்த நர்மதாவிற்கு ஈடாய் நிற்க முடி
என்றாலும் மரியாதையைக் காட்டும் விதத்தில் உ
வேணும்தான். ஆக அந்த சிவப்பு பருத்திப் ப



எடுத்தாள். சிறு முத்துக்களால் வேலைப்பாடு செய்யப்பட்ட அதை சித்ராதான் வற்புறுத்தி இவளை வாங்க வைத்திருந் தாள் -

'எப்பவும் தூங்கு மூஞ்சி நிறங்கள்தானா மஹதி? பளிச்சுனு நிக்கற வயசுல்லியா இது?' என்றதால் வாங்கிய புடவை. இந்த சந்தர்ப்பத்தில் கட்ட வேண்டியதுதான். சிறிது தேங்காய் எண்ணெயை உடலெங்கும் தடவிய பின் குளித் தாள் - வெயிலில் நின்ற கருமை மாற. உலர்ந்த கூந்தலை வாரி ஒரு க்ளிப் மட்டுமே செருகி விரிய விட்டாள்.

மதன் தன்னை அந்நிலையில் முன்பு ரசித்தது மறக்க வில்லை.

'பளிச்'சென்ற புடவை இவள் சருமத்தின் நிறத்தை, வழவழப்பை எடுத்துக் காட்டியது. ஒரு ஆர்வத்தில் கடற் கரையில் வாங்கிய நீண்ட சங்கு மாலையைக் கழுத்தில் போட, அது புடவைக்கு மிகவும் பொருந்தித் தொங்கியது. புதுத் துணிச்சலுடன் உள்ளங்கழுத்தின் தங்க நகையை கழட்டினாள்.

கண்ணாடி முன் நின்றவளை பொங்கிய புது குஷி. வெளியேறும் நேரம், வர வெட்கமாகத் திரிந்தது!

முதன் முதலாய் சவரம் செய்யும் விடலைப் பயலின் கூச்சம், சேலைக் கட்டும் இளம் பெண்ணின் தயக்கம் போல...

கூந்தலைப் பின்னி, சங்கு மாலையைக் கழற்றி விட்டால் தான் தேவலை என்று முடிவெடுத்த கணம் அந்த நீண்ட விசில் அவளை ஈர்த்தது.

''அற்புதமாயிருக்கே மஹதி... தாமோதரன் சாரும் அசந்து போகட்டும் - வா போகலாம்'' என்று மதன் ஏறக்குறைய



அவளை இழுத்துப் போக வேறு வழியின்றி உட
சென்றாள் - இருப்பினும் தன் கையை அவன் பற்றியிருந்த
நெருட, கையை உருவிக் கொள்ள முயன்றாள் -

''ஏன் இப்ப பெருவிரலில் வலி இல்லையா?'' கைை
விடாமல் வினவினான்.

''இங்கே உறுத்த மண்ணில்லையே - பளிங்குத் தரைதானே

''ஆனாலும் நீ லேசாய் விந்தித்தான் நடக்கறே. அதை
பார்க்கும் என் மனசு உறுத்துதே.''

சல்லாபமாய் பேசியவனை ஒரு அந்நியன் போல பா
தாள்.

சாப்பாட்டு அறையில் இவர்களுக்கு என்று ஒரு நீ
மேஜை ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் தலைமை இடத்தி
அமர்ந்திருந்தவரிடம் இவளை அழைத்துப் போ
அறிமுகப்படுத்தினான் -

''ஸார், மஹதி... ஸார்தான் திரு. தாமோதரன்.''

கை குவித்தாள் -

''தெரியும் - நர்மதா மேடத்தின் அப்பா.''

''நம் நிறுவனத்திற்கு அஸ்திவாரம் போட உதவியவர்

உயரமும் அகலமுமாய் இருந்த தாமோதரனின் க
களில் கனிவோடு கூர்மையும் இருந்தன.

''அஸ்திவாரம் பலமாய் இருந்தாலும் எழும்பிய கட்டிட
அழகாய், அலங்காரமாய் இல்லைன்னால் சரி வராதும்மா
நீ மதன் கம்பெனியை அழகாய் பாதுகாப்பாய்ன்
நம்பறேன்.. வாழ்த்துகள்.''

எழுந்தவர் இவளது முன் நெற்றியில் கை வைத்து ஆசீர்வதிக்க, மறுபடி மனம் கனிய கை கூப்பினாள்.

ஆனால் சாப்பிடும் நேரம் தன் அருகே மதன் அமர நெருடியது. பெரியவர் பார்க்க மதன், அவரது மகளருகே ஜோடியாய் அமர்வதுதானே முறை? நாளை தம்பதி ஆகப் போகிறவர்களை சேர்த்து கண்ணிற்கு நிறைவாய் கண்டு ரசிக்க பிரியப் படுவாரே...

ஆனால் அதைச் சொல்ல வகையின்றி, சாப்பிடலானாள். இவளது மறுபுறம் வந்து அமர்ந்த ஜெகனின் புருவங்கள் மேலேறின -

''அடடா... யாரிந்த அப்ஸரஸ்னு அசந்து போய் வந்தேன் - பார்த்தால் நம்ப மஹதி... ஆளே மாறியாச்சே.''

''கேலி பண்ணாதீங்க ஜெகன்...''

''கேலியா? பிரமிப்பு! மங்கின நிறப் புடவையில் தலையை இறுகப் பின்னின போதும் நீங்க அழகுதான்னாலும்... இப்படி 'பளிச்'சுனு உடுத்தினால்..''

''அலுவலக வேலைக்கு இடைஞ்சல்! உங்க 'செல்' போனைத் தாங்க - ஹேமாவிடம் நீங்க பிற மாதரை அளவிற்கு அதிகமாய் புகழ்கிற விஷயத்தைச் சொல்லி வைக்கறேன்...''

இருவரும் இணைந்து சிரித்ததை மதனின் பார்வை தான் ரசிக்கவில்லை என்று எச்சரிக்க, பிறகு அமைதியாகவே இருந்தாள். தண்டனைக்கு என்று வந்த இடத்தில் இப்படி குதூகலமாய் இருப்பது அவனுக்குப் பொறுக்காது தானே என்ற சமாதானத்துடன்!

இரவு வெகு நேரம் தொழில் சம்பந்தமாய் பேசிய பின்னர் அவரவர் அறைகளுக்குத் திரும்பினார்கள் -



தன் அறையின் கண்ணாடியில் ஒரு வித லயிப்புட
தன்னையே பார்த்து நின்றாள் மஹதி... முகம் அலாதிய
பளபளத்தது.

இந்த இரவை இனி வாழ்நாளில் மறக்க முடியாது...

தன் புது தோற்றத்தை மதன் பாராட்டியது, கை ப
அழைத்துப் போனது, தன்னருகே அமர்ந்து விருந்துண்ட
அத்தனையையும் நினைக்க நினைக்க இனித்தன. அ
இனிய மயக்கத்தை நினைவு அடுக்கில் பத்திரம
பொதிந்து வைத்த நேரம் தாழ்வாரத்தில் அந்த கூச்
கேட்டது...

அது நர்மதாவின் குரலா?

அவசரமாய் அறைக்கதவைத் திறந்தாள்- இப்பே
வார்த்தைகள் தெளிவாய் கேட்டன-

''என்ன தயக்கம்? அவளைக் கூப்பிட்டு விசாரி
வேண்டியதுதானே?''

''நர்மதா வெளியே நின்று ஏன் கலாட்டா பண்ணனு
நாளை காலை பார்க்கலாம்..''

''இதெல்லாம் தள்ளிப் போடக் கூடாது. விவ
தெரிஞ்சதுமே விசாரிச்சிடணும். உங்க அந்தரங்க கா
தரிசியைக் கூப்பிடுங்க - அந்தரங்கமாய் இன்ன
என்னென்ன கோல்மால் செய்திருக்காளோ?- அத்தனை
யும் கேட்போம்..''

சிறு சந்தோஷத்தில் முளைக்க ஆரம்பித்த மஹதிய
மன இறக்கைகள் மறுபடி பிய்த்து எறியப்பட்டன...






குளிர் பதனப்பட்ட மிக வசதியான அறை.

ஆனால் அதனுள் இருந்த நால்வருக்குள்ளும் இறுக்கமும் புழுக்கமுமான தவிப்பு.

''மஹதி - இப்போதுள்ள நிலத்திற்கு எதிரே உள்ள நிலத்தையும் வாங்க இருக்கேன்..''

''தெரியும்.''

வியந்து நிமிர்ந்தான் மதன் - எப்படி?

''ஜெகன் சொன்னார்... நேற்று..''

தான் சொல்வதை நர்மதாவும் அவளது தந்தையும் உன்னிப்பாய் கவனித்திருந்தது அவளை சங்கடப்படுத்தியது.

''ஆக இவ கூட்டுக் கள்ளிதான் - ஜெகனையும் பசப்பி தன் திட்டத்தின்படி செய்ய வைச்சுட்டா..''

''நீ குறுக்கே பேசாதே நர்மதா..'' கண்டித்தார் தாமோதரன்.

''பாவம்ப்பா மது... எல்லாரையும் அப்படியப்படியே நம்பிடறவர் - பாருங்க அவர் முகத்தை-பேயறைஞ்சது போல..''

''மதன் இத்தனை நாள் தன் தொழிலை கச்சிதமாய் நடத்தியிருக்கார்..''



மதன் தொடர்ந்தான் -

''ஜெகன் கொண்டு வந்த பத்திரங்களைப் பார்த்திய
மஹதி?''

''இல்லை ஸார்.. நான் ஏன் அதைப் பார்க்கணும்?''

''ஓஹோ... அதைப் பற்றிப் பேசலாம் - ஆனா பார்க்
மாட்டாங்களாம் - என்ன ஒரு பசப்பு..?''

''நர்மதா, எழுந்திரு - நாம போகலாமாம்'' எழு
தாமோதரனைத் தடுத்தான் மதன்

''இல்ல ஸார் நீங்க இருக்கணும்.''

மஹதி குன்றினாள் - ஒரு குழந்தை கூட பெற்றே
தன்னைப் பிறரின் முன்னிலையில் அதட்டுவதை விரு
பாது - முரண்டும் - அந்தளவு சுதந்திரம் கூட இன்றி தா
நிற்க வேண்டிய அவலத்தை எண்ணி குறுகினாள்-

''நாம புதிதாய் நிலம் வாங்கப் போகிறவரின் பெ
தனகோடி. அவர் அந்த நிலத்திற்கு கேட்கும் தொ
அதிகந்தான். ஆனால் நம் தொழிற்சாலை செயல்ப
ஆரம்பிச்சுட்டால் - நிச்சயம் அருகேயுள்ள நிலத்தின் வி
எல்லாம் உயரும். இப்போ தனகோடி கேட்கும் தொகை
விட அதிகமாகும்... போட்டியும் அதிகரித்து நிலம்
கைக்கு வராமல் நழுவியும் போகலாம் - ஆக அதை உட
வாங்குவது புத்திசாலித்தனம்.''

''இத்தனை கதையையும் இப்ப இவளுக்கு
சொல்லணும் மது?''

''பொறு நர்மதா..''

''பொறுத்தது போதும் பொங்கி எழு'ங்கற வசனந்த
இப்ப மது பேசணும்ப்பா..''

மதன் இந்த குறுக்கீட்டைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்தான் - "ஆக தனகோடி கேட்ட விலைக்கு சம்மதிச்சு ஒப்பந்தமும் செய்தாச்சு. இப்ப பெரியவரின் மருமகன் சதீஷ், அந்த ஒப்பந்தத்தின் நகலோடு வந்து கலாட்டா செய்றான் - 'நாங்க இளிச்சவாயன்களா? மொத்த வியாபாரத்தை சல்லிசா செய்றாப்போல, எங்க 25 ஏக்கரை வாங்கின விலைக்கே எதிரேயுள்ள அஞ்சு ஏக்கரையும் வாங்க நினைக்கிறீங்க - உங்களுக்கு லாபம் என்பதற்காய் எங்களுக்கு இவ்வளவு நீளத்திற்கு நாமம் போட வேண்டாம்னு எகிறுகிறான்.."

"ம்ம்... ஆனா என்னை என்ன கேட்கறீங்க?" குழப்பத்தில் குரல் குழறக் கேட்டாள்.

"அப்பப்பா... என்ன நடிப்புப்பா!"

"உஷ்.. நர்மதா-சதீஷின் கைக்கு நம்ப அந்தரங்க கோப்புகளில் உள்ள ஒப்பந்தம் எப்படி போனதுன்னு கேட்கறேன்.."

"காலா முளைச்சுப் போகும்? என்ன மது - இவதான் எடுத்துக் கொடுத்திருப்பா. இவளை அதட்டி போலீஸில் ஒப்படைங்க - ஒரு பெண்ணின் வாழ்வு சீரழிய வேண்டாம்னு மனசுக்குப் பட்டால் குறைந்த பட்சம் வேலையில் இருந்தாவது விரட்டுங்க.."

"ஸார் - எனக்கதில் பங்கே இல்லை." அதிர்ந்தாலும் உறுதியாகவே சொன்னாள் மஹதி.

"அப்படீன்னா ஒப்பந்தத்திற்கு கால்தான் முளைச்சிருக்கணும் - சரியாய் சதீஷின் கைக்கு போய் சேர்ந்திடுச்சே.." நர்மதாவின் குரல் கீச்சிட்டது.

"என் கை அந்தத் தப்பு வேலையைச் செய்யலை" மற்றவளை நேருக்கு நேராய் பார்த்து தெளிவாய் சொன்னாள் மஹதி - "ஸார், ஜெகனும் இப்படி ஒரு காரியம் செய்திருக்க



மாட்டார். உங்க... அதாவது நம் நிர்வாகத்திற்கு பே
லாபகரமாய் முடியணும்னு அவரும் மனசார நினை
கிறார்.."

"ஒழுக்கமும், கட்டுப்பாடும் இல்லாத சுதந்திரம்
பாக்கி முனையைத் திருப்பி வைத்து சுட்டுக் கொல்
போலன்னு - சொல்வாங்க. நான் அதட்டி வேலை வா
வதில் நம்பிக்கை இல்லாதவன் - தந்த சுதந்திரத்தை
ஒழுக்கமும் கட்டுப்பாட்டுடனும் அனுபவிக்கறீங்க
நினைச்சேன். அப்படியில்லைன்னு புரிஞ்சு போச்சு..
னால் எனக்குப் பெரிய பாதகமில்லை - சில லட்சா
நஷ்டம், அல்லது இதுவரை செலவழித்த நேர
திறமையும் போகட்டும்னு தொழிற்சாலைக்குப் புது இ
தேடலாம் - ஆனால் என் நிர்வாகத்தின் சகுனி, கருங்
யார்னு தெரியணும்... எதற்காய் எனக்குக் குழி ப
கறாங்கன்னு புரியணும்..."

"காசுதான் மது - அத்தனை தீவினைக்கும் வேர் ப
தான்..."

"வேறு காரணங்களுக்கும் இந்த வலிமை உ
நர்மதா," என்றார் தாமோதரன். "தவிர செய்தி வந்ததும்
யார் மீதும் பழி சுமத்தக் கூடாது-சாட்சி இல்லை...
உனக்கு ஏதும் தெரியுமா என்று வேண்டுமானால் ம
யிடம் கேட்கலாம்..."

"கொஞ்சிக் கேட்டால் காரியம் ஆகாதுப்பா... மது, இ
சாதாரணமாய் விடறது உங்க நிறுவனத்தை நீங்
கொல்றது போல... ஒரு பெண்ணின் பார்வையில் மட
ஆசையில் மதனின் தொழிலே நொடிச்சது என்ற
உங்களுக்கு வேணுமா?"



தாமோதரன் மெள்ள எழுந்தார் - அவர் விரல்களில் நடுக்கம். "இனியும் என்னால் இங்கே இருக்க முடியாது நர்மதா - எனக்கு...எனக்கு ரொம்ப அவமானமாய் இருக்குது.."

"என்ன சொல்றீங்கப்பா..." தகப்பனின் முகத்தை ஏறிட்ட நர்மதாவின் முகமும் வெளுத்தது - வெளியேறிய அவரை அவளது கால்கள் தயங்கிப் பின் தொடர்ந்தன.

மஹதியின் விழிகள் எஞ்சியிருந்தவனை வெறித்தன-

"ஆக இப்போதும், எப்போதும் உங்களுக்கு என் மீது சந்தேகந்தான் இல்லையா?"

"நர்மதா-உடனே இப்படி கலாட்டா செய்வான்னு எதிர்பார்க்கலை-இப்பதான் சதீஷிடமிருந்து தகவல் வந்தது... ஆனா.."

"யாருக்கும்... நர்மதாவிற்கும் என்மீதே சந்தேகம் விழுமளவிற்கு நீங்க என்னைப் பற்றி சொல்லியிருக்கீங்க.."

"இதெல்லாம் உளறல்."

"இல்லைன்னா அவங்க என்னைக் கூட்டுக்கள்ளின்னு வர்ணிப்பானேன்?"

"நீ அதிகமாய் கற்பனை செய்றே மஹதி - நர்மதா சொன்னதை வைத்து என்னை ஏன் சந்தேகப்படறே.."

"என்னை விட்டுருங்க ஸார்." நடுங்கிய அவள் விரல்கள் குவிந்தன-"நான் களைச்சுட்டேன்-இப்படி கேவலப்படுத்தியதற்கு பதிலாய் என்னை நீங்க போலீஸிலேயே ஒப்படைச்சிருக்கலாம்... அந்த தண்டனை இத்தனைக்



கொடூரமாய் இருந்திருக்காது... நான் காலைல இங்கேருந்
போறேன்."

"நீ குற்றம் செய்யலைன்னு நிரூபிச்சுட்டு போ மஹதி.."

"அதற்கு எனக்குப் பலமில்லை-அது வரை சிறையி
இருக்கவும் நான் தயார்" முழு முடிவாய் சொன்னாள்.

மறுநாள் இரவே சென்னை போய் இறங்கினாள். ஒ
இழந்த அவளது கண்கள் ரயில் நிலையத்தில் காத்து நின்
மித்ரனைக் கண்டு சுருங்கின.

"நீ... இங்கே... எப்படித் தெரியும்?"

"மதன் ஸார் போன் செய்தார்-உன்னைக் கேள்வி
கேட்காமல் வீட்டிற்குக் கூட்டிட்டுப் போய் பத்திரமா
பார்த்துக்கச் சொன்னார்.."

அதுவரை வறண்டிருந்த அவள் கண்கள் சுரந்தன.



## 17

பல நாட்களுக்குப் பின் அன்றுதான் நிம்மதியா
உறக்கம். தாயின் பழம்புடவையைக் கட்டியபடி படுத்
தாலோ - இனி தனக்கு எதிர்காலமே இல்லை என்ற மு
விரக்தியாலோ, உறக்கம் அவளை அணைத்து ஆற
படுத்தி இருந்தது.

'பிறரின் அவதூறில் அஞ்சி சாயாதே-நண்பனோ எதிரியோ உன் கிளைகளில் கை வைக்கட்டும், பூப்பறிக்கட்டும், தாவி குதித்து விளையாடட்டும், வெட்டியும் போடட்டும் - ஆனால் யாரையும் வேரை நெருங்க விடாதே - வேர் என்பது உன் தன்னம்பிக்கை, மகிழ்ச்சி..'

தன் வேரே வெந்து போன விரக்தியில் இருந்தாள் மஹதி. முன்பு டைரியில் எழுதி வைத்திருந்த வரிகளை மீண்டும் மீண்டுமாய் வாசித்து மனதை திடப்படுத்தி, துளிர்க்க வைக்க முயன்றாள்.

ஆனால் மூன்றாவது நாள் இவள் முன்பு மதன் வந்து நிற்க, மறுபடி கருகிய வேதனை...

அவன் முகமும் அதிர்ந்து சுருங்கியது.

''ஏன் மஹதி... ஏனிப்படி.. அதுவும் ரெண்டே நாளில்..?''

'எப்படி?' என்பதாய் உயர்ந்தன அவளது விழிகள்.

ஒளியே இல்லாத கருவிழிகள்..

''உன்னால் இதைக் கூட தாங்க முடியலை இல்லையா... ஸாரி-நான் உடனே உன்னோடு வந்திருக்கணும்..'' என்றபடி அவளை அமரச் செய்து தானும் உட்கார்ந்தான்.

அவள் கண்களின் தேடல் புரிந்து,

''மித்ரனுக்கு வெளியே ஏதோ வேலையாம் -சொல் லிட்டுத்தான் போனான்-'' விளக்கினவன் தொடர்ந்தான்-

''வியாபாரத்தில் என் கணக்கு துல்லியமாய் இருக்கும் மஹதி... ஆனால் மற்ற விஷயங்களை மோசமாய் சொதப்



பிட்டேன் - அதில் நீ ரொம்பப் பாதிக்கப்பட்டிருக்கே
மன்னிச்சுடும்மா..''

மந்தப்பட்டிருந்த தன் புத்தியை கூராக்க முயன்றாள்
முடியவில்லை.

அவன் பேச்சின் அர்த்தம் புரியாமல்... வெற்று வார்த்
களாகவே அவை அவளைச் சுற்றி மிதந்தன.

மடியில் துவண்டு கிடந்த அவளது கைகளை
பற்றினான்.

''கவனிக்கறியா மஹதி? முதலில் உன்னைப் பற்
எனக்குச் சொன்னது யார் தெரியுமா? என் ஆடிட்டர்! எனக்
முதலீடு, கடன், வட்டி, லாபம், கணக்கு பற்றிய ஆரம்பகா
வியாபார பாடங்களில் உதவிய திரு. பிரபாகரன்... உங்
மாமா.''

இவளது கண்கள் மந்தமாய் மறுபடி அவனை
நோக்கின.

''ஆமா மஹதி... இளம் வயதில் எனக்கிருந்த உழைப்
திறமை, பொறுப்புணர்வு பற்றி மெச்சியவர், அதே மூச்சி
உன்னைப் பற்றியும் பேசினார். பெற்றவர்களை இழந்த
எப்படி சுய கௌரவம், நம்பிக்கை, துணிவோடு வாழ்
எதிர்நோக்கி நின்றாய் என்று அவர் உன்னைப் பற்றி பே
எனக்கு முதன் முதலாய் சுவாரஸ்யம் தட்டியது. என்
ஒத்த ஒருத்தி என்ற பிரியம் - உன் மாமா, மித்ரனை எ
நிறுவனத்திலேயே சேர்த்து விட, அவனையும் கவ
சேன் - மித்ரன் கேட்கும் முன்பே உனக்கும் நம் நி
வனத்தில் தகுந்த வேலை இருப்பதாய் தெரியப்ப
தினேன்.''



தன்னை உசுப்பியபடி கவனிக்க ஆரம்பித்தவளின் உலர்ந்த உதடுகள் பிரிந்தன... ''எ... எதற்காய் அப்படி..?'' என்று.

''தெரியலை-அதுவரை சந்தித்திராத ஒரு பெண் என்னை ஏன் இத்தனைச் சலனப்படுத்தணும்னு புரியலை. என்னிடம் வேலைக்குச் சேர்ந்த உன்னை ஆர்வமாய் கவனிச்சேன். லேசில் உன்னை நெருங்க முடியாது என்று நினைச்சேன் - கல்யாணம் பற்றியெல்லாம் நீ யோசிப்பதாயும் தோணலை. பணக்காரன் என்பதற்காய் என்னை ஏற்றுக் கொள்ளவும் மாட்டாய்... ஆனால் உன்னை நெருங்க என் ஆசை அவசரப்பட்டது.

அவன் சொல்வதன் அர்த்தத்தின் விளிம்பு இப்போதுதான் சற்று புலப்பட்டது போல அவளது புருவம் சுருங்கியது.. விழிகளில் குழப்பம். ''மித்ரனின் சறுக்கலை எனக்குச் சாதகமாக்கினேன்-நான் தொழிலில் முட்டி மோதி வென்றவன் மஹதி... ஒரு பெண்ணை அடையும் வழி மிக மென்மையானது என்பது தெரியலை... ஜெகன் உன்னிடம் சிரித்துப் பழகியது எனக்குக் காந்தியது. வேறு யாரும் உன் நெஞ்சில் பதிவதற்குள் அங்கு நான் வியாபிக்கும் ஆவலில் மிக முரட்டுத்தனமாய் உன்னில் நுழைய முயற்சி செய்தேன்...''

அவனது விரல்கள் அவள் கைகளை மலர்போல வருடின.

''உன்னை என்னுடன் கூட்டிட்டுப் போனதற்கு சதா உன்னை என்னோடு வைத்திருக்கும் தாபம்தான் காரணம் மஹதி - ஓரளவு மித்ரனிடம் என் நோக்கத்தைக் காட்டி அவனை சம்மதிக்க வைத்தேன் - ஆனா தனிமையில்



கன்னியாகுமரியில் உன்னைப் பார்த்த என் மோ
திமிறியது... அதை அடக்கத்தான் உன்னிடம் சீறி வி
தேன்... உன் மாமாவிடமும் நம் கல்யாணம் குறித்
பேசினேன்..''

''க.. கல்யாணமா?''

அதற்கு பதில் சொல்லாமல் அவளது கூந்தலைக் கோ
படி புன்னகைத்தான் - ''அப்பதானே நாம காலமெல்ல
பிரியாதிருக்க முடியும்? முதலில் சிறு ஆர்வமாய், மதிப்ப
உன்மீது துளிர்த்த ஒரு தீப்பொறி சீக்கிரமே என்
எரிக்கலானது. உன்னைப் பற்றி எங்கம்மாவிடமும், தீ
தாமோதரனிடமும் சொன்னேன் - அவர் பார்க்க வந்
நிலத்தை அல்ல... உன்னை... உன் அண்ணன் மு
உன்னை மடக்கி...''

''ஆனா மித்ரன் பணத்தைக் கையாடினது நி
தானே?''

''அது உண்மைதான்... உன்னை என் பக்கமாய் திரு
காலமும் சந்தர்ப்பமும் செய்த பேருதவியாய் அ
கருதறேன் மஹதி செல்லம் - தவிர மித்ரனுக்கு அது சரிய
பாடம் - இனி வாழ்க்கையில் மிகக் கவனமாய் இ
பான்னு.. நம்புவோம்.''

''எனக்கு அந்த கையாடலில் பங்கில்லை என்பதும்.
''தெரியும். மடியில் கனமில்லாததால்தான் இந்த தேவ
அத்தனை இயல்பாய் என் முன் காட்சியளித்தது என்
புரிந்தது - மித்ரன் உன்னிடமிருந்து சாவியைக் கேட்பா
நினைச்சேன் - நீயே வருவேன்னு எதிர்பார்க்கலை - அது
சின்ன அதிர்ச்சிதான்...''

அவனது விரல்கள் அவள் கன்னங்களின் மிருதுவை சோதித்துப் புல்லரித்துக் கொண்டிருந்தன -

மஹதி சற்று விலகி அமர்ந்தாள்-

''அப்படீன்னா ஏன் அவங்க முன்னே என்னை அப்படி விசாரிக்கணும்?''

''யார் முன்... நர்மதா, அவ அப்பா எதிரிலா?''

துடித்த உதடுகளைக் கடித்தபடி தலையாட்டினாள்.

''அது நர்மதா எழுதி, மேடையேற்றிய நாடகம்மா - உன் மீது பழி போட அவ பின்னிய வலை. அந்த சிக்கலை தாமோதரன் ஸாரே புரிஞ்சுகட்டும்னுதான் நானும் அனுமதிச்சேன்.''

''ஆனாலும் யாரோ உங்க அந்தரங்க கோப்பிலிருந்த ஒப்பந்தத்தை நகல் எடுத்து, எதிரியிடம்.. அதாவது சதீஷிடம் தந்தது உண்மைதானே? அது ஜெகனாய் இருக்காது - அவருக்கு உங்க மேல நிறைய மரியாதை, பிரியம்... தவிர நம்ப கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்திருக்கும் ஹேமாவை அவர்... விரும்பி... அதாவது திருமணம்...''

அவள் முடிக்கும் முன்பே மதனின் முகம் மலர்ந்தது -

''ஆக ஒப்பந்தத்தைத் திருடியது யார்?''

''கவலைப்படாதே மஹதி... அது யார்னு எனக்குத் தெரியும்.''

அவள் விழிகள் பரபரத்தன -

''ரெண்டே நாளில் இப்படி கரைஞ்சிட்டியே... இனி உன்னை வாட விடவேமாட்டேன் செல்லம்..'' நெருங்



கியவன் அவளை பிறந்த சிசுவை அள்ளுவது போல மிருதுவாய் ஏந்தி அணைத்தான் -

அவன் தாபம் புரிந்து சிவந்தது அவள் முகம்... ஆனா விழிகளில் இன்னும் குழப்ப வினாக்கள் -

''அதை எடுத்து சதீஷிடம் தந்தது நர்மதா.''

''அவங்க ஏன்..?''

''அதுதான் உன் மேல பழி சுமத்த அவள் பின்னி வலை. காசில் பெரிய நஷ்டமில்லை என்றாலும் உன் மீதா என் காதலை, நம்பிக்கையை எப்படியேனும் அழிச்சிடணு என்கிற வெறியில் அந்த சபல சதீஷையும் சேர்த்து கொண் விளையாடினாள் தன் மீது சந்தேகம் விழாது என்ற நிச்சய - ஆனா எனக்கு உன் மீது சந்தேகம் வருமா மஹதி தாமோதரனும் ஏமாறலை..''

''அவருக்குத் தன் மகள்தான் அந்த தில்லு முல்லை செய்ததுன்னு...''

''புரிஞ்சிடுச்சு... அப்பாவிடம் தன் வேஷம் கலைஞ்சி சுனு புரிஞ்சதும், ஆட்டுக் குட்டி போல அவர் பின்னே போயிட்டா... நர்மதாவுக்கு என்னைத் திருமணம் செய் ஆசை... அவங்கப்பாவிற்கும் அதில் விருப்பந்தான் - அ மீதுள்ள மதிப்பால்தான் நான் நர்மதாவை உடனே முரட் தனமாய் ஒதுக்க முடியலை... சகிக்க வேண்டிய நிலை...''

''ஓ... எங்க வீட்டை இங்கே கட்டணும், எ பிள்ளைகள் இங்கே வளரணும்னு அவ உரிமைய சொன்ன போது ரொம்ப கலங்கிட்டேன்...''

அவளது அணைப்பு இறுகியது.



அவளுக்கு மூச்சு முட்டினாலும் உள்ளே இன்பம் முட்டி நிரம்பியது.

''அப்ப உனக்கும் என்மேல பிரியந்தான் இல்லை மஹதி - காதல்தானே? உன் முன்னே என்னை மன்மதன் மண்டியிட வைத்தது போல, இந்த மதனிடம் நீயும் பணிந்து விட் டாய்தானே?''

அவளைச் சற்று எட்ட நிறுத்தி வைத்து பரவசத்துடன் கேட்டான்.

''இதெல்லாம் முன்னமே சொல்லியிருந்தால் எத்தனை மனவேதனை மிச்சம்?''

''எனக்கும் மனஉளைச்சல்தான்... நீ என்கூட இருப்பதைத் தண்டனைன்னே நினைச்சே அதோடு ஜெகனிடம் நீ சிரித்துப் பேச, எனக்கு எரிந்தது..''

''அவருக்குக் கல்யாணம்...''

''ஹேமா சமாச்சாரத்தை இப்பதானே சொன்னே?.. இந்த ரெண்டு நாளில் வேலைகளை ஓரளவு முடிச்சிட்டு, கடை களுக்கும் போயிட்டு ஓடி வந்தேன் மஹதி..''

அவளைத் திருப்பி சிறு மேஜையை நிரப்பிக் கிடந்த பொருட்களைக் காட்டினான் - அப்புடவைப் பெட்டி களையும், வெல்வெட் நகை டப்பாக்களையும் நம்ப முடி யாமல் பார்த்தாள் -

''நம் கல்யாண ஒப்பந்தத்திற்கான அச்சாரம்...''

அவன் குனிந்து பேச, அவளது பிடரி குறுகுறுத்தது - விலகினாள்.

''இதற்கெல்லாம் அவசியமே இல்லை மதன்..''



அவனது புன்னகை உறைந்து, பிறகு மறைந்தது.

''அன்றைக்குத் தந்ததைத் தந்தாலே போதும்..'' அவளது உள்ளங்கை நீண்டது.

இரண்டு கைகளையும் அள்ளி தன் கன்னங்களில் பதித்தவன், பின் தன் உதடுகளை அவற்றில் ஆனந்தமும் அவசரமுமாய் அழுத்தினான் -

அவள் கைகளைத் தன் தோளிற்கு மாலையாய் இட்டவன்,

''அன்று இதை தண்டனைன்னு உண்மையிலேயே நினைச்சியா மஹதி?''

''ம்ம்..?? உண்மையாய்... நான் சொன்னது பொய்!''

இருவரும் வாய் விட்டு சிரிக்க, அத்தனை குழப்ப நோய்களும் அவர்களை விட்டு விலகின -

அந்நேரம் மன்மதனே அந்த காதல்களின் முன்பு மண்டியிட்டிருந்தான்...